பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 09 செவ்வாய்க்கிழமை (23.03.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 117

## மக்களின் சுதந்திரமான போக்குவரத்துக்கு வசதியாக

# தெல்லிப்பழை சோதனைச் சாவடியை முற்றாகப் பின்நகர்த்த நடவடிக்கை

### பிரதம நீதியரசர் இராணுவத் தளபதியை அறிவுறுத்துவார்



யாழ்ப்பாணம், மார்ச் 23

வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள வணக்க ஸ்தலங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் ஆகியவற்றுக்கு பொதுமக்கள், நோயாளிகள், மாணவர்கள் சுதந்திரமாகச் சென்று வருவதற்கு வசதியாக தெல்லிப்பழைச் சந்தியில் உள்ள இராணுவ சோதனைச் சாவடியை பின் நகர்த்துவதற்கு இராணுவத் தளபதிக்கு பணிப்புரை விடுக்கப்படும் -என்று பிரதம நீதியரசர் அசோக டி சில்வா உறுதி அளித்துள்ளார். (23 ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி கலந்துகொண்ட கூட்டத்தில் கூக்குரல் சம்பவம் குறித்து விசாரணை

கொழும்பு, மார்ச் 23

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்ட தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கூக்குரல் எழுப்பப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கண்டி கெட்டம்பே மைதானத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் கண்டி மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கிடையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

(24 ஆம் பக்கம் பார்க்க)

# சிரச தொலைக்காட்சி அலுவலகம் மீது குண்டர்கள் கோஷ்டி தாக்குதல்!

### மேர்வின் ஆதரவாளர்கள் மீது சந்தேகம்

கொழும்பு, மார்ச் 23

கொழும்பு கொம்பனித்தெரு பிறேபுருக் பிளேஸிலுள்ள தொலைக்காட்சி சிரச வலையமைப்பின் அலுவலகம் மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் அந்த அலுவலகத்துக்குப் பலத்த சேதம் ஏற்பட்டது.

கங்காராம பகுதியிலிருந்து குறிப்பிட்ட அலுவலகத்தை நோக்கி வந்த சுமார் 50 பேர் கொண்ட கோஷ்டி ஒன்று கற்களை வீசி எறிந்து தாக்குதலை நடத்தியது என்று தெரிவிக்கப்படுகிறது. சிரச தொலைக்காட்சி

(24 ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச் சுடர்

உள்ளே

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான அரசியல் விஞ்ஞான மூலத்துவங்கள் மாதிரி வினாத்தாள்

நாளை

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான சேதன இரசாயனவியல் மாதிரி வினாத்தாள்

### தபால் மூல வாக்களிப்புக்கென 3,000 கண்காணிப்பாளர்கள்

கொழும்பு, மார்ச் 23

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பின் போது கண்காணிப்பு நடவடிக்கையில் சுமார் மூவாயிரம் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 25 ஆம் 26 ஆம் திகதிகளில்

(24 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசிய ஒற்றுமைக்கு ஆபத்தாம்!

### அதன் தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து அரச தரப்பில் கருத்து

கொழும்பு, மார்ச் 23

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனம், தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்குப் பலம் சேர்க்காது என்றும் தேசிய ஒற்றுமைக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடியது என்றும் அரசு தெரிவித்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவை ஆதரிப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொன்சேகாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் அடங்கிய விடயங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அடங்கியுள்ளன என்றும் அரசு கூறியது.

(24 ஆம் பக்கம் பார்க்க)

### தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்ட 158 பேரைத் தேடி பொலிஸார் வலைவிரிப்பு!

கொழும்பு, மார்ச் 23

தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்ட பின்னர் தலைமறைவாகியுள்ள 158 சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்குப் பொலிஸார் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் உதவியைக் கோரியுள்ளனர்.

தேர்தல் நடவடிக்கைகளுக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண இதனைத் தெரிவித்துள்ளார்.

(24 ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதியின் யாழ்.விஜயம் ஒத்திவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 23

தேர்தல் பிரசாரத்துக்காக இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விஜயம் மாத இறுதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அடுத்தடுத்துத் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டதால் ஜனாதிபதி சுகயீனமடைந்திருப்பதால் யாழ்ப்பாணத்துக்கான அவரது விஜயம் பிற்போடப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அநேகமாக இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாத முற்பகுதியில் ஜனாதிபதியின் யாழ்.விஜயம் இடம் பெறும் என்றும் மேலும் அந்த வட்டாரங்கள் கூறின.

(அ-1)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் தூய்மையைப் பேண ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச் 23

சரித்திரப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தின் தூய்மையைப் பேணு வதற்குரிய சில கட்டுப்பாட்டு நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அண்மைக்காலத்தில் ஆலயத்தைத் தரிசிக்கவரும் மக்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது. குறிப் பாக தென்பகுதியில் இருந்து வரும் சுற்று லாப்பயணிகள் ஆலயத்தை பார்வை யிட்டு தரிசித்துச் செல்வதற்கு அங்கு கூட்டம் கூட்டமாக படையெடுத்து வரு கின்றனர். இந்த நிலைமையைக் கருத்தில் எடுத்து ஆலயத்தின் தூய்மையைப் பேணு வதற்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டுள்ளன.

அதன்படி ஆலயத்திற்கு உள்ளே சென்று வழிபடுவதற்குரிய புதிய நேர அட்ட வணை வெளியிடப்பட்டுள்ளது. வெள்ளிக் கிழமைகளில் பக்தர்களின் வசதிகருதி பொலிஸார் காவற்கடமைகளில் ஈடுபடுத் தப்பட்டுள்ளனர்.

ஆலயத்திற்கு உள்ளே வழிபடச் செல் லும் ஆண்கள் ஏற்கனவே நடைமுறை யில் உள்ளவாறு தமது மேலாடைகளைக் கழற்றி விட்டே செல்ல அனுமதிக் கப்படுவர். ஆல யத்திற்கு முன்பாக வாகனங்களை நிறுத்துவது தடை செய்யப்பட் டுள்ளது. அதற்காக அங்கே பாதுகாப்பு வேலி போடப் பட்டுள்ளது. அத னைவிட பாதணிக ளுடன் ஆலயச்சுற் றாடலில் நடமா டுவதை தவிர்க்கு மாறும் அறிவிக்கப் பட்டுள்ளது.(ஒ-224)

# இன்று சர்வதேச காலநிலை தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

சர்வதேச காலநிலை தினம் இன்று உலகெங்கும் அனுஷ்டிக்கப்படுகிறது.

இதையொட்டி கொழும்பில் வளிமண் டலத் திணைக்களத்தில் அதன் பணிப் பாளர் நாயகம் நி.வி. சமரசிங்க தலைமை யில் விசேட நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இது தொடர்பாக திருநெல்வேலி வளி மண்டலவியல் அலுவலகப் பொறுப் பதிகாரி வே. புஸ் பநாதன் செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்துள்ளார்.

அதில் தெரிவிக் கப்பட்டுள்ளவை வருமாறு :-

காலநிலை மாற்ற மென்பது உலகளா விய ரீதியில் பொது வான பிரச்சினை யாகும். மனிதனால் ஏற்படுத் தப்பட்ட பச்சை வாயுக் களால் தொ டர்ந்து வளி மண்டல வெப்ப நிலை அதிகரித்துச் செல்லுகின் றது.

இதன் காரண மாக, காலநிலை மாற்றமானது அபா யகரமான நிலைக்கு இட்டுச் செல்லப் படுகின்றது. எனவே எதிர்காலத்தில் ஜீவராசிகள், உல கத்தில் உயிர் வாழ் தல் என்பது கேள்விக் குரியதாக இருக்கப்போகின்றது. மனிதன் உயிர் வாழ்வதற்கு தூய நீர், தூய காற்று, உணவு என்பன இன்றியமையாதனவாகும். இவை யாவும் எதிர்காலத்தில் மிகவும் வேக மாகக் குறைவடைய வாய்ப்புள்ளது. எனவே அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் யாவும் ஒன்றுசேர்ந்து இப்பச்சை வாயுக்களின் வெளியேற்றத்தைக் குறைப்பதற்கு நடவ டிக்கைஎடுக்கவேண்டும்-என்றுள்ளது. (ஓ-1?)



## Deutsch, Dutch, French, Italian வகுப்புக்கள்

தூதரக விசா பரீட்சைகளுக்கான ஜேர்மன் டொச் (Deutsch), நெதர்லாந்து டச் (Dutch) மற்றும் இத்தாலியன் (Italian), பிரெஞ் (French) வகுப்புக்களின் புதிய பிரிவுகள் (New Batch) 27.03. 2010 எமது யாழ்.கிளையில் ஆரம்பமாகின்றன.

Vivekananda Academy,
(Centre for International Language Studies)
No. 3, 2nd lane, Palaly Road, Jaffna. [அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்] Tel:. 0774842464, 0213216928

ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் ஜேர்மன் Deutsch தூத ரக பரீட்சைக்கான புதிய பிரிவு (new batch) 27.03.2010 ஆரம் பமாகிறது. பதிவுகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின் றன. நெதர்லாந்து Dutch,french,italian வகுப்புக்களும் புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.

(C/565982)





யாழ்.வண்ணை நாச்சிமார் கோயிலடி

## ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையம் வருடாந்த விளையாட்டுப் போட்டி - 2010

போட்டிகளுக்கான அனுமதிக்கட்டணம்

| | | மேற்பிரிவு | கீழ்ப்பிரிவு |
|---|---|---|---|
| கரம் | ஒற்றையர் | 50/= | 30/= |
| | இரட்டையர் | 100/= | 60/= |
| பூப்பந்து | ஒற்றையர் | 50/= | 30/= |
| | இரட்டையர் | 100/= | 60/= |
| சதுரங்கம் | ஒற்றையர் | 50/= | 30/= |
| டாம் | ஒற்றையர் | 50/= | 30/= |

இருபாலாரும்விண்ணப்பிக்கலாம்

குறிப்பு: கீழ்ப்பிரிவு 16 வயதிற்கு உட்பட்டோர் விண்ணப்ப முடிவு திகதி 26.03.2010 பதிவுகள்நிலையத்தில்மேற்கொள்ளப்படும். போட்டி விவரங்கள் 27.03.2010 (சனி) நிலையத்தில் பார்வையிடலாம்.

நிர்வாகம்.



# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தையா ஜானகி அம்மா



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், தொல் புரம் கிழக்கு, வழக்கம்பரையை வதிவிட மாகவும் கொண்ட திருமதி கந்தையா ஜானகி அம்மா நேற்று (22.03.2010) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா கந் தையாவின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான நாகலிங்கம் - இராசம்மா தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்ற வர்களான செல்லையா - விசாலாட்சியின் மருமகளும், காலஞ் சென்றவர்களான குணரத்தினம், அன்னம்மா ஆகியோரின் மைத் துனியும், காலஞ்சென்ற சிவஞானபூங்கோதை மற்றும் பாலச்சந் திரன் (இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்), இராமச்சந்திரன் (அல்வாய்), காலஞ்சென்ற வசந்தாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், காராளசிங்கம் (இலங்கை மின்சாரசபை,சுன்னாகம்), தனலட்சுமி (வவுனியா), தனலட்சுமி (அல்வாய்), காலஞ்சென்ற பொன்னம்பலம் (இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்) ஆகி யோரின் அன்புநிறை மாமியும், காலஞ்சென்ற சிறிகரன் மற்றும் பாமினி, வசந்தன் - தர்மினி, வசந்தினி - சிறிகாந்தா (பிரதேசசபை, மானிப்பாய்), சந்திரிகா, ரவிக்குமார், கிருபாயினி, பாஸ்கரன், சுபாயினி - பத்மகுமரன் (ஆசிரியர், கலைமகள் மகாவித்தியாலயம், நெளுக்குளம், வவுனியா), சுகந்தன், சுகுமாரன், றோசலீன் (வவு னியா), பிரபாசன், சயந்தன் - ஜெயகௌரி (வழக்கம்பரை), ஜெயரூபன் - லோசினி (அல்வாய்), ஜெயதர்சினி - கபில்ராஜ் (ப.நோ.கூ.சங்கம், கட்டைவேலி, நெல்லியடி), சிறிகாந்தன் - இந்திரா ஆகியோரின் பேர்த்தியும், லோஜினி, கயனி, சங்கவி, வேனுசாந், ஜெயகாந், சோபிதா, ஆதவா, பாருகன், விதுன், தனோஜன், பிரவினா, துயிந்தன், நவிந்தன், பிருந்திகா, தனுல வன், கபிலாஜ், விதுலவன், கேனுயா, கவின்ஞ்சன், கவின்ஞ்சிகா, ஜெனிபன், ஜெனுசன், திருமாலவன், அபிசன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2010) செவ் வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொல்புரம் கிழக்கு,
வழக்கம்பரை,
சுழிபுரம்.

தகவல்
முத்துக்குமாரசுவாமி, பாஸ்கரன் குடும்பத்தினர்,
மகன் க. பாலச்சந்திரன்.

(95807)

## திருமதி கிருஸ்ணபிள்ளை சிவக்கொழுந்து

புலோலி மேற்கு,தம்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியில் வசித்து வந்தவருமான திருமதி கிருஸ்ணபிள்ளை சிவக்கொழுந்து நேற்று (22.03.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பர்-சின்னப் பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், வராத்துப்பளையில் வசித்துவந்த காலஞ்சென்ற தம்பு கிருஸ்ணபிள்ளையின் அன்பு மனைவியும், பாலச்சந்திரன் (கிராம அலுவலர், கெருடா வில் கிழக்கு), பாலசரஸ்வதி, நவநீதகிருஸ்ணன் (தபால் ஊழியர், அல்வாய்), அரவிந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இமையாணன் மேற்கு உடுப்பிட்டியிலுள்ள மகன் பாலச்சந்திரனின் இல்லத்தில் இன்று (23.03.2010) செவ்வாய்க்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.30மணியளவில் வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெள்ளை றோட்,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

தகவல்
கி.பாலச்சந்திரன்
(கிராம அலுவலர்)

# படையினர் ஒத்துழைப்புடன் இல்ல மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 23

எழுதுமட்டுவாழ் அரசினர் தமிழ் கல வன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி யாழ். பாதுகாப் புப் படைகளின் தளபதி மேஜர். ஜெனரல். எம். ஹத்துறுசிங்கவின் ஆலோசனையின் பேரில் 522ஆவது படைப்பிரிவின் ஒத்துழைப்புடன் அண்மையில் நடை பெற்றது.

இந்த மெய்வன்மைப் போட்டியில் பிர தம விருந்தினராக யாழ் பாதுகாப்புப் படை களின் தளபதியைப் பிரதிநிதித்துவப்படுத்தி 522ஆவது படைப்பிரிவின் தளபதி மற் றும் தளபதிகள், கல்வியுடன் தொடர் புடையவர்கள், ஆசிரியர்கள், கிராம சேவையாளர்கள், பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

போட்டிகளில் வெற்றியீட்டிய வீரர் களுக்குப் பரிசில்கள், கிண்ணங்கள், சான்றிதழ்களை 512, 522 மற்றும் 524 ஆகிய படைப்பிரிவுகளின் தளபதிகள் வழங்கிக் கௌரவித்தனர். (ஓ-10)

# துன்னாலையில் அந்தியேட்டி மடம்

வடமராட்சி, மார்ச் 23

துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த மக் கள் அந்தியேட்டிக் கிரியைகளை மேற் கொள்ள வசதியாக, துன்னாலை வடக்கு இந்திரன் அம்மன் கோவிலடியில் அந்தி யேட்டி மடம் ஒன்று கட்டி முடிக்கப்பட் டுள்ளது.

துன்னாலை வடக்கு மிசன் வீதியைச் சேர்ந்த அமரர் திருமதி நாகம்மா சுப்பிர மணியம் நினைவாக அவரது குடும்பத்தின ரால் அந்தியேட்டி மடம் கட்டப்பட்டுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி வியாழக் கிழமை அன்னாரின் அந்தியேட்டிக் கிரி யையுடன் ஆரம்பிக்கும் இந்த மடத்தை ஏனையோரும் கிரியைகளுக்கப் பயன் படுத்தலாம்என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-236)

# அரியாலையில் வீதி புனரமைப்பு

கொழும்புத்துறை, மார்ச் 23

அரியாலை சின்னக்கிணற்றடி வீதி நீண்டகாலத்தின் பின்னர் செப்பனிடப் பட்டுள்ளது.

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாகத் திருத்தம் ஏதும் செய்யப்படா மல் காணப்பட்ட இவ்வீதியைப் புனர மைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். அதையடுத்து யாழ். மாநகர சபையினால் இவ் வீதி செப் பனிடப்பட்டுள்ளது.

[illegible] மேற்கொள்ள முடிவதாக இப்பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். (ஓ-க-135)

# அந்தியேட்டி அழைப்பு



## பொன்னம்பலம் சரவணமுத்து

கடந்த 21.02.2010 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டி நிகழ்வு இன்று செவ் வாய்க்கிழமை (23.03.2010) நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவ ரையும் அன்புடன் அழைக்கின்றோம். (இந்த அழைப் பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள் ளுகின்றோம்)

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்



## மலிவு விற்பனை

யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு சிறந்த கோட், சூட் வகைகள் மலிவான விலையில் விற்ப னைக்குண்டு. மற்றும் வாடகைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: JUKI, HARA, MACHINES மெசின் மற்றும் மெசின் உதிரிப்பாகங்கள்,தையல் உபகரணங்கள்,நூல் வகைகள் அனைத்தும் மொத்தமாகவும் சில்லறையாகவும் கொழும்பு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**சிற்றிஷன் போய்ஸ் செலக்சன் அன் ரெயிலர்**

கிளை:
இல.302, பலாலி வீதி,
ஆலடிச்சந்தி,திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

இல.01.பெரியகடைவீதி,
யாழ்ப்பாணம்
தொ.பே.இல.0776143301



# கண்ணீர் காணிக்கை




யாழ்.கோண்டாவில் இந்துமகாவித்தியாலய பழைய மாணவர் சங்க உறுப்பினரும்,மேற்படி பாடசாலை ஆசிரியையுமான திருமதி ரதிரஞ்சிதம் பகீரதன் அவர்களின் அன்புத் தந்தை

## முருகேசு கந்தையா

அவர்களின் மறைவுச் செய்தி நம்மை எல்லாம் துயருற வைத்தது. அன்னாரின் ஆத்மா சாந்தி வேண்டி கடவுளை இறைஞ்சுகின்றோம். அவர்தம் குடும்ப உறவுகளின் துயரில் எம்மையும் இணைத்துக் கொள்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யாழ்.கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியையும், இந்து மன்றப் பொருளாளருமான திருமதி ரஞ்சிதம் பகீரதன் அவர்களின் பாசமிகு தந்தை

## முருகேசு கந்தையா

அவர்கள் அமரரான செய்தியறிந்து துயருறுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப் பதோடு எமது பாடசாலை வளர்ச்சியில் கருத்துடன் இருக்கும் அவர் தம் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், நலன்புரி மன்றம்,
யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பொறுப்பான செயற்பாட்டை எதிர்பார்க்கலாமா....?

மேற்கு நாடுகளில் தஞ்சம் அடைந்து வாழும் ஈழத்தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படக்கூடிய ஆபத்து முகிழ்த்து வருவதாக அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இது குறித்த எச்சரிக்கையை, மொத்தத்தில் கவனயீர்ப்பை அமெரிக்கத் தமிழர் செயற்பாட்டுக் குழு முன்னெடுத்துள்ளது.

இலங்கையில் மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற போரை அரசாங்கம் முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டது. அதனால் இலங்கையில் பூரண அமைதியும் சமாதானமும் உண்டாகிவிட்டதாக வெளியுலகத்தை நம்ப வைக்கும் 'ராஜ'தந்திரப் பிரசித்தம் தடல்புடலாக நடைபெற்று வருகிறது.

இத்தகைய ஒரு சூழலில் - பின்னணியில் - ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான தூதரகம் (யு.என்.எச்.சி. ஆர்) மேலைநாடுகளில் தஞ்சம் அடைந்த ஈழத்தமிழர்களையும் அரசாங்கத்துக்கு எதிரான மாற்றுக் கருத்துடைய சிங்களவர்களையும் திருப்பி அனுப்புவதற்கு ஏதுவான ஒரு நிலைப்பாட்டுக்கு வரக் கூடும் என்று அமெரிக்கத் தமிழர் செயற்பாட்டுக் குழு அச்சம் தெரிவித்திருக்கிறது.

அகதிகளைப் பாதுகாப்பதற்கான வழிகாட்டல்களில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு, அவற்றைப் புதுப்பிப்பதற்கு யு.என்.எச்.சி.ஆர். உத்தேசித்து வருவதாக தகவல்கள் கசித்துள்ளதாக அமெரிக்கத் தமிழர் செயற்பாட்டுக் குழு தனது அறிக்கையில் பிரஸ்தாபித்துள்து.

அகதிகளை ''அளந்து'' கொள்வதற்காக யு.என்.எச்.சி.ஆர். இலங்கையின் தற்போதைய சூழ்நிலையை மேலோட்டமாகக் கணித்து மதிப்பீடு செய்து, அகதிகளுக்கான அடிப்படைப் பிரமாணங்களை மாற்றி அமைத்தால், புதுப்பித்தால் அதனால் மேலைநாடுகளில் தஞ்சம் அடைந்துள்ள ஈழத்தமிழர்கள் மட்டுமன்றி, அரசாங்கத்துக்கு எதிரான மாற்றுக் கருத்துள்ள சிங்கள மக்களும் கூடப் பாதிக்கப்படுவர் என்று அமெரிக்கத் தமிழர் செயற்பாட்டுக் குழு வெளிச்சம் போட்டுக் காட்டி உள்ளது. உத்தேச புதிய பிரமாணங்களின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தரப்பினர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டால் சித்திரவதையையும், ஏன் மரணத்தையும் கூட எதிர்நோக்க நேரிடலாம் என்று அமெரிக்கத் தமிழர் செயற்பாட்டுக் குழு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

அமெரிக்காவின் ராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள 2009ஆம் ஆண்டுக்குரிய மனித உரிமைகள் அறிக்கை, இலங்கையில் நிலவும் சூழலை வெகு தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் அமெரிக்கத் தமிழர் செயற்பாட்டுக் குழு எடுத்தியம்பியுள்ளது.

யுத்தம் நடைபெற்ற பகுதிகளுக்கு அப்பால் உள்ள பிரதேசங்களில் காணாமற்போதல், படுகொலைகள், துணை இராணுவக் குழுக்களினால் மேற்கொள்ளப்படும் அரசியல் பழிவாங்கல் கொலைகள் அரசாங்கத்திற்குத் தெரிந்தோ அல்லது ஆசீர்வாதத்துடனோ நடைபெற்றன என்று அந்த அறிக்கையில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், பின்னணியில், அகதிகளைப் பாதுகாப்பதற்கான வழிகாட்டல்களையும் பிரமாணங்களையும் மேலெழுந்த வாரியாக மாற்றி அமைத்தால், மேற்கு நாடுகளில் தஞ்சம் அடைந்த தமிழர்கள், மிகக் குறிப்பாக இளைஞர்கள், யுவதிகள் இங்கு வந்து தமது உயிர்களைக் கூட இழக்க நேரிடும். சித்திரவதை மற்றும் கொடுமைகளை அனுபவிக்க நேரிடும். பொய்யான குற்றச்சாட்டுக்களின் பேரில் இளைஞர்கள் நீண்ட காலத்திற்குத் தடுத்துவைக்கப்படலாம்.

இத்தகைய ஒரு நிலைக்களனில், வெளிநாடுகளில் தஞ்சம் பெற்றுள்ள தமிழர்களுக்கும் மாற்றுக் கொள்கையுடைய சிங்களவருக்கும் அகதி அந்தஸ்தை வழங்குவதற்குப் புதிதாக நிர்ணயிப்பதற்கான சிபார்சுகளை, பிரமாணங்களை, வழிகாட்டுதல்களை வகுப்பதற்கு முன்னர், யு.என்.எச்.சி.ஆர். இலங்கை நிலைவரம் குறித்துச் சரி யான மதிப்பீட்டைச் செய்வது மிக முக்கியம்.

தமது சொந்த அதிகாரிகளைக் கொண்டு இப்போதைய நிலையைப் பூரணமாக, மிக ஆழமாக, அவசரப்படாமல் மதிப்பீடு செய்வதே நல்லது. அதன் பின்னர் உண்மை நிலையைப் பகுத்துணர்ந்து, வேண்டுமானால் புதிய வழிகாட்டுதல்களையும் பிரமாணங்களையும் வகுக்கலாம்.

மக்களின் மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட இந்த விவகாரத்தில் யு.என்.எச்.சி.ஆர். மனிதாபிமானத்துடன் செயற்படும் என நம்புகிறோம்.

அமெரிக்கத் தமிழர் செயற்பாட்டுக் கழகத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சம் நியாயமானது என்பதனை யு.என். எச்.சி.ஆர். மனித மாண்புடன் சீரமைக்கும் என்றும் எதிர்பார்க்கலாமா?

யு.என்.எச்.சி.ஆர். என்ற பெருவிருட்சம் இயற்கையினாலும், வெவ்வேறுநாட்டு அரசுகளினாலும் முறையே வாழ்வாதாரங்களையும் வாழ்வு உரிமைகளையும் இழந்து தவிக்கும் மக்களுக்கு நிழல்கொடுக்கும் நிறுவனம். ஆகையால் இது விடயத்தில் உலகளாவிய மட்டத்தில் செயற்படும் அந்த அமைப்பு அவசரப்படாமல், எடுப்பார் கைப்பிள்ளையாக மாறாமல் அதற்கு வேண்டிய நிதானத்துடன் செயற்படும் என்று நம்பலாமா?

# குடாநாட்டு நீதிமன்ற விசாரணைகளுக்கு தமிழ் தெரிந்த பொலிஸார் நியமிக்கப்படுவர்

## பொலிஸ்மா அதிபரை அறிவுறுத்துவேன் என்கிறார் பிரதம நீதியரசர்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல நீதிமன்றங்களிலும் விசாரணைகளின்போது தமிழில் தகவல் தெரிவிக்க வசதியாகத் தமிழ்ப் பொலிஸார் அல்லது தமிழில் பரீட்சையமுள்ள பொலிஸாரை நியமிக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தல் விடுக்க இருக்கிறேன்.

யாழ். மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரதம நீதியரசர் அசோகா டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகத்தை, யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த. விக்னராஜா சகிதம் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இப்படிக் கூறினார்.

குடாநாட்டில் சட்டம் ஒழுங்கு போன்றவை சீரழிந்த நிலையில் உள்ளதால், அவற்றைக் கட்டுப்படுத்த நீதிமன்றங்களில் பொலிஸ் நிலையங்களில் தமிழ்ப் பொலிஸாரை நியமிக்க வேண்டியதன் அவசியத்தை ஆயர் சுட்டிக்காட்டினார். இதற்குப் பதில் அளித்த பிரதம நீதியரசர் -

கொழும்பு திரும்பியதும் பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடி பின்வரும் விடயங்கள் தொடர்பாக அறிவுறுத்தல்களை விடுக்கவிருக்கிறேன்.

* சகல நீதிமன்ற நடவடிக்கைகளில் பங்குபற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமிழ் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் நீதிமன்றச் செயற்பாடுகள் தமிழில் இடம்பெற உதவ வேண்டும்.

* சகல பொலிஸ் நிலையங்களிலும் தமிழ் தெரிந்த பொலிஸார் நியமிக்கப்பட்டு தமிழில் முறைப்பாடுகளைப் பதிவு செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற பொலிஸ் மா அதிபரைக் கோருவேன் - என்றார்.

மல்லாகம், சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடங்களைத் துரிதமாகக் கட்டி முடிக்கவும், பருத்தித்துறை, கிளி நொச்சி நீதிமன்றக் கட்டடங்களை விரைந்து புனரமைத்து முடிக்கவும் ஏற்பாடு செய்யப்படும் என்றும் அவர் கூறினார். (ஒ-1)

# கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் கொரியன் 'அக்குபஞ்சர்' சிகிச்சைகள்

வண்ணை, மார்ச் 23

எதிர்வரும் 30, 31,01ஆம் திகதிகளில் கைதடி, அரச ஆயுள்வேத போதனா வைத்தியசாலையில் கொரியன் அக்குபஞ்சர் சிகிச்சைகள் நடைபெற இருப்பதாக வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி பிரேமா சிவசண்முகராஜா தெரிவித்தார்.

காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை கொழும்பில் இருந்து வருகை தரும் கொரியன் அக்குபஞ்சர் சிகிச்சை நிபுணர்கள் மேற்படி வைத்திய சேவையைச் செய்யவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

மூட்டுவலி, கைகால் விறைப்பு, தலைவலி, உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, உடல் அழற்சி, விக்கல், இளைப்பு (ஆஸ்மா), நடுக்கம் (பாக்கின் கோனியம்), சர்மநோய், வெண்குஷ்டம், மலச்சிக்கல், ஆண்மைக் குறைவு, புகைப்பிடித்தல் போன்ற இன்னோரன்ன வியாதிகளுக்கு அக்குபஞ்சர் மூலம் நிவாரணம் வழங்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-160)

# நல்லூரில் நடந்த தாக்குதல் சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்.23

செங்குத்தா இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற தாக்குதல் சம்பவமொன்றில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் அங்கு மரணமானார். நல்லூர் வைமன் வீதியைச் சேர்ந்த வெளிவாரி பட்டப்படிப்பு கல்லூரி மாணவனான கிறிஸ்தோபர் பிறேமன் (வயது20) என்பவரே மரணமானவர் ஆவார்.

பிரஸ்தாப இளைஞர் கல்லூரி மைதானத்தில் நண்பர்களுடன் கிரிகெட் விளையாடிக்கொண்டிருந்த போது திடீரென அங்கு வந்த ஒரு குழுவினர் தாக்குதலை மேற்கொண்டனர் என்றும் படுகாயடைந்த அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஐந்து பேர் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து அவர்களில் மூவர் எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-சி-135)

# முருகேசு சுவாமிகளின் குரு பூஜை தினம்

வடமராட்சி,மார்ச்.23

தவத்திரு வே.முருகேசு சுவாமிகளின் 13ஆம் ஆண்டு குருபூஜை தினம் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இக் குருபூசையை ஒட்டி தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி கோவிலில் விசேட அபிஷேக பூசை வழிபாடுகள் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆ.அருணாசலம் தலைமையில் நடைபெறும் விசேட நிகழ்வுகளில் கவிமணி க.ஆனந்தராசா குருவாய் அருள்வான் என்னும் தலைப்பில் பக்க வாத்தியங்கள் சகிதம் சிறப்பு இசைச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.அதனைத் தொர்டர்ந்து அறுபத்து மூவர் குருபூசையும் மகேஸ்வர பூசையும் நடைபெறும். (50.236)

# வடமாகாண உள்ளூராட்சி நூலகங்களின் பணியாளர்கள் ஒன்றியம் அங்குரார்ப்பணம்

சுன்னாகம், மார்ச் 23

வடமாகாண உள்ளூராட்சி நூலகப் பணியாளர் ஒன்றியமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பொது நூலக கேட்போர் கூட்டத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்துக்கு யாழ். பொது நூலக பிரதம நூலகர் ச.தனபாலசிங்கம் தலைமை வகிப்பார்.

வடக்கு - கிழக்கு நூலகப் பணியாளர் ஒன்றியம் என்ற பெயரில் அமைப்பு ஒன்று இயங்கி வந்ததாகவும் - வடக்கு கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த ஒன்றியமும் செயலற்றுப் போனதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புதிதாக அமைக்கப்படும் இத் தொழிற் சங்க அமைப்பின் மூலம் நூலகப் பணியாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவும், கடமை நேரம், ஓய்வுதினங்கள் போன்றவற்றில் காணப்படும் முரண்பாடுகளை நீக்குவதற்கும் வாய்ப்புகள் ஏற்படு மென அமைப்புக் குழுவைச் சேர்ந்த சுன்னாகம் பொது நூலகர் க.சௌந்தரராஜன் தெரிவித்தார். (50-38)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 10 | 24.03.2010 |
| | புதன்கிழமை |
| திதி: | நவமி |
| | மு.இ. 10.13 வரை |
| நட்சத்திரம்: | திருவாதிரை |
| | [illegible] வரை |
| [illegible]: | [illegible] வரை |
| ராகுகாலம்: | 12.16 -01.46 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை முதலாம் தவணை ஏப்ரல் 6 இல் நிறைவு பெறும்

யாழ்ப்பாணம், மார்ச்,23

அரச,அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் முதலாம் தவணை ஏப்ரல் 6 ஆம் திகதியுடன் நிறைவு பெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

ஏப்ரல் 8ஆம் திகதி நடைபெறவிருக்கும் நாடாளுமன்ற தேர்தல் காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டது எனவும் இரண்டாம் தவணை ஆரம்பிக்கப்படும் திகதியில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை எனவும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# தரம் 5 புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை

தென்மராட்சி.மார்ச் 23

தென்மராட்சிக் கல்வி வலயத்திலுள்ள தரம் 5இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பயிற்சியின் இரண்டாவது பரீட்சை நாளை புதன்கிழமையும், மூன்றாவது பரீட்சை எதிர்வரும் ஆறாம் திகதியும் நடைபெறும்.

இரண்டாவது பயிற்சிப் பரீட்சை வினாத்தாள் பொதிகளை இன்று செவ்வாய்க்கிழமை பி.ப வலயக்கல்விப் பணி மனையில் பெற்றுக்கொள்ளலாம் என்று ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தராசா அறிவித்துள்ளார். (ஒ)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் மகளிர் தின விழா

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையால் நடத்தப்படும் சர்வதேச மகளிர் தினவிழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சுன்னாகம் பொது நூலகத்தில் நடைபெறவுள்ளது.

வலி. தெற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி சுலோச்சனா முருகநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை மகப்பேற்று நிபுணர் ஜீ.பவானி சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற வங்கியாளர் திருமதி விமலா வதி ஜெயராசா, ஓய்வுபெற்ற நூலகர் திருமதி இரத்தி னேஸ்வரி பாலசிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர். (50-38)

# இந்து ஆலயங்கள்,இந்து நிறுவனங்கள் தொடர்பான விபரங்கள் சேகரிப்பு

இந்துசமயகலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இந்துசமய ஆலயங்கள், இந்து சமய நிறுவனங்கள் என்பவற்றின் விவரங்களை திணைக்கள இணையத்தளத்திற்கு தரவேற்றம் செய்து கொள்வதற்கு ஏதுவாக சேகரிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

அதற்கமைய பதிவுசெய்யப்பட்ட ஆலயங்களின் பதிவிலக்கம் ஆலயப் பெயர்,முகவரி,கிராமசேவையாளர்,பிரதேச செயலாளர் பிரிவுகள், மாவட்டம், தொலைபேசி இலக்கம்,தொலைநகல் இலக்கம்,மின்னஞ்சல் முகவரி, இணையத்தள முகவரி ஆகிய விவரங்களை 011-2552825 என்ற தொலைநகல் மூலமாக/hindudir@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாக மட்டும் உடனடியாகத் திணைக்களத்துக்குக் கிடைக் கத்தக்கதாக அனுப்பி வைக்குமாறு ஆலயங்களினதும் இந்துசமய நிறுவனங்களினதும் நிர்வாக சபையினருக்கும் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்திநாவுக்கரசன் அறிவித்துள்ளார். (50)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 21 | | 21 |
| ★ | | ★ |
| 04 | | 02 |
| ★ | | ★ |
| 1945 | | 2010 |



அமரர் **அப்பையா தெய்வேந்திரா** (காந்தி)
(தெய்வேந்திரா & Co உரிமையாளரும், பொதுக்கணக்காளரும், கணக்கு ஆய்வாளரும்)

வாழ்க்கையில் பல இன்னல்களைத் தாண்டி மகிழ்ச்சியாய் வாழ்ந்தாய்.
இடையில் சென்றுவிட்டாய்
நீ நடந்து சென்ற பாதையை நான் பார்த்தேன்
நான் நடந்து போகும் பாதையை யார் பார்ப்பார்
ஆசைக்கு ஒரு மாமன், அன்புக்கு ஒரு மாமன் என்றிருந்தாய்
வேதனையை தந்துவிட்டுச் சென்றுவிட்டாய்
வாழ்நாள் முழுக்கக் கவலையுடன் வாழ்கின்றேன்.

அன்பு மருமகள்:
சறோஜினிதேவி

பிரம்படி, கொக்குவில்.


# கொட்டாஞ்சேனையில் ஸ்ரீராம நவமி விழா

யாழ்ப்பாணம், மார்ச் 23

கொழும்பு, கொட்டாஞ்சேனை இல.188, புதுச்செட்டித் தெரு வில் அமைந்துள்ள ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயத்தில் ஸ்ரீராம நவமி விழா நாளை புதன் கிழமை கொண்டாடப் படவுள்ளது.

இராமபிரான் அவதரித்த இத்தினத்தில் மாலை 6மணி தொடக்கம் பகவா னுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள், கீர்த் தனைகள் நடைபெற்று அருட்பிரசாதம் வழங்கப்படவிருப்பதாக ஆலயத் தலைவர் அறிவித்துள்ளார். (க)


## தவறிவிட்டன

கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் என்னும் முகவரியுடைய சங்கரப்பிள்ளை நிமலன் என்பவரது தே.அ.அட்டை (791342481V), சாரதி அனுமதிப்பத்திரம், அலுவலக அ.அட்டை, காப்புறுதி, வரிப்பத்திரம் என்பன கடந்த 18.03. 2010 அன்று தபால் கட்டைச் சந்திக்கும், திருநெல்வேலிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

தொ.பே : 0776544467

யாழ்ப்பாண வணிகர் கழகம் நடத்தும்
## மாபெரும் வர்த்தக கண்காட்சி - 2010

அனைவரையும் கலந்துகொண்டு கண்காட்சியை பார்வையிடுவதற்கு விஷேட கழிவு விலையில் பொருள்களை கொள்முதல் செய்யும் சந்தர்ப்பத்தையும் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இடம்:
யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி
யாழ்.மத்திய கல்லூரி

காலம்:
27, 28, 29 மார்ச் 2010
(சனி, ஞாயிறு, திங்கள்)

மூன்று தினங்களும் மாலை 6.00 மணி தொடக்கம் 9.00 மணி வரை யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

அனுமதி இலவசம்

ஊடக அனுசரணை
உதயன்

## விற்பனைக்கு

| அளவு | விவரம் |
|---|---|
| 09 | c/c 41'-0" கொண்ட ஊசிக் கால் (Truss) 3"x2½"x¼" பரிமாணம் கொண்டது. உயரம் 6'6" |
| 1000 அடி | 3"x3"x¼" பரிமாணம் கொண்ட L கேடர் |
| 500 | தகரம் (G28) |
| 2500 | கொங்கிறீட் கல் (4") |
| 20 | fanlight (முதிரை) |
| 20 | யன்னல் (முதிரை) |
| 20 | நிலை (முதிரை) |

போன்றவற்றைப் பார்வையிட்டு தரகர்கள் மதிப்பீட்டைத் தருக.
தொடர்புகளுக்கு:
லக்சுமி திரையரங்கு, நெல்லியடி.
0772294985 (Manager)
0774555612 (T.O)

## Room for Rent

Rooms & Special package to small groups available within municipal limits. Call : 0775934168

## கார் வாடகைக்கு

திருமணத் தேவைகளுக்கான கார் வாடகைக்கு விடப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:
021 222 8984, 077 3747825,
077 6152992.

## காணி விற்பனைக்கு

சுழிபுரம், சத்தியக்காட்டுச் சந்தைப் பகுதியில் அமைதியான சூழலில் வீடு கட்டக்கூடிய கிணற்றுடன் கூடிய 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 0771891453



## நாடாளுமன்றத் தேர்தல் - 2010



யாழ்ப்பாண மாவட்டம்
இலங்கைத் தமிழரசுக் கட்சி
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)



ஈழத் தமிழர் வாழ்வு நிலைக்க தாயகக் கோட்பாடும், சுயநிர்ணய ஆட்சி நிர்வாகமும் வேண்டுமென கால் நூற்றாண்டுக்கு மேல் உறுதிபடக் கூறிய உத்தமன் எஸ். எக்ஸ். குலநாயகம்.

– பருத்தித்துறைத் தொகுதி வாக்காளர்கள்

12

இலங்கைத் தமிழரசுக் கட்சி X

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)
எஸ். எக்ஸ். குலநாயகம் 12

வடமாகாண மாணவர்களின் நலன் கருதி யாழ் நகரில் முதலாவது
## மாபெரும் சர்வதேச கல்வி கண்காட்சி
# JAFFNA EDUEXPO 2010
# யாழ் கல்விக்காட்சி 2010

பங்குனி 28, 29ம் திகதிகளில் (28th & 29th March)

**புனித.பத்திரிசியார் கல்லூரி வளாகத்தில்(St.Patrick's College)**


வடமாகாணத்தில் முதல்முறையாக UK, USA, Canada, Ukraine, Switzerland, India மற்றும் பல நாடுகளிலிருந்து 30க்கு மேற்பட்ட புகழ்பெற்ற பல்கலைக்கழக கல்லூரிகள் மற்றும் பல சர்வதேச பல்கலைக்கழகங்களின் உள்நாட்டு முகவர்களும் மற்றும் பல கல்விசார் நிபுணர்களும் கலந்து கொள்ளும் மாபெரும் சர்வதேச கல்விக்கண்காட்சி இதுவாகும் Medicine(MBBS), Engineering(Civil, Mechanical, Electrical/Electronics, Aeronautical, Marine ect.), IT/ICT, Management, Fashion Technology, Accountancy, Marketing, Law ஆகிய துறைகளில் உயர்கல்வியை தொடர்வதற்காக சகல வசதி வாய்ப்புகளையும் மற்றும் சலுகை அடிப்படையிலான விசேட கல்லூரி கட்டணங்களையும் மற்றும் பல புலமைபரிசில்களையும் பெறுவதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம்! மாணவர்களும், பெற்றோர்களும் சகல பல்கலைக்கழக பிரதிநிதிகளை நேரடியாக சந்தித்து உரையாடவும், தங்களுக்கு தேவையான சகல தகவல்களை பெற்றுக்கொள்ளவும் மேலும் உயர்கல்வியை தொடர்வதற்காக பதிவுசெய்து கொள்ளவும் ஓர் பொன்னான வாய்ப்பு.

A/L 2008, 2009 & 2010 வருட மாணவர்களுக்கு விசேட அழைப்பு

வாருங்கள்! பாருங்கள்! பயன்பெறுங்கள்! அனுமதி இலவசம்!

அனுமதி – கல்வி அமைச்சு இலங்கை
சக அனுசரனையாளர் – GCC Emphasis is on life – Garden City College Bangalore, India
பிரதம அனுசரனையாளர் – உதயன் – New Uthayan Publication (Pvt) Limited
பிரதம எற்பாட்டாளர் – cec – colombo exhibition center
சக எற்பாட்டாளர் – St. Patrick's College, Jaffna Alumni Association - Colombo Br.
சக அனுசரனையாளர் – SSM College of Engineering Salem, India
சக அனுசரனையாளர் – Enterprise Systems


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாநகரசபையின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று பிரதான வீதியில் உள்ள யாழ்.மாநகரசபை வளாகத்தில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் சமயக்கிரியைகளில் கலந்துகொள்வதையும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் அடிக்கல் நடுவதை முதல் மூன்று படங்களிலும் காணலாம்.

நிகழ்வில் கலந்துகொண்ட பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, வணிகர் கழகத்தலைவர் எஸ்.ஜெயசேகரம், மேலதிக கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் ஆகியோர் உட்பட நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சார்ய சுவாமிகள், யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, மௌலவி எம்.ஐ.மஹ்மூத், நாகவிகாராதிபதி சிறிவிமல தேரர் ஆகியோர் ஆசியுரை வழங்குவதையும் மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ உரையாற்றுவதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன், தமிழினியன்)

# சங்கானை ப.நோ.கூ.சங்கத்தின் ஊழியர்கள் 4 கோரிக்கைகளை முன்வைத்துப் பணிப்புறக்கணிப்பு

## சங்கத்தின் செயற்பாடுகளும் முற்றாகப் பாதிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 23

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடு பட்டமையால் சங்கத்தின் செயற்பாடுகள் அனைத்தும் முற்றாகச் செயலிழந்தன.

நான்கு முக்கிய கோரிக்கைகளை முன் வைத்தே தாம் இந்தப் பணிப்புறக்கணிப் பில் ஈடுபட்டதாகத் தொழிற்சங்கம் அறி வித்துள்ளது.

இது தொடர்பாகத் தொழிற்சங்கம் தலை வர் பணிப்பாளர்சபை உறுப்பினர்கள் ஆகியோருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள நான்கு கோரிக்கைகளும் வருமாறு:-

* சங்கத்தின் முக்கிய நோக்கம் நுகர்ச் சிப் பொருள்களை கொள்வனவு செய்து பாவனையாளர்களுக்கு சகாய விலையில் வழங்குவது ஆகும். அந்த நோக்கத்தை பூரணமாக நிறைவு செய்வதற்குப் பொருள் களைக் கொள்வனவு செய்து தரவேண் டியது தங்கள் பொறுப்பாகும்.

* பணிப்பாளர் சபை ஒழுங்காகக் கூடுவதில்லை. தீர்மானங்கள் ஒழுங்காக மேற்கொள்வதில்லை.ஒழுங்கான திட்ட மிடல் இல்லை. கொள்வனவு செய்ய முடிவதில்லை. கிளைகளில் விற்பனை இல்லை. இவற்றை தீர்ப்பதற்கு உடன் நட வடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.



* பெப்ரவரி மாதச் சம்பளம் இன்னமும் வழங்கப்படவில்லை. இச்சம்பளத்தினை உடன் வழங்கவேண்டும். அத்துடன் சங கப்பணியாளர்களின் சம்பளம் அந்த மாத முடிவுக்கு முன் வழங்க நடவடிக்கை எடுக் கப்படல் வேண்டும்.

* மேலே கூறிய மூன்று தீர்மானங் களை நிறைவு செய்வதற்கு 22.03.2010 திங்கட்கிழமைக்கு முன் சங்கம் உடனடி யாக சாதகமான முயற்சிகளை எடுக்காத மையால் நாம் தொழிற்சங்க நடவடிக்கை யில் தொடர்ந்து ஈடுபட நேரிடும்.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப் பாண கூட்டுறவுத் திணைக்கள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (அபி விருத்தி), வலி.மேற்குப் பிரதேச செயலர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட் டுள்ளன. (50-14-93-112-224)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# நெல்லியடி கொமர்ஷல் வங்கிக் கிளையில் விரைவில் தங்கநகை அடகுச் சேவை

## புதிய கட்டடத் திறப்பு விழாவில் உதவிப் பொது முகாமையாளர் தகவல்

வடமராட்சி, மார்ச் 23

வடமராட்சிப் பிரதேசத்தில் வாழும் மக்களின் வசதி கருதி நெல்லியடி கொமர் ஷல் வங்கிக்கிளையில் விரைவில் தங்க நகை அடகுச் சேவை ஆரம்பிக்கப்படும் என கொமர்ஷல் வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் எஸ்.சந்தனகுணசேகர தெரிவித்தார்.

நெல்லியடி கொமர்ஷல் வங்கிக் கிளைக் கான அவ்வங்கியின் பாரம்பரிய வடிவத் தில் நெல்லியடி பிரதான வீதியில் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட புதியகட்டடத்தை நேற் றையதினம் (திங்கள்) அவர் திறந்துவைத்தார்.

நெல்லியடி கொமர்ஷல் வங்கிக்கிளை முகாமையாளர் எஸ்.கே.குணசிங்கம் தலை மையில் நடைபெற்ற இத்திறப்புவிழா வில் கொமர்ஷல் வங்கியின் பிராந்திய முகாமையாளர் ஆர்.இராஜசூரியா சிரேஷ்ட முகாமையாளர் பி.ரஜிவன், கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் ஆகி யோர் மங்கள விளக்கேற்றினர்.

உதவிப் பொது முகாமையாளர் எஸ்.சந் தனகுணசேகரா மேலும் பேசுகையில் கூறியவை வருமாறு:-

கடந்த 2003 ஆம் ஆண்டு நெல்லி யடியில் ஆரம்பிக்கப்பட்ட கொமர்ஷல் வங்கிக்கிளை 6 வருடங்களாக மிகச்சிறப் பாக சேவையாற்றி வடமராட்சிப் பிரதேச மக்களின் உள்ளங்களைக்கொள்ளை கொண்டு வீறு நடைபோட்டுவருகிறது. இளையதலைமுறையினர் இவ்வங்கியில் இணைந்து வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கிவருகின்றனர். மிக விரைவில் இக் கிளை ஊடாக தங்க நகை அடகு சேவை ஆரம்பிக்கப்படும்.

இலங்கையின் சிறந்த வங்கியாக 11 ஆண்டுகளாக மிளிர்ந்துகொண்டிருக்கும் கொமர்ஷல் வங்கி தனது சேவையை தொடர்ந்து முன்னெடுக்கும் - என்றார்.

இவ்வங்கிக்கிளை ஆரம்பகாலம் தொடக் கம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதியில் இயங்கிவந்தது. தற்போது புதிய இடத்தில், புதிய [illegible] நேற்று முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. (50-236)

# மண்டைதீவுப் பிரதேசத்துக்கு இதுவரை மின் விநியோகம் வழங்கப்படவில்லை

## பொதுமக்கள் தரப்பில் விசனம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

மண்டைதீவுப் பிரதேசத்துக்கு இதுவரை மின்சார விநியோகம் வழங்கப்படாமை குறித்து அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள் ளனர்.

இப்பகுதிக்கு மின் விநியோகம் மேற்கொள் வதற்காக மின்கம்பங்கள் நாட்டப்பட்டு மின் சாரக்கேபிள்களும் இணைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிக்கான மின் விநியோ கத்தை மேற்கொள்வதில் தாமதம் ஏற்படு வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இப்பகுதிக்கான மின் விநி யோகத்தை விரைவில் வழங்கி உதவுமாறு அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்டவர்களி டம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (50-224)

# வீதி விளக்குகள் ஒளிராமையால் இரவில் மக்கள் அவதி

கொழும்புத்துறை,மார்ச் 23

கொழும்புத்துறைப் பகுதியில் அண்மை யில் பொருத்தப்பட்ட வீதி விளக்குகள் பெரும்பாலானவை இரவில் ஒளிர்வதில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இரவு நேரங்களில் இருளில் நடமாட வேண்டியுள்ளதாகவும் விபத்துக்களை எதிர்நோக்குவதாகவும் கூறப்படுகின்றது.

சில வீதி விளக்குகள் தொடர்ந்து இரவு பகலாக ஒளிர்ந்து கொண்டிருப்பதால் மின்சாரம் வீண் விரயமாவதாக சமூக ஆர் வலர்கள் தெரிவிக்கின்றனர். (50-135)

## வீதி விபத்தில் குடும்பஸ்தர் படுகாயம்

கொழும்புத்துறை,மார்ச் 23

'சைக்கிள்- லான்ட் மாஸ்ரர்' விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

அரியாலை, கண்டிவீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இவ்வீதி விபத்தில் நான்கு பிள்ளைகளின் தந்தையான கொழும் புத்துறையைச் சேர்ந்த அ.டயஸ் என்பவரே படுகாயமடைந்தவராவார். ஏ-9 வீதியில் அண் மைக்காலமாக விபத்துக்கள் அதிகரித்து வரு வதாகப் பாதசாரிகள் தெரிவிக்கின்றனர். (50-135)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் தனித்துவமான இறைமையை வலியுறுத்தும் இரு தேசங்களின் கூட்டான ஒரு நாடு

## நடைமுறைச் சாத்தியமான எமது கோட்பாடு இதுவே

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி தமிழர்களின் தனித்துவமான இறைமையை வலியுறுத்தும் இரு தேசங்களின் கூட்டான ஒரு நாடு என்கின்ற ஒரு நடைமுறைச் சாத்தியமான கோட்பாட்டை முன்வைக்கின்றது. இதனையே இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டமாக எமது முன்னணி முன்வைக்கின்றது.

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான மக்கள் முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் கடந்த 19ஆம் திகதி திருகோணமலையில் வைத்து அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெளியிட்டார்.

அந்த விஞ்ஞானபனத்தில் மேற்கண்ட கோட்பாடு குறித்து விவரிக்கப்பட்டுள்ளது. அந்த விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

## அபிவிருத்திப் பணிகளுக்கும் பொருண்மிய மேம்பாட்டுக்கும் புலம்பெயர் உறவுகளின் பங்களிப்பைப் பெறுவோம்

அன்புக்குரிய தமிழ் பேசும் சகோதர, சகோதரிகளே!

தமிழ்த் தேசிய இனம் வரலாற்றுக் காலத்திலிருந்து இலங்கைத்தீவில் தனக்கெனத் தனியானதோர் தாயகத்தையும் அதில் இறைமையையும் ஆட்சி உரிமையையும் தன்வசம் கொண்டிருந்தது. ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்களிடம் முதலில் தனது இறைமையை இழந்தது. பின்னர் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1833 இல் முழு இலங்கைத்தீவும் ஒரே அரசியல் நிர்வாகக் கட்டமைப்புக்குள் கொண்டுவரப்பட்டு தமிழ்த் தேசிய இனத்தின் அங்கீகாரமின்றி ஆங்கிலேய மேலாதிக்கத்தால் தமிழர் தாயகம் சிங்கள தேசத்துடன் ஒன்றிணைக்கப்பட்டது.

பின்னர் 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதியில் இருந்து சிங்கள தேசத்தின் தயவில் தமிழ்த் தேசிய இனத்தின் தலைவிதி தங்கியிருக்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டது.

1957ஆம் ஆண்டில் இருந்து காலத்திற்குக் காலம் தமிழ்த் தலைவர்கள் சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களுடன் செய்துகொண்ட அரசியல் ஒப்பந்தங்களும் கிழித்தெறியப்பட்டன. சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட நிலப்பறிப்பு, குடியுரிமைப் பறிப்பு, வாக்குரிமைப் பறிப்பு, மொழியுரிமைப் பறிப்பு, மற்றும் கல்வி, தொழில், பண்பாடு போன்றவற்றில் ஏற்படுத்தப்பட்ட இனரீதியான பாரபட்ச நடவடிக்கைகள் ஆகியவற்றினால் தமிழ் இனத்தின் தனித்துவத்திற்கும் வாழ்விற்கும் விடுக்கப்பட்ட இன அழிப்பு அச்சுறுத்தலின் விளைவாக எமது தாயகத்தில் எமது விவகாரங்களை நாமே தீர்மானிக்கவேண்டும் என்ற தீர்மானத்தின் அடிப்படையில் தமிழ் இனத்தின் சார்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் முன்னெடுக்கப்பட்ட அகிம்சை வழிப் போராட்டங்கள் சிங்கள அரசுகளினால் ஆயுதமுனையில் அடக்கப்பட்டன.

பாதுகாப்பற்ற தமிழ் மக்கள் மீது 1956, 1958 ஆம் ஆண்டுகளில் திட்டமிடப்பட்ட அரச வன்முறைகள் ஏவிவிடப்பட்டன. 1972 இல் தமிழ் இனத்தின் பிரதிநிதிகளின் எதிர்ப்புக்கு மத்தியில் சிங்கள பேரினவாத ஆட்சியாளர்களினால் நிறைவேற்றப்பட்ட ஒன்றையாட்சி முறையிலான குடியரசு அரசியல் சாசனம், தமிழ் இனத்தின் உரிமைகள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாக மறுத்த நிலையில் தமிழ் இனம் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்கவேண்டிய வரலாற்று நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்பட்டது.

1976 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் நாள், தமிழரின் அரசியல் கட்சிகள், அமைப்புக்கள் ஒன்றிணைந்து தமிழ் தேசிய இனத்திற்கு உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் முழுமையான இறைமை கொண்ட சுதந்திர தமிழீழ அரசை நிறுவுவதென தீர்மானித்தன.

1977ஆம் ஆண்டு ஆடி மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழீழ இலட்சியத்தை முன்வைத்து போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தமிழினத்தின் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் பேசும் மக்கள் அமோகமான ஆதரவை அளித்ததன் மூலம் சுதந்திர தமிழீழத்திற்கான மக்களாணை வழங்கப்பட்டது.

தமிழ் இனத்தின் வாழ்வையும் தனித்துவத்தையும் பாதுகாக்கவும், அதன் பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டவும் ஆயுதப் போராட்டமே ஒரே வழி என்ற தவிர்க்க முடியாத நிலைக்கு தமிழ் தேசிய இனம் தள்ளப்பட்டு ஆயுதப் போராட்டம் விரிவடைந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தலைமையில் ஆயுதப் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. அளப்பரிய உயிர்த்தியாகங்கள் ஊடாக விடுதலைப் புலிகளால் இலங்கைத்தீவில் ஏற்படுத்தப்பட்ட இராணுவச் சமநிலை ஊடாக 2002ஆம் ஆண்டு சமாதானப் பேச்சு வார்த்தைக்கான சூழல் உருவாக்கப்பட்டது.

அவ்வேளையில் விடுதலைப் புலிகள், தமிழ்த் தேசிய இனத்தின் தாயக நிலப்பரப்பின் 70 வீதத்தை தொடர்ச்சியாகத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அங்கு ஓர் அரச நிர்வாகத்திற்குச் சமமான சகல அம்சங்களையும் உள்ளடக்கிய நிர்வாகக் கட்டமைப்பை நடத்தி ஓர் நடைமுறை அரசினைத் தம்வசம் கொண்டிருந்தனர். இவ்வாறான சூழ்நிலையிலும் 2002 ஆம் ஆண்டில் உருவான சமாதான சூழல் ஊடாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியதும், கௌரவமானதும், நீதியானதுமான அரசியல் தீர்வை அடைந்து கொள்ளுவதற்காக அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் தமிழீழ விடுதலைப் புலிகள் செயற்பட்டனர். இந்த அடிப்படையிலேயே விடுதலைப் புலிகளால் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை (ISGA) வரைபு முன்வைக்கப்பட்டது.

ஆனாலும் சமாதான வழிமுறையூடாக தமிழ்மக்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு எதனையும் முன்வைக்க விரும்பாத பௌத்த சிங்கள பேரினவாத அரசுகள் காலத்தை இழுத்தடித்து தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத்தி தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தியை அழிப்பதிலேயே முனைப்புக்காட்டின. 2005ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுத் தலைமையானது சமாதானக் கதவுகளை முற்றாக மூடியதுடன் தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்கான யுத்தத்தை தீவிரப்படுத்தியது. மூன்று வருடங்கள் இடைவிடாது ஓய்வின்றி மேற்கொண்ட கொடூர யுத்தம் மூலம் விடுதலைப் புலிகளது இராணுவ பலத்தை அழித்தது.

### 50 ஆயிரத்துக்கும் அதிக பொதுமக்கள் படுகொலை

முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் பொழுது இலங்கை அரச படைகளின் தாக்குதல்களில் 50,000 இற்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதாக சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கணிப்பிட்டுள்ளன. 500,000 வரையான மக்களது பொருளாதாரமும் சொத்துக்களும் முற்றாக அழிக்கப்பட்டு அவர்கள் தமது வாழ்விடங்களில் இருந்து வேரோடு பிடுங்கி எறியப்பட்டனர்.

கடந்த 35ஆண்டுகளில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கான விடுதலைப் போராட்டத்தில் 40,000 இற்கும் அதிகமான இளைஞர்களும், 150,000இற்கு அதிகமான தமிழ் மக்களும் தமது உயிர்களை தியாகம் செய்துள்ளனர்.

சிறீலங்கா 'அரசு' என்பதனை முற்றிலும் நிராகரித்து இலங்கைத் தீவில் தனித் தமிழீழ அரசு ஒன்றின் உருவாக்கத்திற்கான தமிழர்களின் விடுதலைப் போராட்டம் சர்வதேச பிராந்திய சக்திகளினால் மிகப் பெரும் சவாலைச் சந்தித்தது. தனிநாட்டை உருவாக்கும் போராட்டம் இந்திய மற்றும் மேற்குலக நலன்கள் சார்ந்த அணுகுமுறையால் தடைப்பட்டது. மேற்குலகம் தனது செல்வாக்கிற்கு உட்படாதவகையில் இலங்கைத் தீவில் இரண்டு அரசு உருவாக்கம் பெறுவதை விரும்பவில்லை.மறுபுறம் மேற்




குலக அணியின் சமகாலப் போக்கானது அரசுகளை உடைத்து புதிய அரசுகளை உருவாக்குதல் என்னும் அணுகுமுறையில் நிறைய மாற்றங்களைக் கொண்டுள்ளது. சிறிலங்கா அரசினை உடைப்பதிலும் பார்க்க அதனை மறுசீரமைப்பு (State reformation) தாராளவாத ஜனநாயக வழிச்செல்லும் நாடாக உருவாகுவதே அதனது புவிசார் நலன்களை கையாள்வதற்கான வியூகமாக கருதியது. இது சந்தைவழிப் பொருளாதாரம் பல்தேசியக் கம்பனிகளின் செல்வாக்கு என்பவற்றின் ஊடாக இலங்கைத் தீவினை மேற்குலக அச்சில் இயங்கும் தரப்பாக உருமாற்றும் என்று மேற்குலகு நம்புகிறது.

சீனா போன்ற பிற உலக சக்திகள் ''அரசு'' களை தாங்கிப்பிடிக்கும் உலகப் போக்கினைக் கொண்டுள்ளது. எனவே இந்தப் புறச்சூழலானது விடுதலைப் புலிகளின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட விடுதலைப் போரினை மிகுந்த இடருக்குத் தள்ளியது.

2009 மே-18 இற்குப் பிற்பட்ட காலத்தில் அதாவது தமிழர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் மேற்கூறிய பல்வேறு அகபுறச் சூழல்களால் அழிக்கப்பட்ட பலவீனமான காலகட்டத்தில் - தமிழ் மக்கள் முன்பாக பலவித அரசியல் வேலைத்திட்டங்கள் முன்வைக்கப்படுகின்றன.

தராளவாத ஜனநாயக மேற்குலகைக் கையாள்வதற்காகவென பின்வரும் வேலைத்திட்டங்கள் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் முன்பாக முன்வைக்கப்படுகின்றன.

1) சுதந்திரமும் இறைமையும் உள்ள தமிழீழ தனியரசு உருவாக்கம் தொடர்பான வாக்கெடுப்பு.

2) நாடு கடந்த தமிழீழ அரசு மற்றும் புலம்பெயர் தமிழ்மக்கள் வாழும் நாடுகளில் உருவாக்கப்பட்டுவரும் மக்கள் அவைகள் தொடர்பான வேலைத்திட்டங்கள்.

மறுபுறம் தாயகத்திலுள்ள சில தமிழ் அரசியல் தலைமைகள் தாயகம்,தேசியம்,சுயநிர்ணய உரிமை, இறைமை என்பவற்றை கைவிட்டு வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கு முற்பட்ட தோல்வியடைந்த பழையஅரசியல் பாதையை நோக்கி பயணிக்க முடிவு செய்துள்ளன.

### எமது கோட்பாடு கடும்போக்கு எனச் சிலர் விமர்சிக்கின்றனர்

இந்நிலையில் தமிழ்த்தேசியத்திற்கான மக்கள் முன்னணி இரு தேசங்களின் கூட்டான ஒரு நாடு என்கின்ற நடைமுறைச் சாத்தியமான கோட்பாட்டினை முன்வைகின்றது.

சில தமிழ் அரசியல் கட்சிகள் 2009 மே 18இற்குப் பின்னர் தமிழ் மக்களை தோல்வி மனப்பான்மைக்கு தள்ளி அவர்களது அரசியல் கொள்கைகளைக் கைவிட்டு (35 வருடங்களுக்கு முன்னர் முயற்சி செய்து தோல்வியடைந்த) அதிகாரப் பகிர்வு பாதையில் பயணிக்க தொடங்கியுள்ளன. இவ்வாறான நிலைப்பாட்டை வலியுறுத்துபவர்கள், இரண்டு தேசங்கள், ஒரு நாடு என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தமிழர்களின் தனித்துவமான இறைமையை நாம் வலியுறுத்துவதனை கடும் போக்கு என்று விமர்சிக்கின்றனர்.

தமிழ் மக்கள் நலன்கள் அவர்களது சுயநிர்ணய உரிமை (இது தேசிய இனம் தனது தலைவிதியைத் தானே நிர்ணயிக்கும் உரிமை என்கின்ற விரிவான தளத்தில் உள்ளது என்பதுடன் அது தேசிய இனத்தின் உரிமைக்கான எல்லைகளை மட்டுப்படுத்த முயலவில்லை) பாதுகாப்பு, பொருளாதார செயற்பாடுகள் என்பனவற்றினை உள்ளடக்கியதாக இருக்கின்றது.

தமிழர்களின் பாரம்பரிய தாயகம் என்கின்ற அலகு பாதுகாக்கப்பட்டு அதனது அரசியல் பொருளாதார பண்பாட்டு உரிமைகள் பாதுகாக்கப்பட்டு உருவாக்கப்படும் இறுதித் தீர்வே தமிழ் மக்களின் அடிப்படைத் தேவையாகும்.

இதைனை சிறிலங்கா என்கின்ற வலுவான இனவாத சிந்தனை வயப்பட்ட தற்போதுள்ள ''அரசு'' என்ற முறைக்குள் அடைய முடியாது. ஏனெனில் தமிழர்களை இந்தியாவின் தொடர்ச்சியாகப் பார்க்கும் மகாவம்ச மன நிலையில் சிங்கள தரப்பானது செயற்படுகின்றது. அது தமிழர்களை அச்சத்துடன் பார்க்கிறது.இதனால் தமிழ் மக்களின் விட்டுக்கொடுப்புகள் அனைத்துமே தமிழ் மக்களை அழிக்கவே சிங்களத் தரப்பால் பயன்படுத்தப்படும் என்கின்ற வரலாற்று அனுபவமும் வெளிப்படையாகவுள்ளது. தமிழர்களின் தனிநாட்டுக் கோரிக்கையினை அச்சத்துடன் பார்க்கும் சிங்கள தேசமும் சிங்கள ஆதிக்கத்தினை அச்சத்துடன் பார்க்கும் தமிழ்த் தேசமும் சந்தித்தாலே முரண்பாடு களையப்படும்.

### தமிழ்த்தேசம் எனும் அந்தஸ்து காப்பற்றப்பட வேண்டும்

இந்தப் பின்னணியில் இலங்கைத் தீவின் இனச்சிக்கலை தணிப்பதற்கான வழிகளில் ஒன்றாக இரு தேசங்கள் ஒரு நாடு என்கின்ற கோட்பாடு தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணியினராகிய எம்மால் முன்வைக்கப்படுகிறது. நாம் சிங்கள தேசத்தின் நலன்களையும் சர்வதேச நலன்களையும் இந்திய நலன்களையும் கவனத்தில் எடுக்கும் அதே வேளையில் தமிழ் மக்களின் தேசிய நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் அவர்களுடைய தமிழ் தேசம் (Nation)எனும் அந்தஸ்து காப்பாற்றப்படல் வேண்டும் என்பதிலும் அவ்வந்தஸ்து சமரசத்திற்கு அப்பாற்பட்டது என்பதிலும் உறுதியாக உள்ளோம்.

தாயக நிலப்பரப்பு, தனித்துவமான மொழி, பண்பாடு, பொருளாதாரம் தொடர்ந் தேர்ச்சியான வரலாறு என்பவற்றுடன் பிரிந்து செல்லும் உரிமையுள்ள அலகினை தேசம் என்று வகுக்கலாம். அது அரசு அதிகாரத்தை தனித்தோ, கூட்டாகவே வைத்திருக்கும் தார்மீக அரசியல் உரிமைகளைக் கொண்டதாகும். அதுவே ஓர் இனத்தின் நீண்டகாலப் அரசியல் பொருளாதார மேம்பாட்டிற்கும் பாதுகாப்புக்குமான வழியாகவும் அமையும். அத்துடன் இலங்கை எனும் அரசு(நாட்டு)க்குள் சிங்கள தேசத்தின் சமபங்காளிகளாக தமிழ்தேசம் இயங்கும் உரிமை வேண்டும்.

சர்வதேச சமூகமானது தமது பிராந்திய நலன்களைப் பாதுகாக்கும் நோக்கில் இலங்கை அரசு மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு தமிழர்களது உரிமைப் போராட்டத்தைப் பயன்படுத்தும் சாத்தியம் உள்ளது. இதன் காரணமாகவே தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி தமிழ் மக்கள் தமது அடிப்படை கொள்கைகளான தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை, தனித்துவமான இறைமைகொண்ட தேசம், என்பவற்றை விட்டுக் கொடுக்காமல் உறுதியாக இருக்கவேண்டும் என வலியுறுத்துகின்றது.

### தீர்வுத் திட்டத்தின் செயல்முறை

கொள்கை அடிப்படையில் இருந்து வழுவாது தாயகத்தலும் புலம்பெயர் தேசத்திலும் உள்ள தமிழ் புத்திஜீவிகள், சட்டவல்லுனர்கள், கல்விமான்கள், பொது அமைப்புக்கள் உள்ளிட்ட சகல தரப்பினருடைய ஆலோசனைகள் மற்றும் பங்களிப்புடனேயே தமிழினத் தின் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போகும் அரசியல் தீர்வுத்திட்டம் உள்ளிட்ட அரசியல் முன் னகர்வுகளை த.தே.ம.மு மேற்கொள்ளும்.



தமிழர் தாயகத்தின் 2006-2009 மே வரை இடம்பெற்ற இனப்படுகொலைகளைத் தடுத்து நிறுத்த மனிதாபிமானத் தலையீடு என்ற அடிப்படையில் கூட தலையிடுவதற்கு சர்வதேச சமூகம் தவறிவிட்டது. அதற்கு அது கூறிய காரணம் விடுதலைப் புலிகள் பயங்கரவாத அமைப்பு என்றும் அவ்வாறான அமைப்புக்கு எதிராக ஒரு அரசு செயற்படுவதற்கு எதிராக செயற்பட முடியாதெனவும் கூறி அமைதியாக இருந்தது.

தமிழ் இனத்தின் பாதுகாப்புக் கவசங்கள் அழிக்கப்பட்டுள்ள இன்றைய நிலையிலும் கூட தமிழ் பேசும் மக்கள் தமது தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை, தனித்துவமான இறைமை கொண்ட தேசம் ஆகிய அடிப்படையிலான கொள்கைகளுக்காகத் தொடர்ந்து போராட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். ஜனநாயக ரீதியாக போராட முற்படும் தமிழ் மக்களின் போராட்டத்தை மீண்டும் நசுக்கவே அரசு முயல்கிறது. இவ்வாறு பாதுகாப்புக் கவசம் இன்றி நெருக்கடிக்கும் தள்ளப்படுள்ள தமிழ் தேசத்தைப் பாதுகாக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு (Moral Responsbility) சர்வதேச சமூகத்திற்கும் உண்டு.

### அரசியலமைப்பின் 6ஆம் திருத்தச் சட்டம் நீக்கம்

அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றான தனிமனிதனுடைய பேச்சுச் சுதந்திரத்தினை கட்டுப்படுத்துகின்ற வகையில் ஸ்ரீலங்காவின் அரசியல் அமைப்பின் இணைக்கப்பட்டுள்ள 1983ஆம் ஆண்டின் 6ஆம் திருத்தச் சட்டம் நீக்கப்படல் வேண்டும்.

### முஸ்லிம் மக்கள்

தமிழ் தேசியத்துக்கான அரசியல் தீர்வில் முஸ்லிம் மக்கள் தொடர்பாக தமிழ் தேசியத்துக்கான மக்கள் முன்னணியானது தெளிவானதும், திட்டவட்டமானதுமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. சிங்கள பேரினவாதத்தின் பிரித்தாளும் சூழ்ச்சிக்குப் பலியாகாது தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் ஒரு தரப்பாக இருந்து எதிர்கால அரசியல் முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என்பது உறுதியான நிலைப்பாடாகும்.

தமிழர்களைப் போலவே முஸ்லிகளும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் என்ற அடிப்படையிலும், தமிழர் தாயகத்தில் தமிழர்களுடன் இணைந்து வாழ்பவர்கள் என்ற அடிப்டையிலும் தமிழ்த் தேசியப் பிரச்சனைக்கான தீர்வில் தங்களின் பங்கு எவ்வாறு அமைய வேண்டும் என்பதைத் தீர்மானிக்கின்ற உரிமையும் பொறுப்பும் முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகளுக்கு உண்டு.

பரந்துபட்ட தமிழ் தேசியத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து இருக்கவும் பிரித்தாளும் சூழச்சிகளுக்குள் இவ்விரு சமூகத்தினரும் பலியாகாமல் இருக்கும்படியான ஒற்றுமையை வலியுறுத்தி செயற்படுவோம்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் தமது வாழ்விடங்களில் இருந்து விரட்டியடிக்கப்பட்டு சொந்த மண்ணிலே அகதிகளாக்கப்பட்ட மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுத்தல்.

தமிழர் தாயகப் பிரதேசங்களில் உள்ள பள்ளிக்கூடங்கள், வழிபாட்டுத் தலங்கள், பொதுக் கட்டடங்கள், குடிமனைகள் ஆகியவற்றில் நிலை கொண்டுள்ள சிங்கள இராணுவத்தினரை வெளியேற்றவும் பொது மக்களது பாவனைக்கு அனுமதிக்கவும் நடவடிக்கை எடுத்தல்.

தமிழ்மக்களின் அச்சமற்ற இயல்பு வாழ்வுக்கு அச்சுறுத்தலாக இருக்கின்ற ஸ்ரீலங்கா அரச படைகள் தமிழர் தாயகப் பிரதேசத்தில் இருந்து விலக்கிக்கொள்ள (Withdrawal) உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.35 ஆண்டு காலத்தில் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குவதற்கு காரணமாக இருந்த ''அவசரகாலச்சட்ட விதிகள்'', ''பயங்கரவாதத் தடைச்சட்டம்'' என்பவற்றை நீக்குவதற்கு தேவையான அரசியல் நடவடிக்கைகள் எடுத்தல்.

### அரசியல் கைதிகள்

சிறைகளிலும்,புனர்வாழ்வு முகாம்களிலும் அடைத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் மற்றும் முன்னால் விடுதலைப் போராளிகள் அனைவருக்கும் பொது மன்னிப்பின் அடிப்படையிலான விடுதலையைப் பெற்றுக் கொடுக்கப் பாடுபடுதல்.

சர்வதேச மனித உரிமை சட்டங்களுக்குப் புறம்பாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில்

# விக்ரோறியா - அருணோதயா பெண் அணிகள் இன்று கிரிக்கெட் இறுதியாட்டத்தில்





வலி.வடக்கு,மார்ச்.23

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையே முதல் தடவையாக நடைபெறும் பெண்களுக்கான கிரிக்கெட் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

பெண்களுக்கு இடையே முதல் தடவையாக பாடசாலை மட்டத்தில் நடைபெறும் இறுதிப் போட்டி என்றவகையில் கிரிக்கெட் ரசிகர்களிடையேயும் எதிர்பார்ப்பை ஏற்படுத்துவதாக இப்போட்டி அமைந்துள்ளது.

இப் போட்டிகளில் வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகள் நான்கு கல்விக் கோட்டங்களில் இருந்தும் கலந்து கொண்டன.

சிறிய பாடசாலைகள் முதல் பெரிய பாடசாலைகள் வரை இப் போட்டியில் மிகவும் ஆர்வத்துடன் கலந்துகொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளன.

இன்றைய இறுதிப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி செல்வி சிவம் ஜெயரஞ்சினி தலைமையிலும், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி செல்வி.ப. பிரியதர்சினி தலைமையிலும் களமிறங்கித் தமது திறமைகளை வெளிப்படுத்தி பாடசாலைக் கிரிக்கெட் வரலாற்றில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தவுள்ளனர்.

விக்ரோறியாக் கல்லூரி மூன்று போட்டிகளில் ஏற்கனவே விளையாட வேண்டிய போதிலும் முதல் சுற்று போட்டிக்கான எதிரணி சமூகம் கொடுக்காத நிலையில் வெற்றியை பெற்று கால் இறுதி, அரையிறுதி என முன்னேறி இன்று இறுதிப் போட்டியில் மோதவுள்ளது.

இந்த அணியின் பயிற்றுவிப்பாளராக ந.சிவரூபனும் பொறுப்பாசிரியராக சிவபாலசுந்தரமும் செயற்படுகின்றனர்.

இந்த அணியின் துடுப்பாட்டம் சராசரியாக இருந்தாலும் கூட களத்தடுப்பில் மிகவும் சிறந்த அணியாகக் காணப்படுகின்றது.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் எந்த வகையிலும் குறைந்தது அல்ல. அணி வீராங்கனைகள் சராசரியாக எல்லாத் துறைகளிலும் சிறந்தவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

இந்த அணியின் பயிற்றுவிப்பாளர்களாக எஸ்.திலீபன், கே.சுரேஷ் ஆகியோரும் பொறுப்பாசிரியையாக செல்வி எஸ்.சிவசோதியும் செயற்படுகின்றார்.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியும் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் மோதவுள்ளன. (50-86)

# கல்லுண்டாயில் சிப்பி அரித்தெடுப்பதால் கடல் நீர் குடிமனைக்குள் புகும் அபாயம்

நவாலி, மார்ச் 23

கல்லுண்டாயில் சிப்பி அரித்து மண் ஏற்றிச் செல்வதால் கடல் நீர் குடிமனைக்குள் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இப் பிரதேசத்தில் சிப்பி அகழ்ந்தெடுப்பவர்கள் மண்ணை அரித்து வேறாக்கி விட்டு சிப்பியை ஓர் வாகனத்திலும் மண்ணை மற்றோர் வாகனத்திலும் ஏற்றிச்சென்று அதிக விலைக்கு விற்று வருகின்றனர்.

இதனால் அப் பிரதேசம் நாளுக்கு நாள் பள்ளங்களாகி வருவதால் கடல் நீர் வயல்களுக்குள்ளும் குடிமனைகளுக்குள்ளும் உட்புகும் அபாயகரமான நிலைமை உருவாகியுள்ளது.

இப் பிரதேசம் ஆனைக்கோட்டை (ஜே/133), நவாலி கிழக்கு (ஜே/135) ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. இதனால் ஒரு பிரிவு எல்லைகளும் சரியான முறையில் அறிய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் நவாலி கிழக்கு கிராம சேவையாளர் பிரிவின் பகுதிக்குள் சிப்பியை அரித்துவிட்டு மண்ணை ஏற்றுவதற்கு சிலர் தயாராகிக்கொண்டிருந்த வேளை ஆனைக்கோட்டை விவசாய சம்மேளத்தினர் கிராம சேவையாளர் நித்தியானந்தனுக்கு தெரியப்படுத்தினர். அவர் உடனடியாகச் செயற்பட்டு சம்பந்தப்பட்டவர்களை எச்சரிக்கை செய்து அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்டவர்களும் பொதுமக்களும் இணைந்து செயற்பட்டால், இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்திவிட முடியும் என்று சமூக நலன் விரும்பிகள் தெரிவிக்கின்றனர். (ஒ-100)

அதிபரின் தற்காலிக இடமாற்றத்தை அடுத்து

# கோப்பாய் கலாசாலைப் பணிகள் நேற்று வழமைக்குத் திரும்பியன

கோப்பாய், மார்ச் 23

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இடம்பெற்றுவந்த பகிஷ்கரிப்பு நடவடிக்கைகள் கைவிடப்பட்டு நேற்று முதல் மீளவும் வழமை நிலைதிரும்பியுள்ளது.

கலாசாலையின் அதிபர் மலர்விழி சின்னையா யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட ஆசிரியர் வளங்கள் நிலையத்திற்கு தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளார். அதையடுத்தே பகிஷ்கரிப்புப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வார காலமாக அதிபரின் சில நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து விரிவுரையாளர்கள் விரிவுரைக்கு செல்வதை பகிஷ்கரித்தும் ஆசிரிய, மாணவர்கள் வெளிநடப்பு நடவடிக்கையில் இறங்கியும் தமது போராட்டத்தை நடத்தி வந்தனர்.

இந்தநிலையில், அதிபரின் இடமாற்றம் குறித்த அறிவித்தல் கடிதம் கல்வி அமைச்சினால் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக நேற்று வழங்கப்பட்டது.

இதனையடுத்து நேற்றைய தினம் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் முன்னிலையில் உப அதிபர் எஸ். கணபதிப்பிள்ளை கலாசாலையின் நிர்வாகப் பொறுப்புகளைப் பெற்றுக்கொண்டார்.

இதேவேளை, கடந்த கால யுத்த நிலைகள் காரணமாக ஆசிரிய பயிற்சியைத் தொடர முடியாதிருந்த ஆசிரிய மாணவர்கள் தமது புதிய பதிவுகளை நேற்றையதினம் மேற்கொண்டிருந்தனர். (ஒ-14-86)





நாடாளுமன்றத் தேர்தல் - 2010

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - TNA)



உரிமைப் பிரச்சினையை
உலகறியச்செய்த
ஊடகப்போராளிக்கு
உங்கள் வாக்குகள்...!

உதயன் நிர்வாக இயக்குநர்

தொழிலதிபர்
ஈ.சரவணபவன்

இலங்கைத் தமிழரசுக் கட்சி

X 6


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கதாப்பிரசங்கம் மூலம் கலைப்பணியும் திருத்தொண்டும் செய்தவர் நல்லைக்குருமணி



**ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளது குருபூசைத்தினம் இன்றாகும். அதனை யொட்டி இந்த ஆக்கம் இங்கு பிரசுரமாகின்றது.**

இன்று பொன்னான ஒரு நன்னாள். நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தின் ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகளது குருபூசைத்தினம் இன்றாகும். கதாப்பிரசங்கம் செய்தே கலைப் பணியும்.திருத்தொண்டும் செய்த இவரது அருமையும் பெருமையும் சொல்லில் அடங்காது.

சைவத்தைப் பரப்பி எமது ஈழநாட்டில் சைவமணங்கமழச்செய்தவர் சுவாமிகளே. அவர் தமது தொண்டையினாலே தொண்டு செய்த ஒரு மகானாவார். நல்லூரில் பெருந்திருவிழாக் காலத்தில் அவரது பிரசங்கம் இருபத்தைந்து நாளும் தொடர்ந்து இடம்பெற்று வந்ததுண்டு. ஒரு கால கட்டத்தில் இரவு 11 மணிக்கு சுவாமிகளின் கதாப்பிரசங்கம் கேட்டபின்னரே அடியார்கள் தத்தமது இல்லம் திரும்புவர்.

தொடர்பிரசங்கமாக இவரால் மகாபாரதம், இராமாயணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம் அனைத்தும் நிகழ்த்தப்பெறும். இவருக்குக் கதாப்பிரசங்கம் கைவந்த கலை. இனிமையான சாரீரத்தினால் அனைவரையும் கவர்ந்து இழுத்துவிடுவார். என்னவென்று சொல்ல முடியாத ஓர் ஈர்ப்புச் சக்தி அவரது குரலுக்குண்டு.

யாழ்ப்பாணத்தில் அன்னாரது பிரசங்கம் நடைபெறாத கோயில்கள் இல்லையென்று சொல்லுமளவுக்கு அவரது இனிய குரல் எங்கும் கேட்டிருக்கின்றது.

இளமையிலேயே பேச்சாற்றல் கொண்ட சுவாமிகள் 1966 ஆம் ஆண்டு இந்தியாவில் மதுரை ஆதீனத்திடம் காஷாயம் பெற்று இலங்கையில் ஓர் ஆதீனம் நிறுவ வேண்டும் என்ற ஒரு நன்னோக்கோடு செயற்பட்டு இவர் ஆரம்பித்து வைத்ததே இந்த நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனமாகும்.

சைவமும் தமிழும் வாழவேண்டும், வளரவேண்டும் என்று முற்று முழுதாகத் தம்மையே அர்ப்பணித்து வாழ்ந்த சுவாமிகள் குருபூசையை நாம் கொண்டாடினால் மட்டும் போதாது. அவர் விட்டுச் சென்ற பணியைத் தொடர வேண்டும் என்ற வகையில் இப்போது இரண்டாவது குருமஹா சன்னிதானமாக இருக்கின்ற ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளும் தன்னால் இயன்றளவு சைவமும் தமிழும் வளரப்பாடுபட்டு வருகின்றார்.

இலங்கையில் இயங்குகின்ற ஒரே ஆதீனம் இந்தத் திருஞான சம்பந்தர் ஆதீனமே ஆகும். பண்ணிசை வகுப்புகள், சங்கீத, வயலின், மிருதங்க வகுப்புக்ள், கோலப்பயிற்சி வகுப்புகள் என்று இன்னோரன்ன நற்பணி புரிந்துவரும் இந்த ஆதீனம் யாழ்ப்பாண மக்களுக்கு ஒரு நல்ல வரப்பிரசாதமாகும்.

எதிர்காலச் சமுதாயம் நன்னெறியில் ஒழுக வேண்டும் என்ற நோக்கோடு செயற்பட்டுச் சென்ற இடமெல்லாம் தமது ஆசியுரையில் பல்வேறு கருத்துக்களை அச்சொட்டாக ஆணித்தரமாகக் கூறி மக்களுக்கு சைவ சமயத்தில் ஆர்வம் மிகைபடச் செய்யும் அன்னாரது பணிக்கு யாழ்.வாசிகள் நல்லாதரவு வழங்க வேண்டும்.

நெற்றியில் திருநீறு துலங்க நாம் இன்று சைவமக்களாக உலாவருகின்றோமெனில் அதற்கு வித்திட்டவர் ''மணிஐயா'' என்று அன்போடு அழைக்கப்பெற்ற முதலாவது குருமகா சன்னிதானமே ஆகும்.

எனவே நாம் இன்றைய அன்னாரது குருபூசை நிகழ்வுகளில் கலந்து கொள்வதோடு மறைந்த சுவாமிகளது திருப்பணிகளுக்கு எம்மாலான உதவிகளைச் செய்து, யாழ்ப்பாணத்தில் சைவம் வளர நாமும் உதவியுள்ளோம் என்ற மனத்திருப்தியை அடைந்து எல்லாம்வல்ல நல்லைக் கந்தனின் அடியானான ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின் பாதம் பணிந்து அவனருளாலே அவன் தாள் வணங்கி இன்புற்றிருக்க வழி சமைப்போமாக.

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்






## கண்டெடுக்கப்பட்டுள்ளது

மானிப்பாய் சந்திக்கும் சுதுமலைச் சந்திக்கும் இடையில் ஒரு தொகைப்பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த அடையாளம்காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.
தொடர்பு: மயூரா தச்சுத் தொழிற்சாலை, ஆலடிச்சந்தி, மானிப்பாய்.

## வீடு வாடகைக்குத் தேவை

**Digital Printing and Colour Seperation (Postive Output)**
தொடர்பான வேலைகள் செய்வதற்கு விசாலமான விறாந்தையுடன், சகல அடிப்படை வசதியுடன் கூடிய வீடு யாழ்.மாநகர எல்லைக்குள் உடனடியாக வாடகைக்குத் தேவை.
தொடர்புக்கு: திரு.R.உதயன்
0723906882


**I.E.L.T.S**

**(PREPARATION COURSE)**

**யாழில்**

கொழும்பில் பிரபல்யமான I.E.L.T.S போதனாசிரியர் பலரின் வேண்டுகோளுக்கிணங்க வார இறுதி நாள்களில் யாழ்ப்பாணத்தில் (K.K.S Road, கொக்குவில்) வகுப்புக்கள் நடத்த முன் வந்துள்ளார்.

தொடர்புகளுக்கு:
0776022546 என்ற தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
வகுப்புக்கள்
(95782)


## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
கோ.சித்திரகுமரனின் அன்புத் தந்தை

**அமரர் தம்பையா கோபாலரத்தினம்**

அவர்களினதும் மற்றும்
எமது பிரதேச செயலகத்தில், முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும்
செல்வி நடராஜா தேவகுமாரியின் அன்புத் தாய்

**அமரர் நடராசா அன்னம்**

அவர்களினதும் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவர்களினது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்....



வையத்துள் 27 ★ 03 ★ 1921

தெய்வத்துள் 20 ★ 03 ★ 2009

**அமரர் பொன்னையா சுப்பிரமணியம்**

(ஓய்வுபெற்ற அதிபர்)

திதி: அட்டமி

ஆண்டொன்று உருண்டோடினாலும்
தங்கள் நினைவுகளால் எம் நெஞ்சம் கனக்கின்றது.
இவ்வுலகில் எங்களை நல்லவண்ணம் வாழவைத்தீரே!
மனதிலின்று அழியாப்பிறவித் தெய்வமாகி நிற்கின்றீர்களே!
கணமேனும் உங்கள் நினைவு நீங்காமல் வாழும்.....

அன்னாரின் ஓராண்டு நினைவாக ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று [23.03.2010] செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

49, விதானையார் வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (95785) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### செல்வரத்தினம் சின்னம்மா



மஞ்சத்தடி தெற்கு, இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் சின்னம்மா 21.03.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சின்னமேனை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - நாகம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற இராசையா, கனகசபாபதி, ஆறுமுகம் (ஓய்வுபெற்ற கிராம சேவகர்), இலட்சுமிப்பிள்ளை, இராசலட்சுமி, நாகையா (U.K), சறோயினிதேவி, விஜயகுமாரன் (அண்ணா பாம்), ஜெகதாம்பாள் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராசரத்தினத்தின் (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்) மைத்துனியும் குமாரதாஸ் (U.K), குமாரதர்சினி (ஆசிரியர், இணுவில் இந்துக் கல்லூரி), அருள்தாஸ் (பிரான்ஸ்), சங்கரதாஸ் (பிரான்ஸ்), குமாரநந்தினி (ஜேர்மனி), குமாரசுகந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெகதீஸ்வரி, திருப்பதிராசன் (ஆசிரியர், இணுவில் மத்திய கல்லூரி), ராகினி, லதா, மதியழகன், சிவகுமார் ஆகியோரின் மாமியாரும் தனந்தி, விசாகன், லக்ஷா, விஷ்ணவன், பவித்திரன், அஸ்வின், மிதுன், சாயீஸ், சகாயன், காலஞ்சென்ற பிரவின் மற்றும் கஜானி, சதுர்ஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*மஞ்சத்தடி தெற்கு,*
*இணுவில்.* *(95796)* தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி செல்லத்துரை கனகேஸ்வரி



பன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை கனகேஸ்வரி 21.03.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சுப்பிரமணியம் - மீனாட்ச்சிப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் வசீகரன், வளர்மதி, சசிதரன், பானுமதி (ஆசிரியர், பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் புஸ்பராணி, சுந்தரங்கன், யசோதா, முகுந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் மதினி, யாழினி, கீர்த்திகா, பிரவீன், ஆகாஷ், அபிலாஷ், அபிநயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் சிவராசா, காலஞ்சென்றவர்களான நடராசா, பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.03.2010) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10 மணியளவில் தகனத்துக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*''வளர்மதி வாசா'',*
*பன்னாலை, தெல்லிப்பழை.* தகவல்: திருமதி பா.முகுந்தன் (மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமாத்தளனில் கஞ்சிக்காக கையேந்தி நின்ற குழந்தைகள் இரையானதை எப்படி மறப்பது?

## சிந்தித்து வாக்களியுங்கள் என்கிறார் கூட்டமைப்பு வேட்பாளர் ஸ்ரீதரன்

யாழ்ப்பாணம், மார்ச்23

புதுமாத்தளனில் பசி, பட்டினியுடன் வாடிய நிலையில் கஞ்சிக்காகக் கையேந்தி வரிசையில் நின்றவேளையில், கொத்துக் குண்டுகளுக்கு இரையாகியதை எப்படி மறப்பது?

ஆயிரக்கணக்கான பொதுமக்கள், இளைஞர்கள் குண்டுகளுக்கும், ஷெல்களுக்கும் இலக்காகி துடிதுடித்துப் பலியானதை மறந்து விடமுடியுமா?

இவற்றை எல்லாம் தமிழ் மக்கள் என்றும் மறந்து விடமாட்டார்கள்; இவற்றையெல்லாம் சிந்தித்து தமிழ்மக்கள் எதிர்வரும் தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். அதனை அம்மக்கள் சரியாகச் செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இவ்வாறு கூறினார் யாழ்.தேர்தல் மாவட்ட தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் சி.ஸ்ரீதரன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டம் அண்மையில் ஆவரங்காலில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஸ்ரீதரன் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அந்தக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

எமது மக்களில் பலர் முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள சூழலில்- வாழமுடியாத - மூச்சுவிடமுடியாத சூழலில், எங்களது சகோதரர்கள், பிள்ளைகள் புனர்வாழ்வு என்ற பேரில் முகாம்களுக்குள் அடைக்கப்பட்டுள்ள சூழலில், நாங்கள் நம்பியிருந்த போராட்டத்தை இழந்த நிலையில் நாங்கள் வாழ்ந்த மண்ணில் யார் யாரோ எல்லாம் வந்து எம்மை இருத்திக் கேள்வி கேட்கின்ற சுதந்திரமாக நடமாட முடியாத சூழலில் நாங்கள் ஒரு தேர்தலைச் சந்திக்கின்றோம்.

இந்த தேர்தலிலே நாங்கள் வாக்களிக்கச் செல்லலாமா? யாருக்கு வாக்களிக்க வேண்டும்? தற்போது எமது மக்களின் மனநிலை என்ன என்பதெல்லாம் எம்மில் பலருக்கு எழுகின்ற கேள்விகள்.

நாங்கள் தோற்றுப் போனவர்களாக- வேரோடு பிடுங்கி எறியப்பட்டவர்களாக எங்களது வாழ்க்கையை ஒரு நடைபிணங்கள் போன்று நடத்திக்கொண்டு இருக்கின்றோம். மனதிலே ஆயிரம் சோகங்கள், ஒவ்வொரு தாய், தந்தையர் மனதிலும் தமது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய கேள்விகள், இவற்றை எல்லாம் மனதில் வைத்துக் கொண்டு அவர்களது உணர்வுகளை அடக்கி எவ்வாறு இந்தத் தேர்தலைச் சந்திப்பது என்று என்ற நிலையில் தான் நாங்கள் வாழ்ந்து வருகிறோம்.

**சிந்திப்போம் செயற்படுவோம்**

இந்தச் சூழலிலிருந்து விடுபட்டு எவ்வாறு இந்த வாழ்வை வெற்றி கொள்வது என்று இனி நாம் சிந்திக்க வேண்டும். அதன்படி செயற்பட வேண்டும்.

இன்று யாழ்ப்பாணத்தைப் பார்க்கின்ற போது எத்தனை சிங்களக்கடைகள், தனிச் சிங்களத்திலே அவர்களது பெயர்ப் பலகைகள். அம்பாறையை எடுத்துக் கொள்வோமானால் அம்பாறை என்கின்ற தனித்தமிழ் மாவட்டமாக இருந்தது. ஆனால் இன்று அம்பாறை நகரப் பகுதிகளில் தனித் தமிழ் எழுத்தையே காணமுடியாது.

இப்படியாக கொஞ்சம் கொஞ்சமாக எமது மண்ணை இழந்து கொண்டிருக்கின்றோம். நாளாந்தம் எங்களுடைய வாழ்வு அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மெல்ல மெல்ல எமது வாழ்விடங்கள் சூறையாடப்பட்டு வருகின்றன.

**கொக்காவிலில் 4 ஆயிரம் வீடுகள் இராணுவத்துக்கு!**

தற்போது கொக்காவிலிலே இராணுவத்தினருக்காக 4,000 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஏறக்குறைய நான்காயிரம் குடும்பங்கள் குடியமர்த்தப்படின் ஒவ்வொருவீட்டிலும் இரு மாணவர்கள் என்று பார்த்தாலே 8 ஆயிரம் பேர். இவர்கள் கல்விகற்க எத்தனை பாடசாலைகள் அமைக்கப்பட வேண்டும். ஆகவே அங்கு எப்படி ஒரு சிங்களக் கிராமம் வேகமாக வளரும் என்பதை நீங்களே கற்பனை செய்து பாருங்கள்.

இன்று கொக்காவில், நாளை இயக்கச்சி அப்படியே பளை, யாழ்ப்பாணம் இதெல்லாம் இவர்களுக்கு ஒரு பெரிய விடயமாக இருக்காது. யாழ்ப்பாணத்திலே படித்த இளைஞர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் அவர்களை வாக்குப் போடுவதற்காகப் பலர் வேட்டையாடி வருகின்றனர்.

ஆனால் இத்தனை இளைஞர்கள் வேலை இல்லாமல் இருக்கும் போது பல சிங்களப்பகுதி இளைஞர்கள் இங்கு வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். இங்கு இருக்கும் வேலைகளுக்காக சிங்கள இளைஞர்களுக்கு வழங்கப்படும் சந்தர்ப்பத்தை ஏன் தமிழ் இளைஞர்களுக்கு வழங்கக் கூடாது.

அபிவிருத்தி, அபிவிருத்தி என்கிறார்கள் வீதிக்குத் தார் பூசுவதும், மதவுக்குப் ''பெயின்ட்'' அடிப்பதும் அபிவிருத்தியா?



தீவுப்பகுதிகளை எடுத்தால் அங்கு முற்றுமுழுதாகக் குடியமர அனுமதிக்கப்படவில்லை கிளிநொச்சியில் சிறிய நிலப்பரப்பில் குடியமர்த்திவிட்டு 99 வீதமான பகுதியில் குடியேற்றப்பட்டு விட்டதாகப் பரப்புரை செய்யப்படுகிறது. கிளிநொச்சி மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் எந்த ஒரு குடிமகனும் தன்னுடைய இடத்துக்கு போக முடியாது. அவர்களுடைய சொத்துக்கள் யாவும் சூறையாடப்படுகின்றன.

கஞ்சிக்காக வரிசையில் நின்ற எமது குழந்தைகள் கொத்துக் குண்டுகளுக்குப் பலியான சம்பவம் உலகத்தில் எங்கே நடந்தது? இவ்வளவு இழப்புக்களுக்கும் மத்தியில் சில லட்சங்களுக்காக எமது மெத்தப் படித்த மேதாவிகள் சுயேச்சைகள் என்ற பெயரில் இறங்கி இருப்பது துரோகத்தனமானது; வெட்கக்கேடானது.

அன்பான தமிழ்மக்களே நன்றாகச் சிந்தித்து வேரோடு பிடுங்கி எறியப்பட்ட இந்த மக்களுக்காகவாவது நீங்கள் வாக்களிக்க வேண்டும்-என்றார் ஸ்ரீதரன். (ஓ-16)




**கூட்டமைப்புக்கே வாக்கை வழங்குங்கள்; தவறினால்**

# அரசு தனது கையாள்களுடன் மட்டும் பேசி தீர்வு எனக் கூறித் தமிழரை ஏமாற்றிவிடும்

## சட்டத்தரணி சுமந்திரன் இப்படி அடித்துக் கூறுகிறார்

யாழ்ப்பாணம், மார்ச்23

தமிழ் மக்கள் தமது வாக்குப் பலத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கு வழங்க வேண்டும். இல்லையேல் இந்த அரசு, தனது கையாள்களுடன் மட்டும் பேசிவிட்டு அரசியல் தீர்வு வழங்குவதாகக் கூறி எமது மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றி அழித் தொழிக்கும் நடவடிக்கையில்தான் ஈடுபடும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தேசியப்பட்டியலுக்கு பிரேரிக்கப்பட்டுள்ள சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

ஆறுகால்மடத்தில் கடந்த 19 ஆம் திகதியன்று நடைபெற்ற தமிழ்தேசிய கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு சுமந்திரன் உரையாற்றும் போது மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

தமிழ்த் தேசிய இனம் 60 ஆண்டுகளாகத் தொடர்ந்து அழிக்கப்பட்டு வருகிறது. அதிலும் கடந்த இரண்டு வருடகாலமாக எமது மக்கள் சொல்ல முடியாதளவில் துன்பதுயரங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

**போராட்டம் தோல்வியில்**

தமிழ் மக்கள் 30 வருடங்கள் அகிம்சை வழியிலும், மேலும் 30 வருடங்கள் ஆயுத வழியிலும் தமது போராட்டங்களை முன்னெடுத்தனர். இந்த போராட்டங்களால் எவற்றையுமே பெற்றுக்கொள்ள முடியவில்லை. அவை எல்லாமே தோல்வியில் தான் முடிந்துள்ளன.

இந்த நிலையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பையும் இல்லாது ஒழிப்பதன் மூலம், தமிழ்த் தேசிய இனத்தையே அழித்து விட முடியும் என்ற திட்டம் -நோக்கம் அரசிடம் உண்டு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழித்து ஒழிக்கப்படுமானால் இலங்கையில் தமிழினம் விரைவில் அழிக்கப்பட்டு வர லாறு மட்டுமே மிஞ்சி நிற்கும் என்பதை எமது மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

பெரும்பான்மை இனம் தமக்கென தலைமையைத் தெரிவு செய்து ஆட்சிப் போக்கையும் தீர்மானித்துள்ளது. தமிழ் மக்களின் தலைமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே என்பதை உலகம் முழுவதும் ஓங்கி ஒலிக்கும் வகையில் வாக்களித்து ஆணை வழங்குங்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கொள்கையைக் கைவிட்டதாகக் கூறுபவர்கள் பற்றிச் சிந்தியுங்கள். அவர்களது நோக்கம் பற்றி தெளிவாக அறிந்து கொள்ளுங்கள்.

**ஒரே கொள்கைக்காக போராட்டம்**

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த நாளிலிருந்து கடந்த 60 வருட காலமாக குறித்த கொள்கை ஒன்றுக்காகத் தடம்புரளாமல் தொடர்ந்து போராடி வருவது தமிழரசுக் கட்சி மட்டுமே.



வடக்கு, கிழக்கு எமது தாயகம். எமது சுயநிர்ணய உரிமை பற்றி தேர்தல் விஞ்ஞாபனத்தில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருகிறோம்.

எனவே தமிழரசுக் கட்சியையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் விமர்சிபவர்களின் உள்நோக்கம் அனைத்து மக்களுக்கும் நன்கு விளங்கும்.

எனவே மக்களின் தன்மானத்தை எவரும் விலைபேச முடியாது. அற்பசலுகைகளுக்கு அடிபணிந்து தமிழ் மக்கள் தமது எதிர்காலத்தை சிதறடிக்கவிரும்ப மாட்டார்கள்.


தமிழ்மக்கள் ஓரணியில் திரண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும். இல்லையேல் இந்த அரசு, தனது கையாள்களுடன் மட்டும் பேசி, அரசியல் தீர்வு வழங்குவதாகக் கூறி எமது மக் களைத் தொடர்ந்தும் ஏமாற்றி அழித்தொழிக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் என்பது திண்ணம் - என்றார்.

இக்கூட்டத்தில் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா உள்ளிட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளர்கள் பலரும் உரை நிகழ்த்தினர்.

(ஓ-14)

# புனர்வாழ்வுபெற்று வரும் இளைஞர், யுவதிகளை இயல்பு வாழ்க்கைக்குத் திருப்ப வேண்டும்

## பேரம்பேசும் சக்திக்கான ஆணையைக் கோருகிறார் ஸ்ரீ கஜன்



யுத்தத்தையடுத்து புனர்வாழ்வு பெற்று வரும் முன்னாள் போராளிகளை துரித கதியில் விடுவித்து அவர்களுக்கு உரிய வகையில் தொழில்களை வழங்கி அவர்களை இயல்பு வாழ்க்கைக்குத் திருப்பவேண்டும். அத்துடன் வன்னியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்த போது விட்டுச் சென்ற வாகனங்கள் மற்றும் உடைமைகளும் மீளவும் அவர்களிடம் ஒப்படைக்கவேண்டும். இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் துரிதப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட வேட்பாளரும் ஊடகவியலாளருமான எஸ்.ஸ்ரீகஜன் வலியுறுத்தியுள்ளார்.

கிளிநொச்சி, உதயநகர் மேற்குப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற மக்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

மீளக்குடியேற்றப்பட்டுள்ள மக்களைச் சந்தித்த இவர் இங்கு கருத்துத் தெரிவிக்கையில் வன்னி மக்கள் அனுபவித்த துன்ப துயரங்களை நாம் அறிவோம். உங்களது துன்ப துயரங்களை ஊடகவியலாளர்களான நான் வெளியுலகுக்குக் கொண்டு வந்திருந்தேன். நீங்கள் துன்பப்படும்போது நான் பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் பணியாற்றினேன். ஏனைய தமிழ் அரசியல்வாதிகள் போல் வெளிநாடுகளுக்குத் தப்பி ஓடாமல், வாய்மூடி மௌனியாக இருக்காமல் ஊடகத்துறை மூலம் நான் உங்களுக்காக பணியாற்றினேன்.

தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்த மகேஸ்வரன் நாடாளுமன்றத்தில் செங்கோலையே தூக்கி தனது எதிர்ப்பை அன்று காட்டியிருந்தார். வன்னி மக்களான நீங்கள் துன்பப்படும் போது அவர் உயிருடன் இருந்திருந்தால் நாடாளுமன்றத்தைப் போர்க்களமாக்கியிருப்பார். அவரின் வெற்றிடத்தை நீங்கள் தற்போது அறிந்திருப்பீர்கள். எனவே அவரது பணியினை தொடர்வதற்காகவே அவரது துணைவியார் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் நாம் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடுறோம்.

**விடிவு கிடைக்கும்**

எமது அணியில் பெரும்பான்மையானோரை நீங்கள் நாடாளுமன்றம் அனுப்பினால் உங்களின் துன்ப துயரங்களுக்கு நாம் விடிவைப் பெற்றுத்தருவோம் என்றார். (ஓ)

# கிழக்கில் முஸ்லிம் பகுதிகளில் கூடுதல் தேர்தல் வன்முறைகள்

கொழும்பு, மார்ச் 23

நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரங்கள் கிழக்கில் சூடுபிடித்துள்ள அதேசமயம் மட்டக்களப்பு மாவட்டத்தின் முஸ்லிம்கள் அதிக எண்ணிக்கையில் வாழும் பகுதிகளில் தேர்தல் வன்முறைகள் அதிகரித்த வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தலில் போட்டியிடும் முஸ்லிம் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் அவர்களது ஆதரவாளர்களுக்கிடையே இதுவரை பல இடங்களில் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

முஸ்லிம் பகுதிகளான ஓட்டமாவடி, வாழைச்சேனைப் பிரதேசங்களிலேயே அதிக அளவில் தேர்தல் வன்முறைகள் இடம்பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதேசங்களில் இந்த வாரத்தில் மட்டும் கைக்குண்டுத் தாக்குதல்கள், துப்பாக்கிச் சூடுகள், வாகனங்கள் மீதான தாக்குதல்கள் என்று பத்துக்கும் மேற்பட்ட வன்முறைகள் இடம்பெற்றுள்ளன எனக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவங்களுக்கு ஒருகட்சி மீது மற்றும் கட்சி குற்றம் சுமத்தும் நிலையிலே காணப்படுகிறது.

குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் பட்டியலில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் எம்.கே.முகைதீன்லெப்பை, தான் பல தடவைகள் தாக்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் வேட்பாளர் அமைச்சர் அமீர் அலி நேரடியாகவே எம்மீது தாக்குதல் மற்றும் வன்முறையில் ஈடுபடுகின்றார் என்றும் இதற்கு பொலிஸாரும் ஆதரவாக உள்ளனர் என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள அமைச்சர் அமீர் அலி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் தமது மூன்று கிளைகளை அடித்து நொறுக்கியுள்ளனர் என்றும் எமது ஆதரவாளர்கள் 9 பேரை கூரிய ஆயுதங்களால் தாக்கி அவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர் என்றும் குற்றம்சாட்டியுள்ளார். (ஓ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



உறவினர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். எந்த வேலையையும் பிறகு செய்யலாம் என தள்ளி வைக்காமல் உடனுக்குடன் செய்து முடிப்பது நல்லது. அரசு தொடர்பான காரியங்கள் சிரமங்களுக்குப் பின், முடிவுக்கு வரும். பொறுமையைச் சோதிக்கும் சம்பவங்கள் நடக்கலாம். பெண்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம்.

### இடபம்



உடன் பிறப்புகள் வழியில் உருவான தொல்லைகள் தீரும். தொழில் ரீதியாக புதிய ஒப்பந்தங்கள் போட மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. சொத்து விவகாரங்களில் ஏற்பட்ட சிக்கல்கள் சுமுகமாகத் தீர்வுக்கு வரும். பெரிய மனிதர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம்.

### மிதுனம்



ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். வெளியூர்களில் இருந்து வரும் சிலருக்காகக் காத்திருக்கலாம். உங்களின் முயற்சி ஒன்றுக்கு மற்றவர்கள் தடை போடலாம். சிலரின் வேண்டுகோள்களை நிறைவேற்ற முடியாமல் அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

### கடகம்



எந்த வழியிலாவது பணவரவுகளைப் பெறலாம். அடமானமாக வைத்த பொருள் ஒன்றை மீட்கலாம். உறவினர்களுக்காக சிறு தொகையைச் செலவிடலாம். நண்பர் ஒருவர் மூலம் புதிய நண்பர் ஒருவரின் அறிமுகம் கிடைக்கும். வீட்டில் வசதி, வாய்ப்புகளை அதிகரிக்க முற்படுவீர்கள். மாற்று மொழி பேசுவோரால் ஆதாயம், அனுகூலம் பெறலாம்.

### சிங்கம்



கடிதங்கள் மூலம் சுபச் செய்திகள் வரலாம். அலைந்து திரிந்து முடிக்க நேரிடும் என நினைத்த வேலை ஒன்று, சுலபமாக முடிவுக்கு வரும். உடன்பிறப்புகள் உங்களின் எண்ணங்களைப் புரிந்துகொண்டு நடந்து அனுசரணையாக நடப்பர். நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைத்து செயற்படும் நாள்.

### கன்னி



எதேச்சையாக நடக்கும் சில நிகழ்ச்சிகளால் மனதில் சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். உறவினர்கள் சிலருக்கு முக்கியமான யோசனை சொல்லலாம். உதவி செய்வதாகச் சொன்ன ஒருவர் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். அயலார் உதவிக்கரமாக இருப்பர். எதிர்பாராமல் நடக்கும் சம்பவங்களால் நண்பர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம்.

### துலாம்



கடனாக வாங்கிய பணத்தை திரும்பக்கொடுக்கலாம் அல்லது வட்டி கட்டலாம். பெண்கள் தொடர்பான விஷயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். நீங்கள் உதவி செய்தும் அதைப் பொருட்படுத்தாமல் சிலர் உங்களை உதாசீனம் செய்யலாம். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். தந்தையுடன் மனஸ்தாபம் ஏற்படலாம்.

### விருச்சிகம்



எதிர்பார்த்த நல்ல தகவல்கள் தொலைபேசி வழியில் வந்து சேரலாம். நீங்கள் மேற்கொள்ளும் புதிய முயற்சிகளுக்கு நண்பர்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம். பெண்கள் ஆடை, ஆபரணங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். வெளியூர்களில் ஒருவரைத் தொடர்பு கொண்டு முக்கிய விடயமாகப் பேசலாம்.

### தனுசு



நீங்களே சிரமங்களைச் சந்திக்கும் நேரத்தில் உங்களிடம் சிலர் உதவி கேட்கலாம். ஆடம்பரப் பொருள்கள் வாங்குவதில் நாட்டம் செல்லும். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். உறவினர்கள் வருகையால் உங்களின் வேலைகளில் தடை ஏற்படலாம். மனக் குழப்பங்கள் அதிகரிக்கும் நாள்.

### மகரம்



பெண்கள் வழியில் உருவான பிரச்சினைகள் தீர்ந்து அனுகூலமான உதவி கிடைக்கும். மாற்று மதத்தினரை நம்பி எந்த காரியத்திலும் இறங்க வேண்டாம். பதவி உயர்வை எதிர்பார்ப்பவர்கள் நல்ல செய்திகளைக் கேட்கலாம். பல நாள்களாக வராமல் இருந்த கடன் பாக்கிகள் திடீரெனக் கைக்குக் கிடைக்கலாம். வயிறு உபாதைகளுக்கு ஆட்படலாம்.

### கும்பம்



வரவுகள் வரும் முன்னரே செலவுகள் காத்திருக்கும் நாள். உறவினர்கள் தொடர்பான விடயம் ஒன்றால் மனக் குழப்பங்களுக்கு ஆட்படலாம். தொழில் ரீதியாகச் சிலர் உங்களிடம் உதவிகள் கேட்கலாம். சிறிய விடயங்களுக்காகச் சிலருடன் பெரிய அளவில் வாக்குவாதம் செய்யலாம். திட்டமிட்ட வேலைகளில் தடை ஏற்படலாம்.

### மீனம்



வாய்ப்புகள் வாயில் தேடி வரும் நாள். கையில் பணப் புழக்கம் அதிகரிக்கும். ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர். உற்றார் உறவினர்கள் உங்களின் செயற்பாடுகளைப் பார்த்துப் பொறமை கொள்வர். காலை முதல் மாலை வரை பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். சகாய விலையில் சில பொருள்களை வாங்குவீர்கள்.

## மன்னாருக்கு தினமும் அதிகரிக்கும் தென்பகுதி மக்களின் வருகை

மன்னார், மார்ச் 23

மன்னாருக்குத் தென்பகுதி மக்கள் உல்லாசப் பிரயாணிகளாக வருகை தருவது தற்போது அதிகரித்துள்ளது. இவர்கள் தினமும் தனியார் பேருந்துகளிலும், தங்களது சிற்றூர்திகளிலும் வந்து செல்கின்றனர்.

30 ஆண்டுகால யுத்தத்தால் முற்றாக அழிந்துபோன நிலையில் மன்னார் மாவட்டமுள்ளது. இன்னும் அகற்றப்படாத கண்ணிவெடி நிலங்களையும், இடிந்து அழிந்து போன கட்டடங்கள், வீடுகளையும், தூர்ந்து போன குளங்களையும், வாடிவதங்கிப் போன வயல் நிலங்களையும், செத்துப்போன மீன்வளங்களையும் கண்டு, அனுபவித்துச் செல்வதாகவே இவர்களது வருகைகள் அமைந்துள்ளதாக அறியமுடிகின்றது.

இங்கு எந்தவித வளமும், வருவாயும் அற்ற நிலையில் வாடிவதங்கும் மன்னார் மக்களையும், பெருமளவில் இடம்பெயர்ந்து மீள்குடியேறியுள்ள வன்னி மக்களையும் இந்த உல்லாசப் பிரயாணிகள் பொருட்படுத்தாமல் தங்கள் உல்லாசப் பயணத்தை முடித்துக் கொண்டு மீண்டும் சொந்த இடம் திரும்புகின்றனர்.

ஆயினும் மன்னாரில் சுற்றுலா விடுதிகளோ, தங்கும் அறைகளோ, போதிய கழிப்பறைகளோ ஏதுமில்லாத நிலையிலும், இவர்கள் சளைக்காமல் தினமும் வந்து செல்கின்றனர்.

(1)

## உன்னையே நீ அறிந்து கொள்

*தற்கால சூழலிலே நாம் பொறுக்கி எடுத்த குப்பைகள் எம்மிடம் உள்ளது. ஆணவம், அதிகாரவெறி, மமதை, சாதித்தடிப்பு, அண்ணன் தம்பி கொலை, மாமி மருமகள் பிரச்சினை, பக்கத்துவீட்டுக்காணி கோழிச் சண்டை, கத்திக்குத்தும் அடிதடியும், பாலியல் துன்புறுத்தல், சிறுவர் துஸ்பிரயோகம், பாலியல் பிறழ்வு, பொய்சாட்சியம், தாய் பிள்ளையை சிறைக்கனுப்புதல் இதுதான் நாளாந்த பத்திரிகைகளில் தலைப்புகள் ஆகிக் கொண்டிருக்கின்றன.*

*இந்த இழிநிலைக்கு காரணம்தான் என்ன? நாம் எப்பொழுதும் மற்றவர் செயற்பாட்டையே பார்க்கிறோம். ஒரு பாடசாலையோ, அரச நிறுவனமோ அல்லது அரச சார்பற்ற நிறுவனமோ, தொழில் அங்கங்களோ ஏன் தனிப்பட்ட ஒருவன் வாழ்வில் கூட மற்றவர் என்ன செய்கின்றார் என்ற கேள்வியும் ஆய்வுகளும்செய்து அழிவுகளுக்கெல்லாம் அடுத்தவனே காரணம் என்ற பிழையான கருத்தைக் கொடுத்துவருகிறோம்.*



### தவக்காலச் சிந்தனை



*எனக்குள் உறைந்திருக்கும் அழுக்கைக் கலக்கி அகற்ற விரும்பாது மற்றவனைக் கலக்கி துருவி ஆய்வு செய்வதில் நாம் எல்லோரும் வெற்றி வீரர்களாய் வலம் வருகின்றோம். கடலிலே வாழும் மீன்களிலே டொல்பின் தனிப்பட்ட சிறப்புடையது. அது கடலிலே வாழ்ந்தாலும் மற்ற மீன்களைப்போல் சிறு மீன்களை இரையாக எடுத்துக் கொள்வதில்லை. முழு நிறைவு பெற்ற மனிதனும் தன்னையும் பாதுகாத்து பிறரையும் பாதுகாப்பான் (மத் 7:5) குறிப்பிடுவது போல உன் கண்ணிலிருக்கும் விட்டத்தை அகற்றிவிட்டு அடுத்தவன் கண்ணிலிருக்கும் துரும்பை அகற்றச் சொல்.*

*எனவே நாம் நம்மை இனங்கண்டு நமக்குள் அமைதியைத் தேடும் போது நாமும் சமூகமும், நாடும் அமைதி பெறும். ஆழ்கடல் எப்பொழுதும் அமைதியாகவே இருக்கும். நாம் வாழ்வின் ஆழமான சாவை அனுபவிக்க வேண்டும். அடுத்தவரை நாம் எப்போதும் குறை காணமாட்டோம். அறிவாளி அதிகம் பேச மாட்டான், அடுத்தவன் உரிமையில் கை வைக்கவும் மாட்டான். எவனொருவன் அதிகம் பேசுகின்றான் என்றால் [illegible] அடித்தளமில்லாதது. அவனே அங்கும் இங்கும் அலைமோதி [illegible] உருவாக்குகிறான். ஆகவே எம் வாழ்க்கை எத்தகையது என்பதை ஆய்ந்து சிந்திப்போம்.*

ஜெஸ்வின் பற்றிமாராணி, பருத்தித்துறை.


## ஈழத் தமிழர்களுக்கு எதிரான இந்திய-இலங்கை அரசுகளின் கூட்டுச் சதியை தோற்கடிக்க.......



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறீ காந்தா- சிவாஜிலிங்கம் தலைமையில் வட-கீழ் மாநிலத்தின் ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் (யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை) தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு உங்கள் ஆதரவை வேண்டி நிற்கின்றது.

(இடதுசாரி விடுதலை முன்னனியின் சின்னத்தில்)

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு

(TNLA)



X




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழரின் 2ஆவது முள்ளிவாய்க்கால் ஏப்ரல் 9ஆம் திகதி

முழுநாட்டையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து விட்டார் என மஹிந்த ராஜபக்ஷவும் சிங்கள தேசமும் எக்காளமிட்டு கொண்டாடிய நாள் மே 19ஆம் திகதி.







தமிழரின் ஆயுதபலம் தோற்கடிக்கப்பட்டு வீழ்த்தப்பட்டு விட்டோம் என்று தமிழர்கள் விம்மி விம்மி அழுத நாளும் அதுதான்.

தமிழரின் மிகப்பெரிய ஆயுதபலம் வீழ்ச்சியடைந்த நிலையில் இனிமேல் அரசியல் ரீதியான பலத்தை வைத்தே தலைநிமிர முடியும் என்ற நம்பிக்கை மட்டுமே தமிழர்களிடம் இருந்தது.

ஆனால் அந்த அரசியல் பலமும் ஏப்ரல் 9ஆம் திகதியுடன் மஹிந்தவின் கைகளுக்கு போய்விடப்போகிறது.

ஆம் ஈழத் தமிழர்களின் இரண்டாவது முள்ளிவாய்க்கால் அழிவு தினமாக எதிர்வரும் ஏப்ரல் 8ஆம்திகதி அமைய இருக்கின்றது.

இதை நான் சொல்லும் போது இவர் என்ன மஹிந்தவின் பக்கம் சென்று விட்டாரா மஹிந்தாவுக்காக அல்லது டக்ளஸ், கருணாவுக்காக பிரசாரம் செய்ய ஆரம்பித்து விட்டாரா?என்று நீங்கள் யோசிக்கலாம்.

வடக்கு கிழக்கில் தேர்தல் அரசியல் களநிலவரங்களை பார்க்கும் போது எமது அரசியல் பலத்தையும் மஹிந்தவின் கைகளில் கொடுத்துவிடப்போகிறோம் என்றுதான் தெரிகிறது.

சிங்கள தேசம் வகுத்த சூழ்ச்சியினால் வடக்கு, கிழக்கில் இன்று ஒன்றுமையாக இருந்து செயற்பட வேண்டிய தமிழர்கள் தங்களுக்குள் முட்டி மோதிக்கொள்வதும் கடந்த ஜனாதிபதி தேர்தலின் பின்னர் தமது பலவீனம் வெளிப்பட்ட நிலையில் அச்சமடைந்திருந்த டக்ளஸ், கருணா போன்றவர்கள் இன்று காலுக்கு மேல் காலைப்போட்டுக்கொண்டு நாம் படுகின்ற பாட்டைப் பார்த்து சிரித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் வெற்றிக்காக நமது தமிழர்கள் வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் தங்களுக்குள் முட்டி மோதிக்கொண்டிருக்கிறார்கள்.

அது எப்படி சொல்லமுடியும். வடக்கு கிழக்கில் தமிழர்கள்தான் வெற்றிபெறப்போகிறார்கள். உங்களுக்கு என்ன பைத்தியமா பிடித்து விட்டது என்று என்னை கேள்வி கேட்கப்போகி றீர்கள் என்பதும் எனக்கு தெரியும்.

ஆனால் யதார்த்தம் எங்கள் விருப்பத்திற்கு மாறாகத்தான் இருக்கிறது.

ஒவ்வொரு மாவட்டமாக இருக்கும் களநிலவரங்களையும் வாக்குகள் எவ்வாறு பிரிக்கப்பட போகின்றன என்பது பற்றியும் முதலில் பார்ப்போம். அதன் பின்னர் ஏப்ரல் 9ஆம் திகதிக்கு பின்னர் தமிழரின் அரசியல் தலைமை யாரிடம் இருக்கப்போகிறது என்பதை தீர்மானித்துக்கொள்ளுங்கள்.

இம்முறை தமிழர் பிரதேசங்களில் வாக்குகள் பிரிக்கப்பட்டு முன்னணியில் இருக்கும் தமிழ் கட்சிகளின் வாக்கு வங்கிகளை குறைப்பதற்காகவும் தமிழர் பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்காகவும் மஹிந்த ராஜபக்ஷஅரசு மிகவும் திட்டமிட்டு செயற்பட்டிருக்கிறது.

இலங்கையிலேயே ஆகக்கூடிய கட்சிகளும் சுயேச்சைக்குழுக்களும் போட்டியிடும் மாவட்டங்களில் அம்பாறை முதலாம் இடத்திலும் மட்டக்களப்பு இரண்டாம் இடத்திலும் இருக்கிறது.

### யாழ். மாவட்டம்

முதலில் யாழ்ப்பாண மாவட்டத்தை எடுத்துக்கொள்வோம்.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் (கிளி நொச்சி தொகுதி உட்பட) வாக்காளர்களாக தேர்தல் திணைக்களத்தால் 7இலட்சத்து 21ஆயிரத்து 359பேரின் பெயர்கள் பதியப்பட்டுள்ளன. ஆனால் புள்ளிவிவரத்திணைக்களம் இறுதியாக 2008ஆம் ஆண்டு எடுத்த கணக்கெடுப்பின் படி 18வயதிற்கு மேற்பட்டவர்கள் 3இலட்சத்து 70ஆயிரத்து 620பேரே இருக்கின்றனர் எனத் தெரிவித்திருக்கிறது. இறந்தவர்கள், காணாமல் போனவர்கள், யாழ்.மாவட்டத்தை விட்டு பல ஆண்டுகளுக்கு முதல் வெளியேறியவர்கள் உட்பட அங்கு இல்லாத பலரின் பெயர்கள் வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்படாததன் காரணமாகவே 7 லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் அங்கு இருக்கின்றனர் காட்டப்பட்டு வருகிறது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் அங்கிருந்த வாக்காளர்களில் 50 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் வாக்களித்திருந்தனர். ஆனால் 7லட்சம் வாக்காளர்கள் என்ற கணக்கை வைத்துக்கொண்டு அங்கு ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரித்தார்கள் என்று கூட பிரசாரம் செய்தனர்.

2004ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் யாழ்.மாவட்டத்திலிருந்த 95வீதமான மக்கள் வாக்களித்தனர்.

தற்போது கிளிநொச்சி தொகுதி மற்றும் பருத்தித்துறை தொகுதியின் பெரும் பகுதியான வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மக்களில் பலர் இறுதிக்கட்ட போரின் போது இறந்துள்ளனர். பலர் யாழ் .மாவட்டத்திற்கு வெளியில் வவுனியா பகுதிக்கு இடம்பெயர்ந்திருக்கின்றனர். முகாம்களில் இருக்கும் பலர் இடம்பெயர்ந்த வாக்காளர்களாக வாக்களிப்பதற்கு விண்ணப்பிக்கவில்லை. இதன் காரணமாக நடைபெறப்போகும் தேர்தலில் 2இலட்சத்து 50ஆயிரத்திற்கு குறைவானவர்களே வாக்களிக்கப்போகிறார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 9 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 15 அரசியல் கட்சிகளும் 12 சுயேச்சைக் குழுக்களுமாக 27 அணிகள் போட்டியிடுகின்றன. 324 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் குதித்து பம்பரமாக சுற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் கட்சிகள் வரிசையில் தமிழரசுக்கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி, ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக்கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மநாபா அணி, பிள்ளையான் அணி ஆகிய கட்சிகளும், சிங்கள கட்சிகளான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் டக்ளஸ் போன்றோரும், ஐக்கிய தேசியக்கட்சியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனின் மனைவி உட்பட சிலரும், இடதுசாரி முன்னணியில் சிறிகாந்தா, சிவாஜிலிங்கம் போன்றோரும், போட்டியிடுகின்றனர். மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவு பெற்ற மக்கள் கட்சியால் நிறுத்தப்பட்டிருக்கும் சுயேச்சைக்குழுவுக்கு செங்கைஆழியான் க.குணராசாவும், சிறுபான்மை தமிழர் மகா சபையின் சார்பில் போட்டியிடும் சுயேச்சைக்குழுவுக்கு எழுத்தாளர் தெணியானும் தலைமை தாங்குகின்றனர்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 44,154 வாக்குகள் யாழ். மாவட்டத்தில் அளிக்கப்பட்டிருந்தன. இம்முறை இந்த வாக்கு எண்ணிக்கை அக்கட்சிக்கு அதிகரிக்குமே ஒழிய அவை வீழ்ச்சியடைவதற்கு வாய்ப்பு இல்லை. வேட்பாளர்களின் தனிப்பட்ட வாக்கு சேகரிப்பு மற்றும் நிவாரணங்களை நம்பியிருக்கும் அகதி முகாம் மக்கள் அரசு தரப்பினருக்கு தமது ஆதரவை தெரிவித்து வருகின்றமை காரணமாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கான வாக்கு இப்பொதுத்தேர்தலில் 50ஆயிரமாக உயரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மிகுதியாக இருக்கும் ஒரு லட்சத்து 60ஆயிரம் வாக்குகளைத்தான் ஏனைய 26அணிகளும் பிரிக்கப்போகின்றன.

சுயேச்சைக்குழுக்கள் ஆசனங்கள் எதையும் எடுக்கப்போவதில்லையாயினும் அவர்களும் கணிசமான வாக்குகளை பிரித்தெடுப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. தெணியான் தலைமையிலான சிறுபான்மை தமிழர் மகாசபை சார்பில் போட்டியிடும் சுயேச்சைக்குழு சுமார் 10ஆயிரம் வாக்குகளை பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோன்று தனிப்பட்ட செல்வாக்கு காரணமாக சில சுயேச்சைக்குழுக்களும் கணிசமான வாக்குகளை பிரிக்கலாம். இடதுசாரி முன்னணியின் சார்பில் போட்டியிடும் சிறிகாந்தா, சிவாஜிலிங்கம் ஆகியோரும் 10ஆயிரத்திற்கு மேற்பட்ட வாக்குகளை பெறக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுகிறது.

திருமதி மகேஸ்வரன் தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி கூட சுமார் 15ஆயிரம் வாக்குகளை பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.( 2000, 2001ஆண்டு தேர்தல்களில் மகேஸ்வரன் யாழ்ப்பாணத்தில் வெற்றி பெற்றிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது)

வெற்றிபெற முடியாதவர்கள் என கணிக்கப்படும் அரசியல் கட்சிகள், சுயேச்சைக்குழுக்கள் என இந்த 24 அணிகளும் மொத்தம் 50ஆயிரம் வாக்குகளைப் பெறுவார்கள் என்பது திண்ணம்.

எனவே மிகுதி 85ஆயிரம் அல்லது 90 ஆயி ரம் வாக்குகளைத்தான் தமிழரசுக்கட்சியும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியும் தங்களுக்குள் பிரிக் கப்போகின் றன.

இதிலிருந்து தமிழ் கட்சிகள் தங்களுக்குள் பிரிந்து நிற்பதால் யாழ்ப்பாணத் தில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு எவ்வாறு வெற்றிவாய்ப்பை தேடிக்கொடுக்கிறார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என நான் நினைக்கிறேன்.

### வன்னி மாவட்டம்

முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் தொகுதிகளை உள்ளடக்கிய வன்னிமாவட்டத்தை பார்ப்போம். வடக்கு கிழக்கில் வன்னிமாவட்டம் மட்டுமே தமிழர் தரப்பிற்கு ஓரளவு நம்பிக்கை தரக்கூடியதாக இருந்தாலும் தமிழர்களின் வாக்குக்கள் பிரிக்கப்படுவதாலும் தமிழ் மக்கள் சிங்கள கட்சிகளுக்கு வாக்களிப்பதாலும் தமிழர்களுக்கு வர வேண்டிய இரு ஆசனங்கள் முஸ்லிம்கள், சிங்களவர்கள் கைகளுக்கு போகப்போகிறது என்பதே உண்மை.

வன்னி மாவட்டத்தில் 6 பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காக 16 அரசியல் கட்சிகளும் 12 சுயேச்சைக்குழுக்களுமாக 28அணிகளில் 253 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இம்மாவட்ட வாக்காளர்களின் இனவிகிதாசார அடிப்படையில் 5 தமிழர்களும் ஒரு முஸ்லிமும் தெரிவு செய்யப்பட வேண்டும். ஆனால் தமிழர்கள் சிங்கள கட்சிகளுக்கு வாக்களிப்பதால் அதிலிருந்து தெரிவு செய்யப்படப்போவர்கள் முஸ்லிம்களும் சிங்களவர்களுமாகத்தான் இருப்பார்கள்.

வன்னி மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 2இலட்சத்து 66ஆயிரத்து 976ஆக இருந்த போதிலும் இவர்களில் கணிசமானவர்கள் வன்னியில் இறுதி யுத்தத்தின் போது இறந்துவிட்டார்கள். மிகுதிப்பேர் வன்னி மாவட்டத்தை விட்டு இடம்பெயர்ந்து விட்டார்கள். இந்நிலையில் கணிசமான தமிழ் வாக்காளர்கள் இத்தேர்தலில் வாக்களிக்கப்போவதில்லை. இது தவிர வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவில் கடந்த 5 ஆண்டுகளில் சுமார் 11 ஆயிரம் சிங்கள வாக்காளர்கள் அதிகரித்திருக்கிறார்கள். அதேபோன்று மன்னார் மாவட்டத்திலும் சுமார் 7ஆயிரம் முஸ்லிம் வாக்காளர்கள் அதிகரித்திருக்கிறார்கள். ஆனால் வன்னி மாவட்டத்தில் தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்திருக்கிறதே ஒழிய அதிகரிக்கவில்லை. இதுதவிர முல்லைத்தீவு மாவட்டத்தில் மணலாறு பிரதேசத்திலும் சிங்கள வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. (சிலோன் பாம் உட்பட பல பகுதிகளில் சிங்களவர்களின் குடியேற்றம் அதிகரித்து வருவது பற்றி பின்னர் தனியாக பார்ப்போம்)

வன்னி மாவட்டத்தில் 28அணிகள் போட்டியிட்டாலும் தமிழரசுக்கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இணைந்த ஐக்கிய தேசியக்கட்சி, புளொட் ஆகிய கட்சிகளுக்கிடையில்தான் கடுமையான போட்டி இருக்கும் என கருதப்படுகிறது.

இம்முறை கணிசமான தமிழ் வாக்குகள் சிதறடிக்கப்படுவதற்கே அதிக வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இம்முறை கனகரத்தினம், கிஷோர் சிவநாதன் போன்ற தமிழர்களும், ரிஷாத் பதியுதீன், மக்ருப் போன்ற முஸ்லிம் வேட்பாளர்களும், பிரேமரத்ன சுமதிபால, சமிந்த உபுல் பாலசூரிய ஆகிய சிங்களவர்களும் போட்டியிடுகின்றனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடும் கனகரத்தினம், கிஷோர் சிவநாதன் போன்றவர்கள் கணிசமான வாக்குகளைப்பெற்று அக்கட்சிக்கு கொடுத்தாலும் அவர்கள் அக்கட்சியிலிருந்து தெரிவு செய்யப்படப்போவதில்லை. ஏனெனில் முஸ்லிம்கள் அனைவரும் ஒருமித்து தமது விருப்பு வாக்குகளை ரிஷாத் பதியுதீன், மக்ருப் போன்றவர்களுக்கே அளிப்பார்கள். முஸ்லிம் வேட்பாளர்களே 30ஆயிரத்திற்கு மேற்பட்ட விரும்பு வாக்குகளை பெறும் சந்தர்ப்பமே காணப்படுகிறது. இவ்வளவு விருப்பு வாக்கை கனகரத்தினமோ கிஷோரோ, பெற முடியாது. எனவே தமிழ் வேட்பாளர்கள் வாக்குகளை எடுத்து முஸ்லிம் சிங்கள வேட்பாளர்களைத் தான் வெல்ல வைக்க முடியும். அந்தக் காரி யத்தை இந்த இருவரும் கச்சி தமாகச் செய்து முடிப் பார் கள் என்பதில் சந்தே கம் இல்லை.

இம்முறை தமிழரசுக்கட்சி 3 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இரு ஆசனங்களையும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஓர் ஆசனத்தையும் பெறலாம் என நம்பப்படுகிறது. சில வேளைகளில் சித்தார்த்தன் தலைமையிலான புளொட்டும் ஓர் ஆசனத்தை பெறலாம்.



### திருகோணமலை மாவட்டம்

திருகோணமலை, மூதூர், சேருவில தொகுதிகளை உள்ளடக்கிய திருகோணமலை மாவட்டத்தில் 4 பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காக 17அரசியல் கட்சிகளும், 14 சுயேச்சைக்குழுக்களுமாக 31அணிகளில் 217வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். 2,41,133 வாக்காளர்கள் பதிவு செய்யப் பட் டுள்ளனர்.





வடக்கு , கிழக்கில் திருகோணமலை அம்பாறை மாவட்டங்களே பெரும் சர்ச்சையையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது.



கடந்த பொதுத்தேர்தலில் அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றிணைந்து போட்டியிட்டதன் காரணமாகவே இரு பிரதிநிதிகளை பெற முடிந்தது. இம்மாவட்டத்தில் இரு தமிழ் பிரதிநிதிகளும் முஸ்லிம்கள், சிங்களவர்கள் தரப்பிலிருந்து தலா ஒவ்வொருவரும் தெரிவு செய்யப்பட வேண்டும். ஆனால் தமிழ் வாக்குகள் பிரிக்கப்பட்டால் ஒரு தமிழர் கூட தெரிவு செய்யப்பட முடியாத நிலை கடந்த காலங்களில் ஏற்பட்டிருக்கிறது.

திருகோணமலை மாவட்டத்தில்

**சுவிஸிலிருந்து**
**- இரா. துரைரத்தினம் -**

தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ, ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மநாபா அணி, உட்பட சில தமிழ் கட்சிகளும் சிங்கள கட்சிகளான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி, சிவாஜிலிங்கம் அணி போட்டியிடும் இடதுசாரி முன்னணி உட்பட சிங்கள கட்சிகளும் தமிழ் வாக்குகளைப்பிரிப்பதால் இம்முறை திருகோணமலையில் தமிழர்

(14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## SPECIAL GUIDE FOR 2010 A/L ARTS STUDENTS

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஒகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

## அரசியல் விஞ்ஞான மூலத்துவங்கள் | பகுதி - I

**✱ 1-10 வரையுள்ள வினாக்களில் இடம்பெறும் கூற்றுக்களுள் ஒன்று வினாவின் தலைப்புக்குப் பொருத்தமற்றது. பொருத்தமற்ற அக்கூற்றைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

01. அரசறிவியல் என்பதன் பொருள்,
    1) அரசு பற்றிய கலையாகும்.
    2) அரசாங்கம் பற்றிய கலையாகும்.
    3) சமூக நடத்தை பற்றிய கலையாகும்.
    4) மனித உரிமைகள் பற்றிய கலையாகும்.

02. அரசறிவியலின் இயல்பு என்பது,
    1) மனிதனின் நடத்தையை ஆராய்தல் என்பதாகும்.
    2) அதிகாரத்தின் தன்மை பற்றி ஆய்வுசெய்தல் என்பதாகும்.
    3) அரசாங்கத்தின் கொள்கை உருவாக்கம் பற்றி ஆராய்தல் என்பதாகும்.
    4) அரசுக்கும் பிரஜைக்கும் இடையிலான தொடர்புகளை ஆராய்தல் என்பதாகும்.

03. அரசறிவியலின் பாடப்பரப்புக்கள் யாதெனில்,
    1) கல்வியும் கலாசாரமும்.
    2) முரண்பாட்டுக் கல்வியும் முரண்பாட்டுத் தீர்வும்.
    3) பிரதிநிதித்துவமும் பொதுஜன அபிப்பிராயமும்.
    4) அரசின் தோற்றமும் அதன் இயல்புகளும்.

04. அரசியல் கற்கைக்கான சமூகவியல் அணுகுமுறையின் பண்புகளாவன,
    1) அரசியலை அதன் சமூகச் சூழலில் வைத்து ஆராய்தல்.
    2) மனிதர்களின் அரசியல் நடத்தையைக் கற்றல்.
    3) அரசியலின் சமூகத் தளத்தினைக் கற்றல்.
    4) சமூகத்தின் தொடர்புகளையும் கட்டமைப்புக்களையும் ஆராய்தல்.

05. அரசு என்பது,
    1) சட்டம் சார்ந்த சமூக ஸ்தாபனமே அரசாகும்.
    2) அரசாங்கத்தை ஆளும் மக்கள் குழுவே அரசாகும்.
    3) ஒரு நிச்சயமான ஆள்புலப் பிரதேசத்தில் அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த மக்கள் குழுவே அரசாகும்.
    4) இறைமை அதிகாரத்தைத் தனியுரிமையாகப் பெற்ற சமூக ஸ்தாபனமே அரசு ஆகும்.

06. தேசிய அரசின் தோற்றத்திற்குப் பங்களிப்புச்செய்த காரணிகள்,
    1) கத்தோலிக்க திருச்சபையின் வீழ்ச்சி.
    2) ஐரோப்பிய மறுமலர்ச்சி.
    3) மத்தியதர வர்க்கத்தினரின் தோற்றம்.
    4) மானியமுறையின் எழுச்சி.

07. அரசாங்கம் என்பது,
    1) அரசின் பிரதிநிதியும் கருவியுமாகும்.
    2) அரசின் உருவாக்கக் காரணிகளுள் ஒன்றாகும்.
    3) அரசைக் காக்கும் நிறுவனம் ஆகும்.
    4) இறைமை அதிகாரத்தைப் பெற்ற நிறுவனமாகும்.

08. சமூகம் என்பது,
    1) அரசு செயற்படும் ஆட்புலமே சமூகமாகும்.
    2) அரசை விட பரந்த அமைப்பே சமூகமாகும்.
    3) அரசின் தோற்றத்திற்கு அடிப்படையான அமைப்பே சமூகமாகும்.
    4) இறைமை அதிகாரத்தைப் பெற்றிராத நிறுவனமே சமூகமாகும்.

09. சங்கங்கள் என்பது,
    1) தனிப்பட்ட நோக்கங்களைக் கொண்ட மக்கள் குழுவாகும்.
    2) அரசின் இறைமை அதிகாரத்திற்கு உட்பட்ட நிறுவனங்களாகும்.
    3) அரசின் அடிப்படைக் கூறுகளில் ஒன்றாகும்.
    4) அரசை விட அந்தஸ்தில் குறைந்த நிறுவனமாகும்.

10. அரசியல் அதிகாரம் என்பது,
    1) இறைமை அதிகாரமாகும்.
    2) சட்டத்தை ஆக்கும் அதிகாரமாகும்.
    3) சமூக அதிகாரமாகும்.
    4) பிணக்குகளைத் தீர்க்கும் அதிகாரமாகும்.

**✱ 11-17 வரையான ஒவ்வொரு வினாவிலும் நான்கு கூற்றுக்கள் உள்ளன. ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான சேர்மானத்தைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் இடுக.**

11. தெய்வீக உரிமைக் கோட்பாடு,
    A - அசரைக் கடவுளின் படைப்பு என்கிறது.
    B - அரசிற்கு அடிபணிதல் மத கடமையாகும் என்கிறது.
    C - ஆட்சியாளர்கள் மக்களின் விருப்பையே நடைமுறைப்படுத்தவேண்டும் என்கிறது.
    D - ஆட்சியாளனின் சட்டம் கடவுளின் சட்டம் என்கிறது.
    1) ABC 2) BCD 3) ACD 4) ABD

12. அரசு பற்றிய தாராண்மைக் கோட்பாட்டின்படி,
    A - அரசு தற்காலிக பொதுநல தாபனமாகும்.
    B - அரசு முழுச் சமூகத்தின் சங்கமாகும்.
    C - அரசு சமூக பொதுநலன்களின் பாதுகாவலனாகும்.
    D - அரசு மனித இனம் இருக்கும் வரை நிலைத்திருக்கும்.
    1) ABC 2) BCD 3) ACD 4) ABD

13. சோசலிஸ அரசின் பண்புகளாவன,
    A - அரசு தொழிலாளர் வர்க்கக் கருவியாகச் செயற்படும்.
    B - அரசு சமூக நலன் பேணும் தாபனமாகச் செயற்படும்.
    C - அரசு நவீன பொதுவுடைமைச் சமூகத்தில் பட்டொழிந்துவிடும்.
    D - சோசலிஸ அரசில் வர்க்கங்களுக்கு இடையிலான சகவாழ்வு நிலவுவது இல்லை.
    1) ABC 2) BCD 3) ACD 4) ABD

14. பாசிசக் கோட்பாட்டின்படி,
    A - மக்களுக்காக அரசல்ல. அரசுக்காகவே மக்களாகும்.
    B - அரசின் இருப்புக்கு யுத்தம் அவசியமாகும்.
    C - அரசுக்கு அடிபணிந்தே மக்கள் உரிமைகளைப் பெற்றுக்கொள்வர்.
    D - அரசின் நோக்கம் நுண்ணறிவுடைய நற்பிரஜைகளை உருவாக்குவது ஆகும்.
    1) ABC 2) BCD 3) ACD 4) ABD

15. உரிமைகள் பற்றிய எண்ணக்கருவுக்குப் பொருத்தமான சேர்மானம் எது?
    A - அரசினால் அங்கீகரிக்கப்பட்ட உரித்துக்களே உரிமைகள் ஆகும்.
    B - சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட மனிதனின் கோரிக்கைகளே உரிமைகள் ஆகும்.
    C - உரிமைகள் ஜனநாயகத்துடனும் சுதந்திரத்துடனும் ஒன்றிணையும்.
    D - உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் நேர்க்கணியத் தொடர்பு உள்ளது.
    1) ABC 2) BCD 3) ACD 4) ABD

16. சுதந்திரத்திற்குப் பொருத்தமான சேர்மானம் எது?
    A - சுதந்திரம் என்பது கட்டுப்பாடின்மையாகும்.
    B - சலுகைகள் இருப்பின் சுதந்திரம் நிலவாது.
    C - அதிகாரம் இல்லாத இடத்தில் சுதந்திரம் இருக்க முடியாது.
    D - வரையறைகளுக்கு உட்பட்டு அனுபவிக்கும் உரிமைகளே சுதந்திரமாகும்
    1) ABC 2) BCD 3) ACD 4) ABD

17. சமத்துவம் என்பது,
    A - சகலரும் சமமாகக் கருதப்படுவதே சமத்துவமாகும்.
    B - சகலரும் சமமாகக் கவனிக்கப்படுவதே சமத்துவமாகும்.
    C - சகலரும் சட்டத்தின் முன் சமமானவர்கள் எனக் கருதப்படுவதே சமத்துவம் ஆகும்.
    D - சகலரும் ஒரே மாதிரி நடத்தப்படுவதே சமத்துவமாகும்.
    1) ABC 2) BCD 3) ACD 4) ABD

**✱ 18-25 வரையான வினாக்களில் இடம்பெறும் கூற்றுக்களுள் ஒன்று மட்டுமே வினாவின் தலைப்புக்கு பொருத்தமானதாகும். பொருத்தமான அக்கூற்றைத் தெரிவுசெய்க.**

18. இறைமையின் பண்புகளாவன,
    1) அது கட்புலனாகாததும் எல்லையுடையதுமாகும்.
    2) அது சட்டபூர்வமானதும் சட்டத்தைவிட மேலானதுமாகும்.
    3) அது அரசாங்கத்தின் அடிப்படைக் கூறுகளில் ஒன்றாகும்.
    4) அது நீதிமன்றங்களினாலேயே பிரயோகிக்கப்படுகிறது.

19. சட்டவாட்சியின் அம்சங்களாவன,
    1) சட்டத்தின் முன் சகல பிரஜைகளும் சமமாகக் கருதப்படுதல்.
    2) பொதுச்சட்டத்திற்கு மேலாக வேறு சட்டங்கள் இருத்தல்.
    3) சகல சட்டங்களும் பாராளுமன்றத்தினால் ஆக்கப்படுதல்.
    4) சட்டப்படியின்றி ஒருவனைக் கைதுசெய்ய முடியாதிருத்தல்.

20. மனிதன் சட்டத்திற்கு அடிபணிவதற்கான காரணிகளாவன,
    1) சட்டத்தை மீறினால் பொலிஸாரினால் தாக்கப்படுதல்.
    2) சட்டம் சகலரையும் சமமாகக் கருதுதல்.
    3) சட்டம் பற்றி சகலருக்கும் அறிவுறுத்தப்பட்டிருத்தல்.
    4) சட்டம் சமூகத்தில் அமைதியை ஏற்படுத்த உதவுதல்.

21. அதிகார வேறாக்கம் என்பது,
    1) அரசுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் அதிகாரங்கள் பிரிக்கப்படுவதைக் குறிக்கிறது.
    2) மத்திய அரசாங்கத்திற்கும் சமஷ்டி அலகுகளுக்கும் இடையில் அதிகாரம் பிரிக்கப்படுவதைக் குறிக்கிறது.
    3) சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறைகளுக்கு இடையில் அதிகாரம் பிரிக்கப்படுவதைக் குறிக்கிறது.
    4) அது சுதந்திரத்தையும் நல்லாட்சியையும் அனுபவிப்பதற்குத் தடையாக உள்ளது.

22. ஒரு நாட்டுக்கு ஏன் அரசியல் யாப்பு அவசியமானது?
    1) மனித உரிமைகளையும் சுதந்திரங்களையும் அடக்குவதற்கு.
    2) அரசியல் அஸ்திரத்தை ஏற்படுத்துவதற்கு.
    3) ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு.
    4) தேர்தலை நடத்துவதற்கு.

23. யாப்புறுவாதம் என்பது,
    1) வழக்காறுகளை அடிப்படையாகக் கொண்ட ஆட்சியாகும்.
    2) அறநெறிகளை அடிப்படையாகக் கொண்ட ஆட்சியாகும்.
    3) அரசியல் யாப்பின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்ட ஆட்சியாகும்.
    4) அரசியல் யாப்பில்லாத ஆட்சியாகும்.

24. ஜனநாயகத்தின் பண்புகளாவன,
    1) போட்டித்தன்மையற்ற அரசியல் கட்சி முறை காணப்படுதல்.
    2) பொறுப்புக்கூறுதல்.
    3) தனிநபர் ஆட்சி நிலவுதல்.
    4) அரசும் தேசமும் முக்கியத்துவம் பெறுதல்.

(13 ஆம் பக்கம் பார்க்க)



ஆசிரியர்:- S.A.யோகிலிங்கம் B.A (Hons), MA,
கொட்டாஞ்சேனை நல்லாயன் கன்னியர் மடம், கொழும்பு-13.

2010 உயர்தர மாணவர்களுக்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு பெறுமதிமிக்க படைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் விஞ்ஞான மூலத்துவங்கள் பகுதி - I: தொடர்ச்சி......

25. தேர்தல்கள் என்பது,
    1) வாக்காளர்களையும் பிரதிநிதிகளையும் ஒருவருக்கொருவர் பகையாளியாக்கும் ஓர் ஊடகமாகும்.
    2) பிரதிநிதித்துவ முறைகளில் ஒன்றாகும்.
    3) வாக்காளர்களின் தேவையை நிறைவேற்றும் ஓர் ஊடகமாகும்.
    4) மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் ஒரு முறையாகும்.

*** சமஷ்டி, ஒற்றையாட்சி அரசியல் யாப்புகளோடு சம்பந்தப்பட்ட சில இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை வாசித்து 26ஆம், 27ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

A - முழு நாட்டுக்கும் தனி நிர்வாக முறை பின்பற்றப்படுதல்.
B - பல்லின சமூகம் வாழும் நாட்டுக்குப் பொருத்தமானதாக இருத்தல்.
C - நாட்டுப்பற்று கூறுபோடப்பட்டிருத்தல்.
D - மத்திய அரசுக்குக் கீழ்ப்பட்ட உள்ளூர் மன்றங்கள் காணப்படுதல்.
E - பல அதிகார மையங்கள் காணப்படுதல்.
F - மத்திய அரசாங்கம் பிராந்தியங்களுக்கு அதிகாரங்களை வழங்குதல்.

26. ஒற்றையாட்சி முறைக்குப் பொருத்தமான சேர்மானம் எது?
    1) ABC 2) ADF 3) ACF 4) BEF

27. சமஷ்டி அரசியல் யாப்புக்குப் பொருந்தும் சேர்மானம் எது?
    1) ADF 2) ACF 3) BCE 4) ACE

*** பிரதிநிதித்துவ முறைகளோடு சம்பந்தப்பட்ட சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை வாசித்து விளங்கி 28ஆம், 29ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

A - மக்களின் அரசியல் பங்குபற்றுதலை அதிகரித்தல்.
B - இன ஐக்கியத்தை ஏற்படுத்துதல்.
C - கடினமான வாக்களிப்பு முறையைக் கொண்டிருத்தல்.
D - முன்னணியில் உள்ள வேட்பாளரை மட்டும் பிரதிநிதியாகத் தெரிவு செய்தல்.
E - ஜனநாயகம் உயர்ந்த மட்டத்தில் பேணப்படுதல்.
F - சிறிய கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொடுத்தல்.

28. எளிய பெரும்பான்மை முறைக்குப் பொருத்தமான சேர்மானம் எது?
    1) ABE 2) ACD 3) ACF 4) ABD

29. விகிதசம பிரதிநிதித்துவ முறைக்குப் பொருத்தமான சேர்மானம் எது?
    1) CAF 2) CEF 3) ACE 4) ABE

*** 30-34 வரையான வினாக்கள் விதிக்கப்பட்டுள்ள நாடுகளின் அரசாங்க முறை பற்றியதாகும். அவ்வினாக்களுக்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.**

30. பிரித்தானியப் பாராளுமன்றம்,
    A - இரு மன்றங்களையும் முடியையும் கொண்டது.
    B - நாடு முழுவதற்கும் சட்டமியற்றும் அதிகாரத்தை அது பெற்றுள்ளது.
    C - அதன் சட்டவாக்க அதிகாரம் தற்போது சவால்களுக்கு உட்பட்டுள்ளது.
    D - அது நாம நிர்வாகியினால் மட்டுமே கலைக்கப்படுகிறது.
    1) ABC 2) BCD 3) ACD 4) ABD

31. ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி,
    A - வாக்காளர்களின் அறுதிப் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவுசெய்யப்படுகிறார்.
    B - தேர்வாளர் கல்லூரியினால் தெரிவு செய்யப்படுகிறார்.
    C - காங்கிரஸினால் இயற்றப்படும் சட்டங்களுக்கு ஒப்பமிடும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார்.
    D - அரசினதும், அரசாங்கத்தினதும் அமைச்சரவையினதும் தலைவராவார்.
    1) ABC 2) BCD 3) ACD 4) ABD

32. இந்திய தலைமை அமைச்சர்,
    A - நாம நிர்வாகியினால் நியமிக்கப்படுகிறார்.
    B - ஜனாதிபதிக்கும் மாநில சட்டமன்றங்களுக்கும் பொறுப்புக்கூறவேண்டியவர்.
    C - பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு சிபாரிசு செய்பவர்.
    D - நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் பதவி நீக்கப்படுவார்.
    1) ABC 2) BCD 3) ACD 4) ABD

33. முன்னாள் சோவியத் குடியரசின் சுப்றீம் சோவியத் மன்றம்,
    A - இரு மன்றங்களைக் கொண்டிருந்தது.
    B - நியமன உறுப்பினர்களையும் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களையும் கொண்டிருந்தது.
    C - இரு மன்றங்களும் சமமான அதிகாரத்தைக் கொண்டிருந்தது.
    D - சோவியத் யூனியனுக்கான பிரசீடியத்தை (தலைமைக்குழு) தெரிவு செய்தது.
    1) ABC 2) BCD 3) ACD 4) ABD

34. பிரான்ஸிய ஜனாதிபதி,
    A - தனது சுய விருப்பின் பேரில் அமைச்சர்களை நியமிக்கின்றார்.
    B - நீதித்துறைச் சுதந்திரத்தின் பாதுகாவலராவர்.
    C - ஐந்துவருட காலத்திற்கு மக்களால் தெரிவுசெய்யப்படுகிறார்.
    D - அமைச்சரவைத் தீர்மானங்களுக்கு ஒப்புதலளிக்கிறார்.
    1) ABC 2) BCD 3) ACD 4) ABD

*** 35-40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரு கூற்றுக்கள் இடம் பெறுகின்றன. ஒவ்வொரு வினாவிலும் இடம்பெறும் சோடிக் கூற்றுக்குப் பொருத்தமான விபரிப்புக்களை கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் இருந்து தெரிவுசெய்து ஒவ்வொரு வினாவுக்கும் எதிரே உள்ள அடைப்புக் குறிக்குள் 1,2,3,4 என அடையாளம் இடுக.**

| கூற்று I | கூற்று II | இலக்கம் |
|---|---|---|
| உண்மை | உண்மை | 1 |
| பொய் | உண்மை | 2 |
| உண்மை | பொய் | 3 |
| பொய் | பொய் | 4 |

| | கூற்று I | கூற்று II |
|---|---|---|
| 35. | ஓர் அரசியல் அலகாக ஒன்றுபட்டுச் செயற்படும் குடிமக்களை உள்ளடக்கிய ஒழுங்குபடுத்தப்பட்ட குழுக்களே அரசியல் கட்சியாகும். | அரசியல் கட்சிகள் ஒரு நாட்டின் அரசியலில் நேரடியாக ஈடுபடுவதில்லை. |
| 36. | ஆட்சியில் செல்வாக்குச்செலுத்தி தமது நலன்களை அடைந்துகொள்ளும் அமைப்புக்களே அமுக்கக் குழுக்களாகும். | அமுக்கக் குழுக்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதை நோக்காகக் கொண்டவையல்ல. |
| 37. | மந்திரிசபை அரசாங்க முறையில் சகல நிர்வாகக் கடமைகளும் உண்மை நிர்வாகியின் பெயராலேயே மேற்கொள்ளப்படும். | ஜனாதிபதி அரசாங்க முறையில் சட்டத்துறைக்கும், நிர்வாகத்துறைக்கும் இடையிலான தொடர்பு மிக நெருக்கமானதாகும். |
| 38. | ஒப்பங்கோடல் நேரடி ஜனநாயக முறைகளில் ஒன்றாகும். | ஒப்பங்கோடல் சில நாடுகளில் பாராளுமன்றத் தேர்தலுக்குப் பதிலாக நடத்தப்படுவதுமுண்டு. |
| 39. | சட்டத்துறையினால் ஆக்கப்படும் சட்டங்களின் யாப்புறு தன்மையைப் பரிசீலிப்பதே நீதிப் புனராய்வு அதிகாரமாகும். | நீதிப்புனராய்வு அதிகாரம் மக்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாக்கிறது. |
| 40. | கூட்டாக முடிவெடுத்தலும் விளைவுகளுக்குக் கூட்டாகப் பொறுப்புக் கூறுதலுமே கூட்டுப்பொறுப்பாகும். | கூட்டுப்பொறுப்பு அரசாங்கத்தின் ஒற்றுமையையும் பலத்தையும் அதிகரிக்கிறது. |

-நிறைவுற்றது-

## உயர்தர அளவையியல்: கற்றல் குறிப்புக்கள்

### கடந்தவார (16.03.2010) தொடர்ச்சி.....

**வானியல் பணிகள்**

1. 17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குழப்பத்திலிருந்த வானியல் கோட்பாட்டைத் தெளிவாக்கினார். (1404 இல் கொப்பனிக்கஸின் கருத்தை சரியானதென நிறுவிக் காட்டினார்)
2. தொலைநோக்கி கண்டுபிடிப்பு : லிப்பர்ஷி (Lippershy) என்ற ஒல்லாந்து மூக்குக் கண்ணாடித் தயாரிப்பாளர் இரண்டு வில்லைகளை சம அளவு தூரத்தில் வைத்து நோக்கி அவ்வில்லைகளுக்கு அப்பால் வைக்கப்படும் பொருள் பெரிதாகத்தோன்றும் என்ற உண்மையைக் கண்டுபிடித்தார். இவ்வுண்மையை ஆதாரமாகக்கொண்டு கலிலியோ தொலைநோக்கியைக் கண்டுபிடித்தார்.

அ. கலிலியோ முதலில் தயாரித்த தொலைக்காட்டி பொருட்களை மும்மடங்கு பெருப்பித்து காட்டியதுடன் அதன் உண்மையான தூரத்தில் மூன்றில் ஒரு பங்காக அண்மையில் சுறுக்கியும் காட்டியது.
இக்கருவியைப் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் கண்டுபிடித்தார்.
   1) ஆறு தாரகைகள் என வர்ணிக்கப்படும் உடுத்தொகுதியைப் பார்த்து 36 உடுக்களை அவதானித்தார்.
   2) பால்வீதி (Milkway) யைக் கண்டுபிடித்தார்.
   3) சந்திரனின் மேற்பரப்பை அவதானித்தார்.

ஆ. எண்மடங்கு பெருப்பித்துக் காட்டும் தொலைகாட்டியைக் கண்டுபிடித்தார்.

இ. இக்கருவியில் திருப்தியடையாத கலிலியோ முப்பது மடங்கு பெருப்பித்துக் காட்டக்கூடிய தொலைகாட்டி ஒன்றை வடிவமைத்தார்.
   1) இக்கருவியினூடாக சந்திரனின் மேற்பரப்பை அவதானித்து அங்கு பெரும் மலைத்தொடர்களும், பள்ளங்களும், பரந்த சமவெளிகளும் உண்டு என்பதை உலகறியச் செய்தார்.
   2) 1610 இல் தனது கருவியை வியாழனை நோக்கித் திருப்பி அதற்கு அண்மையில் நான்கு சந்திரன்கள் உண்டு என்பதை உலகறியச் செய்தார்.
   3) இத்துணைக் கோள்களில் ஒன்று வியாழனைச் சுற்றிவர நாற்பத்திரண்டு மணித்தியாலமும், ஏனையவை மூன்றும் பதினேழு நாட்கள் எடுக்கும் என்பதையும் கணித்துக் கூறினார்.
   4) சூரியனை நோக்கி, அதில் சூரிய களங்கள் (Sunspoks) இருப்பதைக் கண்டறிந்தார்.
   5) சந்திரனைப் போலவே சுக்கிரனுக்கும் வளர்ச்சியும் தேய்வும் உண்டு என்பதை அவதானித்து வெளிப்படுத்தினார்.

கலிலியோ விண்ணில் உள்ள பொருட்களைப் பற்றி இயற்கையான அவதானிப்புகளில் ஈடுபட்டார். இந்த இயற்கையான அவதானிப்பை மேற்கொள்வதற்கு தொலைநோக்கி என்ற கருவியைப் பயன்படுத்தினார். இந்த தொலைநோக்கியைக் கொண்டு வெவ்வேறு நாட்களில் அவர் பல அவதானிப்பை மேற்கொண்டார். இந்த அவதானத்தில் வெள்ளி என்ற கோள் வடிவத்தில் மாற்றம் அடைந்தமை தெரியவந்தது.

கலிலியோ அவதானித்த வெள்ளிக்கிரகம், செவ்வாய்க்கிரகம் போன்ற இரு கோள்கள் வெவ்வேறு காலங்களில் பருமனில் மாற்றம் அடைந்தமை தெரிந்தது. கலிலியோ வெள்ளி, செவ்வாய் கிரகங்களில் பருமன் கூடிக் குறைவதனையும் அவதானித்தார். இந்த முடிவைப் பெறுவதற்கு அவர் பல தடவை அவதானங்களை மேற்கொண்டதன் மூலம் பெறப்பட்டதாகும். இந்த முடிவு எல்லாவற்றையும் கலிலியோ பதிவுசெய்து கொண்டார்.

### ஜோகன்னஸ் கெப்லர் (1571 - 1630)

1571 இல் ஜேர்மனியில் பிறந்த இவர் கோள்களின் நீள்வளைய விதிகளைக் கண்டுபிடித்த சிறந்த வானியலாளராகவும் கணித மேதையாகவும் விளங்கினார். இவர் 1596 இல் வானியல் பற்றிய தனது முதல் நூலை எழுதினார். இந்நூல் அவர் விளக்கிய கோட்பாடுகள் தவறாக அமைந்த போதிலும் அதில் அவர் கையாண்ட முறைகளைக் கருத்திற்கொண்ட தைகோடி பிறாகே தனது ஆய்வுகூடத்தில் வேலைசெய்ய வருமாறு கேட்டார். பிறேகேயின் மரணத்தின் பின் அவர் விட்டுச் சென்ற குறிப்புக்களைப் பயன்படுத்தி செவ்வாய்க்கிரகத்தைப் பற்றி ஆய்வுகளை மேற்கொண்டார். ஞாயிற்றுத் தொகுதியின் ஒழுங்கமைப்புப் பற்றிய ஆய்வுகளில் இவர் ஈடுபட்டார். இதற்கு முன் மாதிரியாக கணித அடிப்படையிலான ஞாயிற்றுத்தொகுதியின் மாதிரி உரு ஒன்றையும் இவர் அமைத்தார். (இதனை அமைக்கும்போது கெப்லர் அரிஸ்டோட்டிலின் கருத்துக்களால் கவரப்பட்டிருந்தார்) இதனால் இத்திட்டமும் தவறாகவே அமைந்தது.

கெப்லர் கோள்களின் நீள்வட்ட சுற்றோட்டத்தை கண்டுபிடித்தார். அதாவது, கெப்லர் வாழ்ந்த காலத்தில் செவ்வாய்க்கிரகத்தின் ஈர்ப்பு சக்தி தொடர்பாக பாரிய பிரச்சினை நிலவியது. ''தைக்கோடி பிறாகே'' இந்த கடமையினை கெப்லருக்குச் சமர்ப்பித்தார்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழரின்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதித்துவம் இல்லாமல் போய் சிறிலங்காவின் ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் வெற்றிபெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

2004ஆம் ஆண்டு தேர்தலின் போது தமிழரசுக் கட்சி 68ஆயிரத்து995 வாக்குகளைப் பெற்றது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 65 ஆயிரத்து187 வாக்குகளையும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி 31ஆயிரத்து53 வாக்குகளையும் ஐக்கிய தேசியக் கட்சி 15ஆயிரத்து 693 வாக்குகளையும் பெற்றன.

கடந்த முறை தமிழரசுக்கட்சிக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் இடையில் 38ஆயிரத்து8 வாக்கு வித்தியாசமே காணப்பட்டது.

இந்த முறை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு சாதகமான விடயங்கள் சிலவும் காணப்படுகின்றன.

தற்போது சிறிலங்கா முஸ்லிம்காங்கிரஸ் கட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் போட்டியிடுகின்றன. திருகோணமலையில் முஸ்லிம்களின் வாக்குகள் பிரிந்து போகாது இருப்பதற்காக ஐக்கிய தேசியக்கட்சி தன்னுடைய வேட்பாளர் பட்டியலில் சிங்களவர்களையும் தமிழர்களையும் இணைத்திருக்கிறது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பட்டியலில் கடந்த தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் முதன்மை வேட்பாளராக இருந்திருந்த மக்ருப் இம்முறை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தன்னுடைய வேட்பாளர் பட்டியலில் சேர்த்திருக்கிறது. கடந்த முறை மக்ரூப் தன்னுடைய தனிப்பட்ட செல்வாக்கின் காரணமாக 4ஆயிரம் வாக்குகளைப்பெற்றிருந்தார். இது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் வாக்கு பலத்தை அதிகரிக்கவே செய்யும்.

அதுமட்டுமன்றி 2004ஆம் ஆண்டில் 74ஆயிரத்து869 ஆக காணப்பட்ட மூதூர் தொகுதி முஸ்லிம் வாக்காளர்களின் தொகை 2010ஆம் ஆண்டில் 85ஆயிரத்து401 ஆக அதிகரித்துள்ளது. 5ஆண்டுகளில் 10ஆயிரத்து542 பேர் புதிதாக வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

இதனால் இம்முறை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 70ஆயிரத்திற்கு மேற்பட்ட வாக்குகளை பெறக்கூடிய சாதகமான நிலையும் அக்கட்சியே ஆகக்கூடிய வாக்குகளைப் பெறக்கூடிய கட்சியாகவும் காணப்படுகிறது.

அதே போன்று 2004ஆம் ஆண்டில் 63 ஆயிரத்து161 ஆக காணப்பட்ட சேருவில தொகுதியின் பதியப்பட்ட சிங்கள வாக்காளர் எண்ணிக்கை 2010இல் 69ஆயிரத்து47 ஆக அதிகரித்துள்ளது. 5 ஆண்டுகளில் அத்தொகுதியில் 5ஆயிரத்து 886 பேர் புதிய வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் தமிழ் மக்களின் வாக்காளர் தொகை வீழ்ச்சியடைந்திருக்கிறது.

முஸ்லிம் சிங்கள வாக்காளர் அதிகரிப்பு வீதத்துடன் ஒப்பிடும் போது கடந்த 5 வருடங்களில் 12ஆயிரம் தமிழ் வாக்காளர்கள் அதிகரித்திருக்க வேண்டும். அதற்கு பதிலாக தமிழ் வாக்காளர் தொகை வீழ்ச்சியடைந்திருக்கிறது.

முஸ்லிம் சிங்கள வாக்காளர்கள் தொகை அதிகரித்த அதேவேளை அவர்களின் வாக்குகள் சிதறடிக்கப்படாமல் இருக்க கடந்த முறை தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒரே அணியில் போட்டியிட்டு பெற்ற 68ஆயிரத்து 995 வாக்குகளைத்தான் அங்கு போட்டியிடும் 10க்கு மேற்பட்ட தமிழ் கட்சிகளும் 15க்கு மேற்பட்ட சுயேச்சைக்குழுக்களும் இம்முறை பிரிக்கப்போகின்றன.

தமிழரசுக்கட்சியைத்தவிர அங்கு போட்டியிடும் ஏனைய தமிழ் கட்சிகள் 10ஆயிரம் வாக்குகளுக்கு மேல் பெறப்போவதில்லை. தாங்கள் ஒருபோதும் வெற்றிபெறப்போவதில்லை என்று அங்கு வேட்பாளர்களை நிறுத்தியிருக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஆனந்தசங்கரி, சிவாஜிலிங்கம், ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மநாபா அணி சிறிதரன், பிள்ளையான் போன்றவர்களுக்கு நன்றாக தெரியும். திருகோணமலையைப்பொறுத்தவரை தமிழ் கட்சிகளில் வெற்றிபெறக்கூடிய வாக்கு வங்கியைக்கொண்ட ஒரே ஒரு தமிழ்கட்சி தமிழரசுக்கட்சிதான். பல தமிழ் கட்சிகள் அங்கு போட்டியிட்டால் தமிழர் தரப்பில் ஒரு பிரதிநிதியும் கிடைக்கப்போவதில்லை என்றும் அவர்களுக்கு தெரியும். ஆனாலும் சம்பந்தனை தோற்கடிக்கப்படவேண்டும் என்ற வெறியில் இவர்கள் அனைவரும் திருகோணமலையை குதறிவருகின்றார்கள்.

இம்முறை தமிழரசுக்கட்சி சார்பில் ஒரு பிரதிநிதியே தெரிவுசெய்யப்படக்கூடிய வாய்ப்பு காணப்படுகிறது. அதுவும் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அக்கட்சிக்கு வாக்களிப்பதன் மூலம்தான் அந்த ஒரு பிரதிநிதித்துவத்தை கூட தக்கவைத்துக் கொள்ள முடியும். ஒற்றுமையின்றி செயற்பட்டால் அது கூட கிடைக்காது. 2000ஆம் ஆண்டில் ஏற்பாட்டில் கிடைத்த பாதகமான முடிவைத்தான் தமிழ் மக்கள் சந்திக்க நேரிடும். 2000ஆம் ஆண்டில் மூன்று தமிழ் கட்சிகள் போட்டியிட்டே அந்த முடிவுவை சந்திக்க நேரிட்டது. இம்முறை 10க்கு மேற்பட்ட தமிழ் கட்சிகள் போட்டியிடுகின்றன. இந்த அனுபவங்களிலிருந்தாவது பாடங்களை கற்று தங்களின் சுயநலங்களை விட்டு திருகோணமலையில் உள்ள தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டு செயற்பட்டிருக்க வேண்டும். அந்த ஒற்றுமைதான் தமிழ் சமூகத்திடம் இல்லையே.

## மட்டக்களப்பு மாவட்டம்

கல்குடா, மட்டக்களப்பு பட்டிருப்பு தொகுதிகளை உள்ளடக்கிய மட்டக்களப்பு மாவட்டத்தில் 5 பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காக 17அரசியல் கட்சிகளும் 28 சுயேச்சைக் குழுக்களுமாக மொத்தம் 45 அணிகளில் 360 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இலங்கையில் அதிக கட்சிகள் சுயேச்சைக்குழுக்கள் போட்டியிடும் இரண்டாவது மாவட்டம் மட்டக்களப்பாகும். அத்தனை சுயேச்சைக் குழுக்களும் அரசியல் கட்சிகளும் தமிழர்களின் வாக்குகளை பிரித்தெடுப்பதையே குறியாகக்கொண்டு களமிறக்கப்பட்டிருக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் எண்ணிக்கை 3இலட்சத்து 33ஆயிரத்து 644 ஆகும். இம்மாவட்டத்தில் தமிழர்கள் 74வீதமாகவும் முஸ்லிம்கள் 25வீதமாகவும் காணப்படுகின்றனர். வாக்காளர் இனவிகிதாசார அடிப்படையில் தமிழர் தரப்பில் 4பேரும் முஸ்லிம்கள் தரப்பில் ஒரு முஸ்லிம் பிரதிநிதியுமே தெரிவு செய்யப்படவேண்டும். ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, மற்றும் ஐக்கிய தேசியக்கட்சி ஆகியவற்றிற்கு தமிழ் மக்கள் வாக்களிக்கும் பட்சத்தில் எதிர்மறையாக முஸ்லிம்களே அதிக பிரதிநிதிகளை பெறும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

இம்மாவட்டத்தில் தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக்கூட்டணி, பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி, புளொட், ஈழவர் ஜனநாயகக்கட்சி ,சிவாஜிலிங்கம் அணியினரின் இடதுசாரி முன்னணி, என தமிழர் தரப்பு கட்சிகளும் 28 சுயேச்சைக்குழுக்களும் போட்டியிடுகின்றன. அத்துடன் சிங்கள கட்சிகளான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியகட்சி, ஜே.வி.பி உட்பட சிங்கள கட்சிகளிலும் பல தமிழர்கள் போட்டியிடுகின்றனர். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் போட்டியிடுகின்றது.

சுயேச்சைக்குழுக்கள், அரசியல் கட்சிகள் என 26தமிழ் அணிகள் போட்டியிட்டாலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் வெற்றிவாய்ப்பை பெறக்கூடிய வாக்கு வங்கியை தமிழரசுக்கட்சி மட்டுமே கொண்டிருக்கிறது. ஆனால் ஏனைய தமிழ் கட்சிகள் ஆசனங்களைப்பெற முடியாவிட்டாலும் கணிசமான வாக்குகளைப்பெறக்கூடிய சாத்தியங்களே காணப்படுகின்றன. தமிழ் மக்களின் வாக்குகள் பிரிக்கப்படுவதால் தமிழ் பிரதிநிதித்துவத்திற்கு நிச்சயம் ஆபத்து ஏற்படத்தான் போகிறது.

தமிழர் விடுதலைக்கூட்டணியில் போட்டியிடும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வெள்ளிமலை, ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் லட்சுமி சுந்தரம், பிள்ளையானின் கட்சியில் போட்டியிடும் செல்வேந்திரன் ஆகியோர் கணிசமான வாக்குகளைப்பெற்றாலும் அவர்களால் வெற்றிபெற முடியாது. அவர்கள் வாக்குகளைப்பிரிப்பது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி போன்ற சிங்கள கட்சிகளின் வெற்றிவாய்ப்பிற்கே வழிவகுக்க போகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 3,33,644 ஆகும். இம்மாவட்டத்தில் கடந்த 5வருட காலத்தில் 30ஆயிரம் வாக்காளர்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் 25 வீதமான முஸ்லிம்கள் 15ஆயிரம் வாக்காளர்களால் அதிகரிக்க 74வீதமான தமிழர்கள் 14ஆயிரம் வாக்களார்கள் மட்டுமே அதிகரித்திருக்கிறார்கள். இதனால் 75ஆயிரமாக இருந்த முஸ்லிம் வாக்காளர்களின் எண்ணிக்கை தற்போது 90ஆயிரமாக அதிகரித்திருக்கிறது.

இம்முறை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் தமிழ் வேட்பாளர்கள் 5பேரும் முஸ்லிம் வேட்பாளர்கள் 3பேரும் போட்டியிடுகின்றனர். அக்கட்சியின் முஸ்லிம் வேட்பாளர்களாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹிஸ்புல்லா, அமிர் அலி, அலிசாகிர் மௌலானா ஆகியோரும் தமிழ் வேட்பாளர்களாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான தங்கேஸ்வரி, கணேசமூர்த்தி மற்றும் சத்தியவரதன், குலசேகரம் ஆகியோர் போட்டியிடுகின்றனர். இந்த ஐந்து தமிழ் வாக்காளர்களும் தலா 5ஆயிரத்திற்கும் 10ஆயிரத்திற்கும் இடைப்பட்ட வாக்குகளை அக்கட்சிக்கு எடுத்துக்கொடுத்தாலும் விருப்பு வாக்கு அடிப்படையில் ஒருபோதுமே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து தமிழர் ஒருவர் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்பே இல்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து தப்பித்தவறி மூன்று பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் மூவரும் முஸ்லிம்களாகவே இருப்பார்கள். அண்மையில் காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி பள்ளிவாசல்கள் சம்மேளனம் முஸ்லிம் மக்களுக்கு ஒர் அறிவித்தலை விடுத்திருந்தது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களிக்கும் முஸ்லிம்கள் அனைவரும் ஹிஸ்புல்லா, அமிர்அலி, அலிசாகிர் மௌலானா ஆகிய மூவருக்கும் தமது விருப்பு வாக்குகளை அளிக்க வேண்டும் என கேட்டிருந்தது. இதன் படி எப்படியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு குறைந்தது 40ஆயிரத்திற்கு குறையாத வாக்குகள் கிடைக்க வாய்ப்புக்கள் உள்ளன. எனவே இந்த மூவரும் 40ஆயிரம் விருப்பு வாக்குகளைப்பெறுவது உறுதியாகியிருக்கிறது. இந்நிலையில் அக்கட்சியில் போட்டியிடும் தமிழர்களால் 15ஆயிரத்திற்கு மேல் விருப்பு வாக்குகளைப் பெற முடியாது. எனவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடும் தமிழர்களால் அக்கட்சியில் உள்ள முஸ்லிம் வேட்பாளர்கள் வெற்றி பெறுவதற்கு வாக்குகளை சேகரித்து கொடுக்க முடியுமே ஒழிய கணேசமூர்த்தியாலோ அல்லது தங்கேஸ்வரியாலோ நாடாளுமன்ற உறுப்பினராக வரமுடியாது. எனவே மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களிக்கும் தமிழர்கள் தாங்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் தமிழர் பிரதிநிதித்துவத்தை பறித்து முஸ்லிம்களுக்கு வழங்கப்படுவதற்காக பயன்படப்போகிறது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் முஸ்லிம்களுக்கும் தமிழர்களின் பிரதிநிதித்துவம் தமிழர்களுக்கும் செல்ல வேண்டும். அதை விடுத்து தமிழர்களின் வாக்குகளில் முஸ்லிம்களோ முஸ்லிம்களின் வாக்குகளில் தமிழர்களோ பிரதிநிதியாக வருவது அந்த சமூகங்களுக்கிடையே கசப்புணர்வையே ஏற்படுத்தும். முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் பகைமை உணர்வை வளர்த்துவரும் சிறிலங்கா அரசு இத்தேர்தல் மூலமும் இரு சமூகங்களுக்கிடையில் மோதல்களை உருவாக்கவே வழிவகுத்திருக்கிறது.

பல சுயேச்சைக்குழுக்கள் போட்டியிடுவதாலும் தமிழ் கட்சிகள் வாக்குகளைப் பிரிப்பதாலும் தமிழரசுக்கட்சி கடந்த முறையைப்போன்ற ஒருவெற்றியை பெற முடியாவிட்டாலும் மூன்று அல்லது இரண்டு பிரதிநிதிகளையாவது பெறுவதாக இருந்தாலும் தமிழர்கள் ஒற்றுமையோடு செயற்பட்டால் மட்டுமே அந்த இலக்குகளையாவது அடைய முடியும்.

தமிழ் மக்கள் இந்த ஆபத்துக்களை உணராது உதிரி தமிழ் கட்சிகளுக்கோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி போன்ற சிங்கள கட்சிகளுக்கோ வாக்களித்தால் 4முஸ்லிம் பிரதிநிதிகளும் ஒரு தமிழ் பிரதிநிதியுமே தெரிவு செய்யப்படும் அபாயம் ஏற்பட்டு விடும். இதை உணர்ந்து மட்டக்களப்பு தமிழ் மக்கள் செயற்படாவிட்டால் வரலாற்று தவறு ஒன்றை இழைத்துவிட்டார்கள் என்ற பழி அவர்கள் தலையில் சுமத்தப்பட்டு விடும். இத்தவறை மட்டக்களப்பு தமிழ் மக்கள் செய்ய மாட்டார்கள் என நினைக்கிறேன்.

## அம்பாறை மாவட்டம்

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் சாதனை படைத்த மாவட்டமாக அம்பாறை மாவட்டம் திகழ்கிறது. இம்மாவட்டத்தில் 7 பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காக 18 அரசியல் கட்சிகளும் 48 சுயேச்சைக்குழுக்களுமாக 66 அணிகளின் சார்பில் 660 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதற்கென 4அடி நீளமான வாக்குச்சீட்டு அச்சிடப்படுவதாகவும் இது வாக்காளர்களுக்கு மட்டுமல்ல வாக்கு எண்ணும் ஊழியர்கள் உட்பட அனைவருக்கும் பெரும் சிரமங்களையே ஏற்படுத்தப்போவதாக தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். இதிலும் முக்கியமாக தற்போது 18வீதமாக குறைந்திருக்கும் தமிழ் வாக்குகளை சிதைத்து தமிழ் பிரதிநிதித்துவத்தை பறிப்பதற்காக மஹிந்த அரசு செய்த கைங்கரியம் என்றே அம்பாறை தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இம்மாவட்டத்திலும் தமிழ் மக்களின் வாக்குகளைப்பிரிப்பதற்காக தமிழர் விடுதலைக்கூட்டணி, சிவாஜிலிங்கம் அணி, பிள்ளையான் அணி, ஆசனங்களைப்பெறக்கூடிய வாக்கு வங்கி இல்லாத பல தமிழ் கட்சிகளும் போட்டியிடுகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 4இலட்சத்து 20ஆயிரத்து 835 வாக்காளர்களில் சுமார் 75ஆயிரம் தமிழ் வாக்காளர்கள் உள்ளனர். இங்குள்ள தமிழர்கள் அனைவரும் ஓர் கட்சிக்கு வாக்களிக்கும் பட்சத்திலேயே ஆகக் கூடியது ஒரு தமிழ் பிரதிநிதித்துவத்தையாவது பெற்றுக்கொள்ள முடியும். பல தமிழ் கட்சிகள் சுயேச்சைக்குழுக்கள் போட்டியிடுவது தமிழர்களுக்கு பாதகமாகவே அமையும். அம்பாறை மாவட்டத்தில் கிடைக்க கூடிய ஒரு ஆசனத்தை கூட தக்க வைத்துக்கொள்ள முடியுமா என்ற அச்சம் தற்பொழுது தமிழ் மக்களுக்கு எழுந்துள்ளது. அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்கு உள்ள தமிழரசுக்கட்சி இம்முறை ஒரு ஆசனத்தை பெற வேண்டுமாக இருந்தால் அம்பாறை மாவட்ட மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

இந்த ஐந்து மாவட்டங்களில் இருக்கும் நிலையை இப்பொழுது பார்த்திருக்கிறோம்.

இதன் படி அம்பாறை மாவட்டத்தில் மகிந்த ராஷபக்சவின் ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெறும் என்பது உறுதி.

திருகோணமலையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியே அதிக வாக்குகளைப்பெற்று போனஸ் ஆசனத்துடன் இரு ஆசனங்களை பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மட்டக்களப்பு வன்னி யாழ்ப்பாணம் மாவட்டங்களில் கூட தமிழர்கள் பிரிந்து நின்று மோதிக்கொள்வது மஹிந்த ராசபக்ஷவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிக்கே வழிவகுக்கும்.

அவ்வாறு வடகிழக்கில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றால் தமிழருக்கு கிடைக்கும் தோல்வியும் வீழ்ச்சியும் சாதாரணமானதல்ல.

மே 19ல் எத்தகையை வெற்றியை சிங்கள தேசம் பெற்றுக்கொண்டதோ அதற்கு சமமான ஒரு வெற்றி கிடைத்துவிட்டதாக ஏப்ரல் 9ஆம் திகதி மகிந்த தரப்பு எக்காளமிடப்போகிறது

தமிழர்களின் ஆயுதப்பலத்தை மட்டுமல்ல அரசியல் பலத்தை கூட வீழ்த்திவிட்டதாகவும் தமிழர் தலைமை தனது கைகளுக்கு வந்துவிட்டதாகவும் அவர்கள் ஆர்ப்பரிக்கத்தான் போகிறார்கள்.

தமிழ் மக்களுக்கு இப்பொழுது இருக்கின்ற ஒரே பலம் வடக்கு,கிழக்கில் உள்ள அரசியல் தலைமை ஒன்றுதான். அந்த அரசியல் தலைமையையும் சிதைத்து சின்னாபின்னமாக்கி அழிப்பதற்கு கங்கணம் கட்டிக்கொண்டிருப்பவர்களே ஏப்ரல் 9ஆம் திகதி உங்கள் முன் இரு தெரிவுகள் தான் இருக்கப்போகிறது.

ஒன்று தமிழரின் அரசியல் தலைமையை அழித்து விட்டோம் என்ற மகிந்தவின் வெற்றிக்களிப்பில் பங்குகொள்வது

இரண்டு 2009ஆம் ஆண்டு மே 19க்கு பின் விடைதெரியாது தேம்பி... திகைத்து .....அழுது.....விழுந்தது போல மீண் டும் எழ முடியாத பாதாளத்தில் நின்று அழுவது தான்.

யோசியுங்கள்....எதை தேர்ந்தெடுக்கப் போகிறோம் என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையை சக்தி பெறச்செய்வது தமிழர்களின் கடமை

## திகாமடுல்ல வேட்பாளர் ஹென்றி மகேந்திரன் கருத்து

அம்பாறை, மார்ச். 23

''வரலாற்றில் எதிர்பாராத பொருத்தமான தலைவரையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டுள்ளது. அவரை நாம் நமது கண் போல் காப்பதுடன், அவரது கரத்தைச் சக்திபெறச் செய்வதற்குத் தமிழ் மக்கள் அணிதிரள வேண்டும்.''

- இவ்வாறு திகாமடுல்ல தேர்தல் மாவட்ட (அம்பாறை) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளரும், கல்முனை மாநகரசபை எதிர்க்கட்சித் தலைவருமான ஹென்றி மகேந்திரன் கூறினார்.

சேனைக்குடியிருப்புப் பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எஸ்.சுந்தரலிங்கம் தலைமையில் இந்த மக்கள் சந்திப்புக்கான கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் வேட்பாளர் ஹென்றி மகேந்திரன் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

இன்று தமிழ் மக்களுக்குள்ள ஒரேயொரு பலம் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புத்தான் என்பதை மக்கள் நன்குணர்ந்துள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஐயா, பொருத்தமான காலகட்டத்தில், மிகப் பொருத்தமான தலைவராக நமக்குக் கிடைத்துள்ளார்.

அவரது தீர்க்கதரிசனமான நடவடிக்கைகளும், செயற்பாடுகளும் அவரது அர்ப்பணிப்பான சேவைகளும் தமிழ் மக்களை மட்டுமன்றி தமிழ்பேசும் சகோதர இனத்தவருக்கும் பெரும் திருப்தியை அளித்துள்ளது.

தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், கண் போலக் காக்கப்பட வேண்டியவர். இதன் காரணமாகத்தான் அவருக்குக் கல்முனை வாழ் தமிழ், முஸ்லிம் மக்கள் சார்பில், கல்முனை மாநகரசபையினால் 'தமிழ்பேசும் மக்களின் தலைமகன்' எனும் விருது வழங்கிக் கௌரவம் அளிக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை பல்வேறு கால கட்டங்களில் துன்ப துயரங்களை அனுபவித்து வந்தவர்கள். இந்த மக்களது பிரச்சினைகள் பல தீர்க்கப்பட வேண்டியுள்ளன. மறுக்கப்பட்டுள்ள இம்மக்களது உரிமைகள் பல பெற்றுக்கொடுக்கப்பட வேண்டியுள்ளன.

எதிர்காலத்தில் இவற்றை வென்றெடுப்பதற்கு நமது தமிழ்ப் பிரதிநிதித்துவம் அம்பாறை மாவட்டத்தில் காக்கப்பட வேண்டியதுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவப் பலத்தையும் அதிகரிக்க வேண்டும் - என்றார். (ளி)

# ஆட்சி அதிகாரத்தை தீர்மானிக்கும் சக்தி முஸ்லிம் காங்கிரஸின் வசமே

## வேட்பாளர் ஹரீஸ் கூறுகிறார்

மட்டக்களப்பு, மார்ச். 23

ஆட்சி அதிகாரத்தில் அமருவோரின் ஆயுளைத் தீர்மானிக்கும் சக்தியாக முஸ்லிம் காங்கிரஸ் என்றென்றும் திகழும் என்பதில் எந்தவித சந்தேகமில்லை எனக் கல்முனை மாநகர முதல்வரும், முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக ஐக்கிய தேசிய முன்னணியில் திகாமடுல்ல மாவட்டத்தில் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளருமான எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபையின் ஏற்பாட்டில் சாய்ந்தமருதில் கடந்த திங்கட்கிழமை (15ஆம் திகதி) நடைபெற்ற ஹெய்ன்றிச் ஏ.லிற்சன் றோத் ஞாபகார்த்த வைத்திய சாலை திறப்பு விழாவில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசு மூன்றிலிரண்டு பெரும்பான்மைக் கோஷத்தை முன்வைத்து தெற்கில் இனவாதப் பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றது. அவ்வாறு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் அரசு பெற்று ஆட்சியமைக்குமானால் அந்த அரசு தமிழ், முஸ்லிம் மக்களின் குரல்வளைகளை நசுக்கும் அரசாகவே அமையும் என்பதில் ஐயமில்லை. இதனை நாம் அனுமதிக்க முடியாது. இதனைத் தடுப்பதற்காக, எமது முஸ்லிம் காங்கிரஸ் தலைமை வகுத்த வியூகம் தான் ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்து நாடு முழுவதும் தேர்தலில் போட்டியிடுவதாகும்.

முஸ்லிம் சமூகத்திற்கு இந்த அரசினால் இழைக்கப்படும் அநியாயங்களுக்கு எதிராக முஸ்லிம் காங்கிரஸ் தலைமை மிகத் தைரியமாகக் குரல் கொடுத்து வருகின்றது என்பதை நாடே அறியும். இத்தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்கள் தோற்கடிக்கப்படுவார்களேயானால் அது வேட்பாளர்களின் தோல்வியல்ல எமது சமூகத்தின் தோல்வியாகவே பார்க்கப்படும். இத்தேர்தலை எமது முஸ்லிம் சமூகத்தின் இருப்பைத் தக்கவைக்கின்ற தேர்தலாகவே முஸ்லிம் காங்கிரஸ் பார்க்கின்றது - என்றார். (ளி)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகள் அகற்றப்பட வேண்டும்

## திருமலையில் கஜேந்திரகுமார் சீற்றம்

திருகோணமலை, மார்ச். 23

''தாயகம், தேசியம், சுயநிர்ணயம், தனித்துவமான தேசம், இறைமை ஆகிய கொள்கைகளுடன் தமிழ் மக்களுக்குரிய கௌரவமான - பாதுகாப்பான வழிமுறைகள் மூலம் அரசியல் தீர்வை அடைவதற்கே இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு நாம் முன்வந்துள்ளோம். இதற்காகவே தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணியை உருவாக்கியுள்ளோம்.''



- இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட வேட்பாளர்களில் ஒருவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை மாலை திருகோணமலை சிவன்கோயிலடியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தப் பிரசாரக் கூட்டத்தில், தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணியின் சார்பில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து போட்டியிடவுள்ள முதன்மை வேட்பாளர் கௌரிமுகுந்தன் உட்பட அனைத்து வேட்பாளர்களும் கலந்து கொண்டனர்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும்போது கூறியவை வருமாறு:-

''தமிழ்க் கட்சிகளின் கூட்டணியில் ஏற்பட்ட நான்காவது பரிணாம வளர்ச்சியே தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணியின் உதயம். தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக கட்சிகளை ஒன்றிணைத்து உருவாக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது அடிப்படைக் கொள்கைகளில் இருந்து மாறிவிட்டது.

அவர்கள் தருவதைப் பெற்றுக்கொள்ளப் போவதாகக் கூறுகிறார்கள். ஆனால், இதில் எமக்கு உடன்பாடில்லை. இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் அனைத்துடனும் நட்புறவைப் பேணவே நாம் விரும்புகின்றோம். ஆனால், அவர்கள் விரும்பித்தரும் தீர்வைப் பெற்றுக்கொடுக்க விரும்பவில்லை. ஏனெனில், தமிழ் மக்களுக்குரிய தேசியம், இறைமை, சுயநிர்ணயம் என்பவற்றைக் கொண்ட மக்கள் விரும்பும் தீர்வைப் பெறவே எமது முன்னணி போராடும்.

2009 மே மாதத்தின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைமைகளினால் இரகசியமான முறையில் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களை ஈடுபடுத்தாமல் தீர்வுத் திட்டவரைபு ஒன்று தயாரிக்கப்பட்டது. இவ்வாறு தயாரிக்கப்பட்டுள்ள வரைபில் தமிழ் மக்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படைக் கோட்பாடுகள் கைவிடப்பட்டுள்ளன.

இந்த அடிப்படைப் பிறழ்வு நீண்டகாலமாக உறங்குநிலையில் இருந்தபொழுதும் வன்னிப்போர் இறுதிக் கட்டத்தை நெருங்கும் போதே வெளிப்படையாகத் தலைதூக்கியது.

இவற்றைக் கூட்டமைப்பின் தலைமை முற்றாக நிராகரித்த வேளையிலேயே, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி கூட்டமைப் பில் இருந்து வெளியேற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது - என்றார். (ளி)




# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு கல்முனைப் பகுதியில் ஆதரவு அதிகரிப்பு

## ஆய்வாளர்கள் கருத்து

மட்டக்களப்பு, மார்ச். 23

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கோட்டையாகக் கருதப்படும் கல்முனைத் தேர்தல் தொகுதி தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பக்கம் சரிந்து வருகின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கல்முனைத் தேர்தல் தொகுதி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குத் தோல்வியை ஏற்படுத்திய போதிலும் இம்முறை அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெறும் வாய்ப்பு அதிகம் காணப்படுகின்றது எனக் கூறப்படுகின்றது.

கல்முனைத் தேர்தல் தொகுதியிலுள்ள பெரியநீலாவணை, அக்பர்கிராமம், மருதமுனை, நற்பிட்டிமுனை, இஸ்லாமாபாத், கல்முனைக்குடி, சாய்ந்தமருது ஆகிய முஸ்லிம் கிராமங்களிலும், தமிழ் மக்கள் வாழும் கிராமங்களான துரவந்தியமேடு, நீலாவணை, பாண்டிருப்பு, சேனைக்குடியிருப்பு, மணற்சேனை ஆகியவற்றிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவு பெருகி வருகின்றது.

கல்முனைத் தேர்தல் தொகுதியில் வாக்களிக்கத் தகுதி பெற்ற 66ஆயிரத்து 135வாக்குகளில் சுமார் 40ஆயிரத்திற்கு மேற்பட்ட வாக்குகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெறும் என அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

கல்முனைத் தேர்தல் தொகுதியிலுள்ள பெருந்தொகையான முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முஸ்லிம் ஆதரவாளர்களும், அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸில் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்க முன்வந்திருப்பதை நாளாந்த நடவடிக்கைகள் மூலம் அறியமுடிகிறது.

முஸ்லிம் காங்கிரஸின் கோட்டையான கல்முனைத் தேர்தல் தொகுதியில் முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் பணிகள் சோபை இழந்து காணப்படுகின்றன. அக்கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் இதுவரை அம்பாறை மாவட்டத்திற்கு சமூகமளிக்கவில்லை என்பது ஆதரவாளர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. (ளி)

# சமூகத்திற்காகக் குரல் கொடுப்பவர் யாரெனத் தெரிந்து வாக்களியுங்கள்

## கல்முனையில் பேரியல் அஷ்ரப் கருத்து

அம்பாறை, மார்ச். 23

தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் பெயரைச் சொல்லி, அமரரின் உருவப்படத்தை போஸ்டர்களிலும், கட்அவுட்டுகளிலும் இட்டு தலைவரின் வழியிலேயே வந்துள்ளோம் என்று சொல்லி உங்களது வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றப் பிரதிநிதியாகவும், அமைச்சர்களாகவும் வந்துள்ளவர்கள் இன்று வரை உங்களுக்கும், உங்கள் பிரதேசத்திற்கும் என்ன செய்தார்கள் என்பதை நினைத்துப் பாருங்கள். அவரவர்களின் சுயஇலாபத்திற்காகவும், இந்தச் சமூகத்தை மற்றவர்களிடம் அடகு வைப்பதற்காகவும், காட்டிக் கொடுப்பதற்காகவுமே உங்களது வாக்குகளைப் பயன்படுத்தினார்களே தவிர சமூகத்திற்காகக் குரல் கொடுக்கவோ, தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவோ அல்ல என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.



- இவ்வாறு வீடமைப்புத்துறை அமைச்சரும், திகாமடுல்ல நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுபவருமான பேரியல் அஷ்ரப் தெரிவித்தார்.

கல்முனை கரவாகுவட்டை மைதானத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒரு காலத்தில் அச்சம், பீதி, பயம் போன்றவற்றிற்கு எமது சமூகம் முகம் கொடுத்து வந்தது. எமது [illegible] வது கூட பயங்கரமான நிலைமையாக இருந்தது. ஆனால், இன்று எமது ஜனாதிபதியின் வழிகாட்டலினால் நாம் மிகுந்த மகிழ்ச்சியோடு இருக்கிறோம். இந்த நிலை தொடர்ந்தும் இருக்க வேண்டும். அதே போன்று எமது சமூகத்திற்கு இருக்கின்ற உரிமைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பெரும்பான்மையான மக்களுடைய வாக்குகளுடன் ஜனாதிபதியின் அரசு நாட்டிற்கு மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என்று திடமாக இருக்கின்ற சமயத்தில், நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஆதரவை வழங்கி எமது சமூகத்திற்கான சகல தேவைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டியது எமது முக்கிய கடமையாகும் - என்றார். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவு

யாழ்ப்பாணம். மார்ச் 23

யாழ்ப்பாணத்துக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இந்த மாதத்தில் குறைவடைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் அதிக எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தனர். இந்த மாதத்தில் அவர்களின் வருகை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

எதிர்வரும் ஏப்ரல் 8ஆம் திகதி நடைபெறும் பொதுத்தேர்தலை முன்னிட்டே இவர்களின் வருகை குறைவடைந்துள்ளதாகக் கூறப்பட்டது. (50-224)

## கொழும்புத்துறையில் வீதிச் சிலுவைப்பாதை

கொழும்புத்துறை. மார்ச் 23

தவக்காலத்தை முன்னிட்டு இயேசுவின் திருப்பாடுகளைத் தியானிக்கும் வீதிச் சிலுவைப்பாதை நிகழ்வு கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி குருத்தோலை ஞாயிறன்று மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கொழும்புத்துறை வீதி திருவுளப்பணியாளர் சபைக்கு முன்பாக ஆரம்பிக்கும் இத்தியானப் பவனி இலந்தைக்குளம் வீதி, வில்வம் தெருவீதி, 3ஆம் ஒழுங்கை, ஆணந்தன் வடலி வீதி வழியாக ஆலயத்தைச் சென்றடையும். அதைத் தொடர்ந்து திருப்பலிப்பூசை இடம் பெறும். (50-135)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம்

அவர்கள் 16.02.2010 அன்று வலி.தென்மேற்கு பிரதேச செயலராக (சண்டிலிப்பாய்) பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டுவதுடன் மேலும் பல உயர்வுகளைப் பெற்று பார்போற்றக் கடமை செய்து பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

பிரான்பற்று கலைமகள் சனசமூக நிலையம், பண்டத்தரிப்பு.

நிர்வாகமும், கிராம மக்களும்.

(சி/565987)

## முதலாம் ஆண்டு நீங்கா நினைவலைகள்





**நாகலிங்கம் அம்பிகைபாகன்**
(உரிமையாளர்,அம்பிகா ஸ்ரோர்ஸ்-கிளிநொச்சி)

மலர்வு 1930.02.19 — உதிர்வு 2009.04.02

**யோகராசா கோபாலகிருஷ்ணன்**
(உரிமையாளர்,சுரபி இலத்திரனியல்-கிளிநொச்சி )

மலர்வு 1977.08.12 — உதிர்வு 2009.02.27

ஓர் ஆண்டு ஆனதுவோ, உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்-அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள்- நித்தம் புலம்புகின்றோம்.
உங்கள் திருமுகம் காணாமல் ஆறவில்லை எங்கள் துயர்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்

முத்தட்டுமட லேன்,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

(95786)

உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### சுப்பிரமணியம் கந்தசாமி

தோற்றம் 1953.01.22

மறைவு 2009.04.02

அன்பின் உறைவிடமாயிருந்து
எம்மையெல்லாம் வழி காட்டிய
தெய்வமே!
ஆண்டொன்று ஆனாலும்
ஆறவில்லை உம் நினைவுகள்!
ஆத்ம சாந்திக்காய் இறைவனை
வேண்டுகின்றோம்.

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.

(சி/565986)

குடும்பத்தினர்.


# VACANCIES

கிளை விரிவாக்கமும் புதிய கிளைகள் ஆரம்பிப்பதற்குமான பதவி வெற்றிடங்கள்

**Assistant Branch Manager - Male - 2 Positions**

> Qualified candidate who is Dynamic, enthusiastic, energitic and inspiring individual with in-born ability to lead his team to achieve success with reasonable experience and Hardworking Nature, Training will be provided (கொழும்பிலும் பயிற்சிகள் வழங்கப்படும்).

**Course Counsellor - Female - 4 Positions**

> Should be a confident individual with pleasing personality, good command in English language and computer literacy is essential, Age between 19-23 years, School leavers also considered. Training will be provided (கொழும்பிலும் பயிற்சிகள் வழங்கப்படும்).

**Hardware Technician / Tutor - Male - 3 Positions**

> The applicant should have passed G.C.E. A/L, Minimum 2 Years experience in Hardware & Network Security, Recognised Diploma qualification, Ability to teach Hardware & Networking Theory & Practical Modules. Age below 27 Years.

**Computer Instructor - Male / Female - 4 Positions**

> The applicant is expected to teach Office Package, C, C++, Visual Basic, Java, Hardware & Networking .Net Technology (VB.net, ASP.net, ADO.net), Quick Books, Tally, Information Technology, Web Design & Development. Training will be provided.

**Multimedia Tutor - Male / Female - 4 Positions**

> The applicant is expected to train Page Maker, Corel Draw, Photoshop, Adobe Premiere, Combustion, 3D Max & Maya Animation. Minimum 1-1/2 Years Experience with Advanced Diploma in Multimedia or Equivalent Qualification. Age 22-24.

**UNIVERSITY OF MADRAS, IDE**
Sri Lanka Study Centre - Jaffna Branch

**Higher Education Counsellor - Female 2 Positions**

> **Should be a confident individual with pleasing personality, good command in all three languages and computer literacy is essential, Age between 22-28 years, Should possess a University Degree or equivalent qualification and minimum 2 years Experience, Salary Negotiable, Training will be provided.**

யாழ்.நகர், பண்டதரிப்பு, மானிப்பாய், சுன்னாகம், கைதடி, சாவகச்சேரி, நெல்லியடி, பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். எதிர்வரும் 28.03.2010 ஞாயிற்றுக்கிழமை காலை நேர்முகத் தேர்வு நடைபெறவிருப்பதால் விண்ணப்பங்களை விரைவாகவும் நேரடியாகவும் கையளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**ASIAN - CSC COMPUTER EDUCATION**

2G, ஸ்ரான்லி வீதி; யாழ்ப்பாணம். T.P: 021 222 5677


## 6ஆம் மாத நினைவும் சபிண்டீகரண அழைப்பும்



பிறப்பு 1975.05.05

இறப்பு 25.09.2009

கடந்த 25.09.2009 அன்று ஆறாத்துயரில் விட்டுச்சென்ற எங்கள் குடும்ப ஒளிவிளக்கு

### அமரர் கந்தசாமி கிருஸ்ணருபன்


அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (23.03.2010) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பண்டித்தறை, நெல்லியடி,
கரவெட்டி.

(சி/565985)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




16.02.1990

*இந்திய அமைதி காக்கும் படையினர் எதிர்வரும் மார்ச் மாதம் 15 ஆம் திகதியளவில் இலங்கையிலிருந்து முற்றாக வெளியேறுவார்கள் என இந்தியத்தரப்பில் இராணுவ உயர்வட்டாரங்கள் தெரிவிப்பு.

*மனிதஉரிமைமீறல் நடவடிக்கைகளில் இலங்கை ஆயுதப்படையினர் ஈடுபட்டு இருப்பதாகசர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம் தெரிவிப்பு.

17.02.1990

*ஈழப்பிரச்சினையில் தி.மு.காவினதும் தமதும் முழு ஆதரவு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கே எனத் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி உறுதியளித்துள்ளதாக விடுதலைப்புலிகள் பிரமுகர் யோகி தெரிவிப்பு.

*நட்புறவு ஒப்பந்தம் மேற்கொள்ளுமாறு இலங்கை அரசை இந்தியா ஒரு போதும் நிர்ப்பந்தித்ததில்லை என இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ரால் தெரிவிப்பு.

18.02.1990

*தமிழீழ விடுதலைப்புலிகள் பிரதிநிதிகளுக்கும் தமிழக முதல்வர் கருணாநிதிக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின்போது உதயன் பத்திரிகை பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டதாக பேச்சுக்களில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகள் பிரநிதி ஒருவர் தெரிவிப்பு.

*நாம் இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அதனை இடைக்கால நடவடிக்கையாக ஏற்று எமது ஆயுதங்களை ஒப்படைத்தமை நாம்விட்ட மிகப்பெரிய தவறு என ஈரோஸ் இயக்கப் பிரமுகர் பாலகுமார் தெரிவிப்பு.

19.02.1990

*ஈழத்தமிழர் பிரச்சசினையில் சுமுக நிலையொன்றை உருவாக்கும் நோக்கில் தம்முடன் பேச்சுவார்த்தை நடத்திய தமிழக முதல்வர் கருணாநிதி முன்வைத்த முக்கிய யோசனைகளுக்கான தமது பதிலை ஒரு வாரத்துள் சமர்ப்பிப்பதாக விடுதலைப் புலிகள் இயக்கம் தவிர்ந்த ஏனைய இயக்கங்கள் தெரிவிப்பு.

*தமிழர் குழுக்களிடையே மோதலை உருவாக்கி தமிழ்ப் பகுதியில் இரத்த ஆறு ஓடவைக்க இலங்கை அரசு முயற்சிப்ப தாக வடக்கு,கிழக்கு மகாண முதலமைச் வரதராஜப் பெருமாள் தெரிவிப்பு.

20.02.1990

*இந்திய அமைதிப்படை விலகிக் கொண்ட பின்னர் எனது தலைமையிலான வடக்கு, கிழக்கு மாகாண அரசினால் தாக்குப் பிடிக்க முடியாது என வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு.

*முதலமைச்சர் பதவியையும் ராஜினாமாச் செய்ய மாட்டேன்; மாகாண சபையையும் கலைக்கமாட்டேன்; எனது பதவி பிரேமதாசாவின் பதவியைவிடச் சட்ட பூர்வமானது என வடக்கு ,கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் யூ.என்.ஐ. செய்தியாளருக்குத் தெரிவிப்பு.

21.02.1990

* ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணத் தாம் தயாரித்துள்ள புதிய யோசனைகளை பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ள தமிழக முதல்வர் கருணாநிதியிடம் சமர்ப்பிக்கப்போவதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் தெரிவிப்பு.

* இலங்கைத் தமிழ்ப் போராளிக் குழுக்கள் விஷயத்தில் தமிழக முதல்வர் பக்கச்சார்பாக நடந்து கொள்வதாக வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்த குற்றச்சாட்டுக்கு தமிழ்க் முதலமைச்சர் கருணாநிதி மறுப்புத் தெரிவிப்பு.

22.03.1990

*தற்போதைய வடக்கு,கிழக்கு மாகாண அரசு உண்மையில் இந்தியப் படையினரால் திணிக்கப்பட்ட சட்ட விரோதமான அரசாகும் என ஈரோஸ் இயக்கப் பிரமுகர் பாலகுமார் தெரிவிப்பு.

*இலங்கை ஜனாதிபதி பிரேமதாசாவும், விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் மாத்தயாவும் இடையில் கொழும்பில் சந்திப்பு.

23.02.1990

*ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து தம்முடன் மேலும் பேச்சுவார்த்தை நடத்தச் சென்னைக்கு வருமாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலதிபர் பத்மநாபாவுக்கும் வடக்கு- கிழக்கு மகாண முதலமைச்சர் வரதராஜப் பெருமாளுக்கும் முதல்வர் கருணாநிதி அழைப்பு.

*சட்டத்துக்குப் புறம்பாகவும் அரசின் அனுமதியுடனும் ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் அனைவரும் மார்ச் முதலாம் திகதிக்கு முன்னர் தமது ஆயுதங்களை அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற உத்தரவு விடுதலைப்புலிகளுக்கும் பொருந்தும் என பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவிப்பு.

24.02.1990

*அமைதிப்படையினர் வெளியேறிய பின்னர் வடக்கு, கிழக்கு மகாணத்தில் மோதல்களைத் தவிர்த்துக்கொள்ளும் விடயத்தில் இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் இடையில் உடன்பாடு காணப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் மாத்தையா தெரிவிப்பு.

*நாட்டின் பாதுகாப்பு நிலைமை சீரடைந்து வருவதால் அடுத்த மாதத்தில் அவசரகாலச்சட்டத்தை நீக்கமுடியும் என அரசு நம்புவதாக பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

25.02.1990

*வடக்கு,கிழக்கு மகாணசபைக்கு முழு அளவில் இலங்கை அரசு அதிகாரத்தைப் பரவலாக்கி வழங்கவேண்டும். இல்லையேல் சுதந்திர தமிழ் ஈழத்தை நாம் பிரகடனப்படுத்த வேண்டி ஏற்படும் எனவும் அதற்கு தமிழக முதல்வரும் இந்திய மத்திய அரசும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் கலைஞர் கருணாநிதியிடம் தாம் சமர்ப்பிக்கவுள்ள புதிய யோசனையில் ஈ.பி. ஆர்.எல். எவ்.இயக்கம் தெரிவிக்கும் என அறிவிப்பு.

*தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் விரைவில் மக்கள் முன் தோன்றுவார் என விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித்தலைவர் மாத்தையா செய்தியாளர் தெரிவிப்பு.

26.02.1990

*ஈழத் தமிழர்பிரச்சினைக்கு ஈழம் ஒன்றே நிரந்தர தீர்வாகும். ஏனைய யோசனைகள் ஓர் இடைக்கால ஏற்பாடாகவே இருக்கமுடியும் என ஈரோஸ் பிரமுகர் பாலகுமார் தெரிவிப்பு.

*கிழக்கிலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அவர்களை அரசு -விடுதலைப்புலிகள் பிரதிநிதிகள் நேரடியாகச் சந்தித்துப் பேச்சுநடத்த ஒழுங்கு. அரசு சார்பில் அமைச்சர் ஏ.ஸி. எஸ். ஹமீது பங்குபற்றுவார்எனத் தெரி விப்பு.

27.02.1990

* அமைதிப்படை முற்றாக விலகிய பின்னர் வடக்கு, கிழக்கு மகாண நிர்வாக அதிகாரிகளும் ,முதலமைச்சர் வரதராஜப் பெருமாளும் இலங்கையை விட்டுச் சென்றுவிடுவர் எனத் தெரியவருவதாகக் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்று தெரிவிப்பு.

*மட்டக்களப்பு வாகரையில் இடம்பெற்ற விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பொதுச்சபைக்கூட்டத்தில் அக்கட்சியின் யாப்பு அங்கீகரிக்கப்பட்டது.

28.02.1990

*வடக்கு,கிழக்கின் பாதுகாப்புப் பொறுப்புக்களைத் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பதற்கு முதற்கட்ட நடவடிக்கையாக இப்பகுதிகளிலுள்ள இலங்கைப் படையினர் அடுத்த 48 மணிநேரத்துள் முகாம்களுக்குள் முடங்குவது என விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கும் அரச பிரதிநிதியாகக் கலந்துகொண்ட அமைச்சர் ஏ.ஸி.எஸ் ஹமீதுவுக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டது.

*தாம் தற்போதைய இலங்கை விஜயத்தின்போது விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்ததாக தமிழக அரசியல் பிரமுகர் பி. நெடுமாறன் தெரிவிப்பு.

# சனல் 4 இற்கு பொன்சேகா கடிதம்? அரசின் திட்டமிட்ட நாடகமே இது!

## விஜிதஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 23

ஜெனரல் சரத்பொன்சேகாவை சிறைக்குள்ளேயே இறுக்குவதற்காக மேற்கொள்ளப்படும் மற்றுமொரு நாடகமே சனல் 4 தொலைக்காட்சிக்கு ஜெனரல் எழுதினார் எனக் கூறப்படும் கடிதம்.

-இவ்வாறு ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

மேலும், ஜெனரல் சரத்பொன்சேகா சனல் 4 தொலைக்காட்சிக்கு எழுதினார் என தற்போது பரவாலாகப் பேசப்படும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த தகவல் உண்மையானது. ஆனால் அந்தத் தகவலை யார் எழுதியது? எப்படி அது சனல் 4 தொலைக்காட்சியின் கைகளுக்குக் கிடைத்தது என தமக்குத் தெரியாது எனவும், இது தொடர்பில் தமக்கும் சந்தேகம் நிலவுகிறது என்றும் ஜனநாயக தேசிய கூட்டணியின் பொதுச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த விஜித ஹேரத், அந்த வரையில் குறிப்பிடப்பட்டிருந்த தகவல் உண்மையானது எனவும், ஆனால் அந்த தகவலை யார் எழுதியது? எப்படி அது சனல் 4 தொலைக்காட்சியின் கைகளுக்குக் கிடைத்தது என தமக்குத் தெரியாது எனவும் இதுதொடர்பில் தமக்கும் சந்தேகம் நிலவுகிறது எனக் குறிப்பிட்டார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவை அவரது மனைவி மாத்திரமே பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்படுகிறது எனவும், இதன்போது அவர் தம்மிடமுள்ள கைப்பை மற்றும் கண்ணாடி என்பவற்றைக் கொடுத்து வெறுமனே உணவு மட்டுமே கொண்டு செல்ல அனுமதிக்கப்படுகிறார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம் இது ஒரு திட்டமிடப்பட்ட செயற்பாடு என தாம் சந்தேகம் கொள்வதுடன், இது ஜெனரலை சிறைக்குள்ளேயே இறுக்குவதற்காக மேற்கொள்ளப்படும் மற்றுமொறு நாடகம் எனவும் தெரிவிக்கும் விஜித ஹேரத், அமைச்சர் டலஸ் அழகப்பெரும, இந்தச் செயற்பாடுகளுக்கு பின்னணியில் மக்கள் விடுதலை முன்னணியே இருக்கிறது எனக் குற்றஞ்சாட்டியதையும் குறிப்பிட்டார்.

சனல் 4 தொலைக்கட்சி இதற்கு முன்னரும் இலங்கை மீது ஒரு குற்றச்சாட்டை முன்வைத்தபோது அதற்கு முதலில் எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் மக்கள் விடுதலை முன்னணியே என்று குறிப்பிட்ட அவர், இந்த நாட்டிலே அசாதாரண சூழ்நிலை உச்சக் கட்டத்தில் இருக்கும் வேளையில் தாங்கள் இலங்கையிலேயே இருந்தனர் எனவும், டலஸ் அழகப்பெருமவைப்போல் அமெரிக்காவில் இருக்கவில்லை எனவும் குறிப்பிட்டார். (சி)

# அவசியப் பொருள்களின் விலை குறைப்பு அமைச்சர் பந்துல குணவர்த்தன அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 23

அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றின் மீதான வரிகள் நீக்கப்பட்டிருக்கின்றன. அதேநேரம் சில பொருள்கள் மீதான வரிகள் குறைக்கப்பட்டுள்ளன. இதனால், அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் மேலும் குறையும் - என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் கடந்த 20 ஆம் திகதி நடந்த செய்தியாளர் மாநாட்டில் இதுபற்றி அமைச்சர் விளக்கினார்.

இதன்படி, பெற்றொல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் மீதான வரிகள் முற்றாக நீக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, நாட்டரிசி - 45 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. சிவப்பு அரிசி 56 ரூபாவிலிருந்து 52.50 சதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

பாஸ்மதி அரிசி 69.50 சதத்திலிருந்து 65 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. உருளைக்கிழங்கு 58 ரூபாவிலிருந்து 52 ரூபாவாக குறைக்கப்பட்டிருக்கிறது. மீனின் விலை 149 இல் இருந்து 130 ரூபாவாகவும், கடலை 139 ரூபாவிலிருந்து 137 ரூபாவாகவும் நெத்தலிக்கருவாடு 270 ரூபாவிலிருந்து 250 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளன என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இந்த நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் சதொச மற்றும் கோப்சிட்டிகளில் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியுமெனத் தெரிவித்த அமைச்சர், ஐ.தே.க. கூறிவரும் பொய்ப் பிரசாரங்களை நம்பவேண்டாமெனவும் கேட்டுக் கொண்டார்.

முற்றிலும் தவறான பிரசாரத்தை ஐ.தே. கட்சி செய்து வருகின்றது. அவ்வாறு இல்லை. யுத்தத்தின்போது பாதுகாப்புச் செலவினங்களுக்கு பாரிய நிதி செலவு செய்யப்பட்டது. இப் பொழுது இப்பணம் செலவிடத் தேவையில்லை.

அதன் பயனாகவே அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டு வருகின்றன.

(சி)

# இலங்கையில் மீண்டும் ஜனநாயகத்தை நிலைநிறுத்தக்கோரி ஜெனிவாவில் பேரணி

கொழும்பு, மார்ச் 23

சரத் பொன்சேகாவை விடுவிக்குமாறு கோரியும், குற்றஞ்சாட்டுகள் சுமத்தப்படாத அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்கக் கோரியும் இலங்கையில் மீண்டும் ஜனநாயகத்தை நிலைநிறுத்தக் கோரியும் இலங்கையர்கள் ஜெனிவா நகரில் கடந்த 19 ஆம் திகதி ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திற்கு முன்னால் நடைபெற்றது. இதில் இத்தாலி, பிரான்ஸ், பிரிட்டன், சுவிற்ஸர்லாந்து போன்ற நாடுகளில் வசிக்கும் நூற்றுக்கணக்கான இலங்கையர்கள் கலந்துகொண்டனர். 26 மணித்தியாலம் பஸ்ஸில் பயணித்து இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள வந்தனர் என இத்தாலியிலிருந்து சென்ற பெண்ணொருவர் தெரிவித்தார்.

இலங்கையில் காணப்படும் ஜனநாயக விரோத நிர்வாகத்தை உலகத்திற்கு எடுத்துக்காட்டுவதற்காகவே தான் இதில் கலந்து கொண்டார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதில் உரையாற்றியவர்கள் இலங்கையில் மஹிந்த ராஜபக்ஷ குடும்ப நிர்வாகத்தைத் தோற்கடித்து ஜனநாயகத்தை வென்றெடுக்கும் தேவை குறித்து சுட்டிக்காட்டினர். இந்த ஆர்ப்பாட்டத்தை இலங்கையின் ஜனநாயகத்திற்கான இயக்கம் ஏற்பாடு செய்திருந்தது. (சி)

# வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு விருந்து வழங்கினார் சந்திரிகா

கொழும்பு, மார்ச் 23

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க ஐந்து நாடுகளைச் சேர்ந்த தூதுவர்களுக்கு விசேட விருந்துபசாரமொன்றை வழங்கியுள்ளார்.

சந்திரிகாவின் சொந்த ஊரான ஹொரகொல்லவில் இந்த விருந்துபசாரம் இடம்பெற்றுள்ளது.

ஐந்து நாடுகளைச் சேர்ந்த இராஜதந்திரிகளை சந்திரிகா இந்த பகல் போசன விருந்துபசாரத்திற்காக அழைத்திருந்தார்.

இதனை ஓர் நட்பு ரீதியான சந்திப்பென அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன், ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த தூதுவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

பிற்பகல் 12.30 முதல் மாலை 5.00 மணிவரை இந்த விருந்துபசாரமும், கலந்துரையாடலும் நீடித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கியின் கணக்கு வைப்பாளர்கள் 7.5 மில்லியன் பேருக்கு 'எமரல்ட்' வழங்கும் கழிவு

இலங்கையின் முன்னணி வாய்ந்த வர்த்தக வங்கியொன்றான இலங்கை வங்கியுடன் பிரசித்திபெற்ற வர்த்தக நாமமான எமரல்ட் இன்டர்நஷனல் கைகோர்த்துள்ளது. இதன் மூலம் அந்த வங்கி வாடிக்கையாளகள் 10% விலைக் கழிவினைப் பெறமுடியும். எமரல்ட் மேற்சட்டைகளான Emeral corporate Shirt, Leonardo, Flax Farmer, Leger, Focuss, Mansak and Runn வர்த்தக நாமங்களுக்கு இந்தக் கழிவினை பெறமுடியும்.

எமரல்ட் - மிகச்சிறந்த ஆடைகள் எனும் எமது தொனிப்பொருளுக்கு அமைய இலங்கை வங்கியின் பிராந்திய விற்பனை முகாமைத்துவப் பிரிவுகளும் எமது நாடளாவிய விற்பனை வலையமைப்பும் இந்த ஊக்குவிப்பினை வெற்றியுள்ளதாக்க மிகவும் அாப்பணிப்புடன் செயல்பட்டுள்ளன என எமரல்ட் இன்ரார்நஷனல் பொது முகாமையாளர் முராத் ரஹிம்டீன் தெரிவித்தார். இலங்கை வங்கி வாடிக்கையாளகள் 100% கழிவுக்கூப்பனை வங்கி கவுண்டரில் பெறமுடியும். அதை எமரல்ட் முகவரிடம் சமர்ப்பிப்பதன் மூலம் மேற்கூறிய கழிவினைப் பெறலாம்.

ஆடைத்துறையில் எமரல்ட் 50 வருட பெருமைக்குரிய உயர்தர நற்பெயரைக் கொண்டுள்ளது. 1984 ஆம் ஆண்டு எமரல்ட் இன்ரார்நஷனல் என பெயமாற்றம் பெற்ற நிறுவனம் தெளிவான வர்த்தக செயற்பாடுகளை கொண்டுள்ளதுடன் corporate Shirt சந்தையில் 50% ஆதிக்கத்தையும் கொண்டுள்ளது.

இலங்கை வங்கி வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் மாதாந்த வங்கிக் கூற்றுகள் மூலம் இந்தச் செய்தியை நாம் கொண்டு செல்வோம். அதன் அனைத்துக் கிளைகளிலும் இது சம்பந்தமான விளம்பரப் பதாதைகள் காணப்படும். அதே விதமான விளம்பர பதாதைகள் அவர்கள் விஜயம் செய்யும் எமது விற்பனை பிரதிநிதிகளின் வர்த்தக நிலையங்களிலும் காணப்படும். இதன்மூலம் ஓர் இணைப்பு பேணப்படும் என எமரல்ட் இன்ரார்நஷனல் விளம்பர முகாமையாளர் திரு.சமிந்த ஹேவகே தெரிவித்தார்.

சர்வதேச புகழ்பெற்ற வர்த்தக நாமங்கள் அனுமதி பெற்ற முகவர் எமரல்ட் இன்ரார்நஷனல் ஆகும். அத்துடன் உள்ளாடைகள், மேற்சட் டைகள், ரீ-சேட்கள் மற்றும் காற்சட்டைகள் என்பவற்றையும் தயாரித்துச் சந்தைப்படுத்தி வருகின்றது. எமது இரண்டு தொழிற்சாலைகள் ஏற்றுமதியினை மட்டும் கருத்திற்கொண்டு தொழிற்படுகின்றன. இவை உலகப்பிரசித்தி பெற்ற வர்த்தக நாமங்களை சர்வதேச தரநியமங்களுக்கு அமைய தயாரித்து வழங்கி வருகின்றன. எமரல்ட் இன்ரார்நஷனலிற்கு ISO தரச்சிறப்பு உட்பட ஐரோப்பிய மற்றும் ஐக்கிய இராச்சிய ஏற்றுமதி தரச்சிறப்பு சான்றிதழ்களும் உள்ளன.

# வானுயர்ந்த கட்டடத்துக்கு இடம்மாறியுள்ள செலிங்கோ லை:ஃப் கொழும்புத் தலைமையகம்

இலங்கையின் ஆயுள் காப்புறுதித்துறைத் தலைவர்களான செலிங்கோ லைஃப் அதன் கூட்டாண்மைத் தலைமையகத்தை கம்பனிக்குச் சொந்தமான வானுயர் கட்டடத்துக்கு இடம் மாற்றியுள்ளது. தனது எதிர்கால அபிலாஷைகள், ஸ்திரப்பாடு மற்றும் உறுதி என்பவற்றின் அடையாள சின்னமாக இந்தக் கட்டடம் அமைந்துள்ளது என்று இந்தக் கம்பனி அறிவித்துள்ளது.



கண்கவர் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள செலிங்கோ லைஃப் கோபுரம் ஹெவ்லொக் வீதியில் பொலிஸ் பார்க்கிற்கு எதிரே அமைந்துள்ளது. சுமார் ஒரு வருட காலப் பகுதிக்குள் இந்தக் கட்டடம் கட்டி முடிக்கப் பட்டமை ஒரு விசேட அம்சமாகும். கம்பனியின் இந்தப் புதிய தலைமையகக் கட்டடம் கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

இலக்கம் 106, ஹெவலெக் வீதி, கொழும்பு-05 என்ற முகவரியில் அமைந்துள்ள இந்தக் கட்டடம் சகல நவீன தொழில்நுட்ப வசதிகளையும் கொண்டதாகும். மிகவும் திட்டமிடப்பட்ட முறையில் அமைக்கப்பட்டுள்ள 10 மாடிகளைக் கொண்ட இந்தக் கட்டடம் செலிங்கோ லைஃப்பின் எதிர்கால வளர்ச்சிக்காகக் கட்டப்பட்டதாகும்.

32 பேர்ச் காணியில் 62,000 சதுரஅடி நிலப்பரப்பில் நிர்மானிக்கப்பட்டுள்ளஇந்தப் புதிய அலுவலகக் கட்டடம் நிலத்துக்கு அடியில் வாகனத் தரிப்பிட வசதிகளைக் கொண்டுள்ளது. தரை மாடி உட்பட மேலும் 8 மாடிகளைக் கொண்டுள்ளது. கட்டடத்தின் மேலே மொட்டை மாடியும் அமைந்துள்ளது.

சகல வசதிகளும் கொண்ட கேட்போர் கூடம், பயிற்சிநிலையம், நவீன உபகரணங்களைக் கொண்ட உடற்கட்டு நிலையம் என்பன உட்பட வாடிக்கையாளர்கள் தமது கருமங்களை விரைவாக நிறை வேற்றிக்கொள்ள போதிய இடப்பரப்பும் இங்கு தாராளமாக அமைந்துள்ளது. அதிநவீன கண்காணிப்பு கமரா முறையும் (CCTV) இங்கு பொருத்தப்பட்டுள்ளது. மிக விவேகமாக கட்டட முகாமைத்துவ முறையும் இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் கதவுகளுக்கான கட்டுப்பாட்டு வசதி, தீ அனர்த்தப் பாதுகாப்பு வசதி, தீயை எதிர்த்துப் போராடும் முறை என்பனவும் அமையும்.

ஒவ்வொன்றும் பன்னிரன்டு பயணிகள் செல்லக்கூடிய வசதி கொண்ட இரண்டு லிப்ட்டுக்கள் (LIFTS) பொருத்தப்பட்டுள்ளதோடு புதிய அலுவலகத்தில் எந்த நேரமும் தயார் நிலையில் 500KV ஜெனரேற்றர் ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் 35 வாகனங்களை நிறுத்தும் வசதியும் இங்குள்ளது.

இந்தக் கட்டடத்தின் திறப்பு விழாவில் கலந்துகொண்டு பேசிய செலிங்கோ லைஃ ப் பிரதித்தலைவர் ஆர்.ரெங்கநாதன் இந்தப் புதிய கட்டடமானது செலிங்கோ லைஃப்பின் விசுவாசம் மிக்க ஊழியர்களுக்கு அர்ப்பணம் செய்யப்படுவதாகக் கூறினார். " கம்பனியின் ஜீவநாடியே அதன் ஊழியர்கள்தான். நாம் இந்தத் துறையில் பிரவேசித்து 15 ஆண்டுகளின் பின் தலைமைத்துவ நிலையினை அடைந்தோம். எமது அடிப்படைகளாலும் விழுமியங்களாலும்தான் இந்தநிலை எமக்குக் கிடைத்தது. எமது கூட்டாண்மை விழுமியங்கள் எமது வெற்றிக்கு அளப்பரிய பங்கினை அளித்துள்ளன என்றால் அது மிகையாகாது" என்று கூறினார்.

செலிங்கோ லைஃப்பின் பிரதிப பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் துஷார ரணசிங்க இங்கு பேசும்போது 1988 ஆம் ஆண்டு தமது அலுவலகப் பணிகள் 2500 சதுரஅடி பரப்பில் ஆரம்பிக்கப்பட்டதை நினைவுகூர்ந்தார். அதன் பின்னர் டுப்ளிக்கேஷன் வீதிக்கும் அதனைத்தொடர்ந்து கொழும்பு - 3, காலி வீதிக்கும் தலைமையகம் இடம்மாறியதையும் அவர் நினைவு கூர்ந்தார். "இந்தப் புதிய கட்டட விரிவாக்கத்திற்குத் தேவையான போதிய வசதிகளையும் கொண்டுள்ளது என்றும் அவர் சொன்னார். எதிர்காலத்தில் இந்தக் கட்டடத்தை மேலும் விருத்திசெய்ய வேண்டுமானால் எதிர்காலத் தலைமுறையினருக்குத் தேவையான அந்தக் கட்டடங்களின் வசதிக்கான காணியும் எம்மிடம் உண்டு" எனக் கூறினார்.

இந்தப் புதிய தலைமையக அலுவலகம் சென்றடைவதற்கு இலகுவான ஓர் இடத்தில் அமைந்துள்ளது. அத்தோடு வருகைதரும் வாடிக்கையாளருக்கு தேவையான அனைத்து தொழில்நுட்ப வசதிகளும் இங்குள்ளன. இந்தப் புதிய சூழலில் இன்னும் மகிழ்ச்சியுடனும், ஆற்றலுடனும் ஊழியர்கள் பணிபுரிவர். இந்தக் கட்டடத்தை குறுப் 5 இன்ரர்நஷனல் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனம் வடிவமைத்துள்ளது. இதற்கான கட்டமைப்பு பொறியியல் சேவையை சரோவீரசூரிய வழங்கியுள்ளார். செலவுக்கான ஆலோசனையை கொஸ்ட் கன்ஸல்டன்ஸி சேர்விஸஸ் (தனியார்) நிறுவனம் வழங்கியுள்ளது. கூடவே (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனம் கூடவே பிறதர்ஸ் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனம் கட்டடத்தை நிர்மானித்துள்ளது.

2004 உள்ளூர் காப்புறுதித் துறையில் தலைமைதாங்கிவரும் நிறுவனமான செலிங்கோ லைஃப் இந்தத் தொழில்துறையில் மிகப்பெரிய வலையமைப்புக் கொண்ட நிறுவனமாகும். நாடு முழுவதும் இதன் விற்பனையடிப்படையில் 5000 இற்கும் அதிகமானவர்கள் பணி புரிகின்றனர்.

# சர்வதேச பல்கலைக்கழகங்களில் மாணவருக்கு கல்வியைப் பெற்றுக் கொடுக்கும் 'பெலிக்ஸ்'

பெற்றோர் தமது பிள்ளைகளின் உயர் கல்வியை மேற்கொள்வதற்காக வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு முறையான ஒரு நிறுவனத்தை நாடாது இன்று பல இடங்களிலும், தோன்றியுள்ள பல போலி நிறுவனங்களுக்குச் சென்று அங்கு அவர்களது கைங்கரியத்தினால் சரியான ஆலோசனைகளைப் பெறாது பணத்தையும் இழந்து மன உளரீதியாகப் பாதிப்புகளுக்குள்ளாகி இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

அத்தோடு வெளிநாடுகளுக்குச் செல்லும் மாணவர்களும் பல அசௌகரியங்களையும் சந்திக்க நேரிடுகிறது. இத்தகைய சந்தர்ப்பத்தில் பல வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் நேரடித் தொடர்புடன் சரியானதும், முறையானதும், உண்மையானதும [illegible] ஆவணங்களுடன் வரும் மாணவர்களை விசா கிடைக்கும் முன்பு மற்றும் பின்பும் இலவச சேவையுடன் வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் மூலம் 'பெலிக்ஸ்' (Flex Institute) இன் தலைநகரில் தலைநிமிர்ந்து நிற்கிறது. பல பெற்றோரும், மாணவர்களும் 'பெலிக்ஸ்' (Flex Institute) நோக்கிச் சென்று அவர்களது சேவையை நாடுவதே அதற்குச் சான்று. மாணவர்களை லண்டன், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் விரும்பிய கற்கை நெறியைத் தொடர்வதோடு வளமான எதிர்காலத்தை பெறுவதற்கான வாய்ப்பினை வழங்கிப் பல நூற்றுக்கணக்கான மாணவர்களின் வாழ்க்கைக்கு ஒளி ஊட்டியுள்ளார்கள்.

**வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்க ளின் உயர்கல்வி**

சர்வதேசரீதியில் பிரபல்யமான லண்டன், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், மலேசியா Birmingham City University, Teesside University, City of London College, Stratford College London, Doncaster College, Newcastle College, Loughborough College, Stratford University (USA), Raffles Design Institute (AUSTRALIA) வழங்கும் அங்கீகாரம் பெற்ற பட்டங்களை (B.Sc (Hons), B.A (Hons), M.Sc, MBA, etc…)

**விளம்பர விவரணம்**

மேற்குறிப்பிட்ட முன்னணி கல்வி நிறுவனங்களில் இணைந்து பெற்றுக்கொள்ளும் அரிய வாய்ப்பினை பெலிக்ஸ் (Flex Institute) நிறுவனம் மாணவர்களுக்கு வழங்கி வரு கிறது. குறிப்பிட்ட தகவல் தொழில் நுட்பம், வர்த்தகமும் கணக்கியலும், வர்த்தக முகாமைத்துவம், நுண்கலை, வடிவமைப்பு, குற்றவியல், பொறியியல், அளவுக் கணக் கீடு, சமூக விஞ்ஞானம், அழகுக்கலை டிப்ளோமா, வடி வமைப்பு டிப்ளோமா, உள்ளக அலங்கார டிப்ளோமா, படப்பிடிப்பு டிப்ளோமா, திரைப்படப்பிடிப்பு டிப்ளோமா, சங்கீத டிப்ளோமா, வர்த்தக முகாமைத்துவ டிப்ளோமா, கல்வியியல் டிப்ளோமா, ஹோட்டல் முகாமைத்துவ டிப்ளோமா, தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா, ஏ.சி.சி.ஏ (O/L இன்றி கற்கக் கூடிய ஒரே ஒரு பாடநெறி).

அந்த வகையில் மாணவர்கள் குறைந்த கட்டணத்தில் விரும்பிய பாடநெறிகளை, குறித்த கல்வி நிவனங்களில் தொடரக்கூடியதாக மிகக் குறுகிய காலத்தில் அனுமதிகள் பயண ஏற்பாடுகள் என்பவற்றை செய்து கொடுப்பதில் பெலிக்ஸ் அரும்பணியாற்றி வருகிறது.

மாணவர்களின் விருப்புக்கேற்ப உயர்கல்விக்கான துறையினை இனங்கண்டு குறிப்பட்ட நாடுகளில் பிரபல கல்வி நிறுவனங்களில் அனுமதியினைப் பெற்றுக் கொடுப்பதிலும் அதற்கான விசா ஒழுங்குகள், பத்திரங்கள் தயாரித்தல் என்பவற்றை மிகத் துரித கதியில் முற்றிலும் இலவசமாக மேற்கொள்கிறது.

மாணவகள் விசா அனுமதிக்காக தமது சொந்த வங்கிக்கணக்கில் அல்லது பெற்றோரின் கணக்கில் ஆகக் குறைந்தது 28 நாள்கள் நிதியிருப்பு இருப்பின் போதுமானது. க.பொ.த சாதாரணதரத்துடன் அனுமதியைப் பெறமுடியும்.

இலவச விமான நிலையப் போக்குவரத்து, பகுதி நேரவேலை, இன்ரநெற் வசதி என்பன போன்ற சகல ஒழுங்குகளும் செய்து தரப்படும்.

மாணவர்கள் அனுமதியைப் பெறுவதற்கு பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

சுய விவரக்கோவை, கடவுச்சீட்டின் தகவல் பக்கப் பிரதி, பிறப்புச் சான்றிதழ் பிரதி (ஆங்கிலம்), கல்வித்தகமை (O/L, A/L, Degree) முதலியன.

மேலதிக விவரங்கள் தொடர்புகளுக்கு :-
Flex Institute
இல.04, IBC வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06.
தொ.பே: 0777 761346
E.mail : flexinstitute@sltnet.lk
Web: www.flexinstitute.lk

## மணிக்கூட்டு வீதி விரைவில் திறக்கப்படும்

நல்லூர்,மார்ச்23

யாழ்ப்பாணம் வெலிங்டன் தியேட்டரை அண்டி மூடப்பட்டிருக்கும் மணிக்கூட்டு வீதி இன்னும் சில தினங்களில் மக்களின் பாவனைக்காகத் திறந்து விடப்படவுள்ளதாக வடமாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

தற்சமயம் பஸ் நிலையம்வரை மூடப்பட்டிருக்கும் இந்த வீதியை மக்களின் பாவனைக்குத் திறந்துவிட படை அதிகாரி மகிந்த ஹதுருசிங்க இணக்கம் தெரிவித்துள்ளதாக, யாழ்.மாநகர சபைக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மேலும் கூறினார். (5-11-23)

சித்திரைப் புத்தாண்டினை முன்னிட்டு 50 ஆவது ஆண்டினை நோக்கிப் பயணம் செய்யும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின்

மாபெரும் வேலை வாய்ப்பு - 2010

துடிப்பு மிக்க இளைஞர், யுவதிகளே இன்று பல சாதனைகளைக் கடந்து இலங்கையில் முன்னணியில் திகழும் எமது நிறுவனம் காப்புறுதி ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பங்களை கோருகின்றது. மேற்படி பதவிக்கான அடிப்படைத் தகைமை.

★கா.பொ.த. சா.த 6 பாடங்கள் சித்தி
★வயதெல்லை 18-50வரை.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, பரந்தன், கொடிகாமம், சுன்னாகம், நெடுந்தீவு, நெல்லியடி, மானிப்பாய், பளை ஆகிய இடங்களிலிருந்து வரும் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை.

இன்றே அரச காப்புறுதியில் இணைந்து அதன் நன்மைகளைப் பெற்று வாழ்வில் முன்னேறிட... தங்களின் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி.

விற்பனை முகாமையாளர் - ஆயுள்,
இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,
1 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம்,
யாழ்ப்பாணம்.
விண்ணப்ப முடிவுத் திகதி : 10.04.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கு இந்தியாவை நட்புச் சக்தியாக்க வேண்டிய தேவையுள்ளது



சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களில் ஒருவர். நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்ட வேட்பாளராகப் போட்டியிடும் இவரின் நேர்காணல் இங்கு பிரசுரமாகின்றது.

கேள்வி: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிளவிற்குக் காரணமாக அண்மந்த தீர்வுத் திட்டத்தின் நகல் ஒன்று கிடைத்திருப்பதாகக் கூறிப் பொங்குதமிழ் இணையத்தளம் அதனை கடந்த 14ஆம் திகதி வெளியிட்டிருந்தது. இந்த நகல் உண்மையில் கூட்டமைப்பினரால் வெளியிடப்பட்ட தீர்வுத் திட்டத்தினுடையதா? நீங்கள் வெளியிட்ட தீர்வுத்திட்டம்தான் தற்போதைய பிளவுக்கு வழிவகுத்ததா? தமிழ் மக்களின் கடந்தகால வாழ்வு, போராட்டங்களின் தொடர்ச்சி யாக இந்தத் தீர்வுத் திட்டம் அமைகிறதா?

பதில்: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபட்டிருக்கிறது என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எங்களது 22 நாடாளுமன்ற உறுப்பினர்களில் சில பேர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தாங்களாகவே வெளியேறிச் சென்றவர்கள். சிலர் வெளிநாட்டில் அரசியல் தஞ்சம் புகுந்து அங்கு வசித்து வருகிறார்கள்.

இதில் பிளவு என்று நீங்கள் சொல்லுவது கஜேந்திரகுமார் மட்டுமே. இவர் கொள்கை முரண்பாடு என்று சொல்லிக் கொண்டு வெளியேறியுள்ளார். கஜேந்திரனுக்கும் பத்மினிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இரண்டு ஆசனங்களைக் கொடுத்திருக்குமாக இருந்தால் இந்தக் கொள்கை முரண்பாடு வந்திருக்குமா என்பது ஒரு கேள்வியாக இருக்கிறது. அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் தங்களை விலக்கியதாகக் கூறுகிறார்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பு அவர்களுக்கு இடம் கொடுத்திருக்குமாக இருந்தால் அவர்களுக்கு நிச்சயமாக இந்தக் கொள்கை முரண்பாடு வந்திருக்காது.

வன்னிப்போரின் இறுதிக் காலகட்டங்களில் அங்கு பல போராட்டங்கள் நடைபெற்றன. அந்தப் போராட்டங்களில் இவர்கள் தலைகாட்டியிருக்கலாம். அந்தப் போராட்டங்களை அங்குள்ளவர்கள் நடத்தியபொழுது ஒரு சில நாள்கள் வெறும் நபர்களாக இவர்கள் கலந்து கொண்டார்களே தவிர அதை இவர்கள் நடத்தவில்லை. இவர்கள் புலத்தில் எதையும் செய்யவில்லை.

அடுத்து தீர்வுத் திட்டம் குறித்துக் கேட்டிருந்தீர்கள். இது இறுதி நகல் அல்ல. ஆனால் அந்த தீர்வுத்திட்டத்தில் முழுமையாக இல்லாவிட்டாலும் சில விடயங்கள் இதில் ஒத்துள்ளன. இந்தத் தீர்வுத்திட்டத்தை வாசிக்க கூடிய யாரும் சொல்லுங்கள், இது தமிழ்த் தேசியத்தை மறுதலிக்கிறதா? இது தமிழர் தாயகத்தை மறுதலிக்கிறதா? இது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுதலிக்கிறதா? என்பதை இதை வாசித் தவர்கள் சொல்லவேண்டும். தமிழ் மக்களின் தேசியம், அவர்களின் தாயகம், அவர்களின் தன்னாட்சிஉரிமை என்ற சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில்தான் இந்தத் தீர்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் ஒரு பலமான அமைப் பாக இருந்தார்கள். அவர்களை அழித்து விட்டார்கள். இன்று எங்களுக்கு இராணுவ பலம் இல்லை. பேரம் பேசுகிற ஆற்றல் இல்லை. மக்களை எப்படியான நிலைக்கு உள்ளாக் கியிருக்கின்றது என்றால் ஒருவரும் இல்லாமல், வேரோடும், வேரடி மண்ணோடும் இடம் பெயர்க்கப்பட்டு, முகாம்களில் அடைக்கப்பட்டு, அந்த மக்கள் யாருடனும் பேசமுடியா மல், நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்களும் பார்க்க முடியாமல் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

எமது இனப்பிரச்சினைக்கான தீர்வு நோக்கியும் நாங்கள் போகவேண்டும். எங்கள் கைகளில் மக்களைக் குடியேற்றக் கூடிய அந்த அதிகாரம் இருக்குமென்றால் அந்த மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை கொழும்பிடம் கேட்டுக்கொண்டிருக்கத் தேவையில்லை. நாங்கள் வெளி நாடுகளுடன் பேசலாம். அல்லது வெளிநாட்டிலுள்ள தமிழ் மக்களுடன் பேசலாம்.

மூன்று லட்சம் மக்கள் என்பது கிட்டத்தட்ட ஒரு இலட்சம் வரையான வீடுகளை உள்ளடக்கியது. இவற்றில் பெரும்பான்மையான வீடுகளுக்குக் கூரைகள் மற்றும் கதவுகள் மாற்றினால் போதுமானது. சில வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டிருக்கும். ஆகவே இதனைப் பாகுபடுத்தி ஒவ்வொரு வீட்டிற்கும் எவ்வளவு வழங்குவது என்பதை சொல்வ தற்கு எம்மிடம் அந்த அதிகாரம் இருக்க வேண்டும். இந்த அதிகாரம் இப்பொழுது கொழும்பிடம் தான் இருக்கிறது.

இந்த அதிகாரம் ஒரு தீர்வுக்கூடாகத்தான் எங்களிடம் வரலாம். அந்த தீர்வானது குறைந்த பட்சம் ஒரு இடைக்கால தீர்வாகவா வது இருக்கலாம். விடுதலைப் புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான தீர்வை முன்வைக்கும் பொழுது இனப் பிரச்சினை பற்றிய தீர்வுக்கு நீண்ட காலம் எடுக்கலாம், ஆனால் மக்களுக்கு பல பிரச்சினைகள் இருக்கின்றன அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்றார்கள்.

இந்த தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டியதன் அடிப்படை- முதலாவது தமிழ் மக்களின் நிலமை. இதைக் கவனத்தில் எடுக்காமல் நாங்கள் தத்துவம் பேசிக் கொண்டிருக்க முடியாது. அதற்காக எதனையும் நாங்கள் விட்டுக்கொடுத்து அந்த தீர்வுத் திட்டத்தை கொண்டு வர முடியாது. தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினையை வைத்துக்கொண்டு, அதனை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுகின்றதோ என்னவோ, முதலில் அதற்கு சர்வதேச ஆதரவைத் திரட்ட வேண்டும்.

சர்வதேச சமூகம் இன்றுவரை தனிநாடு என்ற தீர்வை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு தீர்வை நாங்கள் கேட்கிற பொழுது நிறைய நாடுகள் அதற்கு ஒத்துழைக்க சந்தர்ப்பம் இருக்கின்றது. உதாரணமாக சமஷ்டி அமைப்பு முறை. அது அமெரிக்காவில் இருக்கிறது. அவுஸ் ரேலியா போன்ற நாடுகளில் உள்ளது. இந்தியாவில் அரைகுறை நிலையில் உள்ளது.

நாங்கள் சமஷ்டி முறையிலான தீர்வை முன்வைக்கும் பொழுது அதை யாரும் பிழை என்று குறிப்பிட முடியாது. அப்படியென்றால் அவர்களது நாட்டில் அது இருக்க முடியாது. அரசாங்கம் அதை தர மறுத்தால் அதன் மீது சர்வதேச அழுத்தங்




கள் அதிகரிக்கும். நிர்ப்பந்திக்கப்படும். நாங்கள் தனி நாட் டுக்கு குறைவான ஒரு விடயத்தைதான் கேட்கிறோம். ஏற்கனவே விடுதலைப் புலிகள் பேசிய விடயங்களை எல்லாம் கவனத்தில் எடுத்து, 2005 இல் சந்திரிகா முன் வைத்த அறிக்கை. ஒஸ்லோவில் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் ஏற்பட்ட உடன்பாடு. இதை பிரபாகரன் எற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னா லும் அதற்கு முன்வந்த மூன்று மாவீரர் தின உரைகளில் அவர் இதைப் பற்றிப்பேசி ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

அந்த அடிப்படையிலேதான் இந்த தீர்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்வுத்திட்டம் என்பது தீர்வை நோக்கி நாங்கள் இராணுவ ரீதியான ஆற்றல் எதுவும் இல்லாமல், பேரம் பேசக்கூடிய சக்தி எதுவும் இல்லாமல், முழு மக்களும் வீதியில் கொண்டு வந்து அடைக்கப்பட்ட சூழலில் சர்வதேச ஆதரவுகளை எடுக்க கூடிய வழி முறைகள் ஆராயப்பட்டுத் தான் தயாரிக்கப்பட்டுள்ளது.

கேள்வி: உங்களுக்குள் ஏற்பட்ட பிளவு அல்லது முரண்பாட்டுக்கு வேறு என்ன காரணம் இருக்கிறது? அவர்கள் விலகினார்களா? அல்லது விலக்கப்பட்டார்களா?

பதில்: அதை முரண்பாடு என்று சொல்ல முடியாது. அதைப் பற்றி அவருடன் மணித்தியாலக் கணக்காக உரையாடியிருக்கிறோம். நாங்கள் அடிப்படையில் எதையும் விட்டுக் கொடுத்ததாக இல்லை. நாங்கள் விட்டுக் கொடுத்திருக்கிறோம் என்று அவர் கூறுகிறார். அதை நாங்கள் தொடர்ச்சியான விவாதத்திற்கு உட்படுத்தலாம். எங்களுடைய நிலைப்பாட்டையும் அவர்களுடைய நிலைப்பாட்டையும் விவாதத்திற்கு உள்ளாக்கலாம். அதற்கு மேலாக அவர்கள் சில சட்டத்தரணிகளை அழைத்துக் கொண்டு வந்தார்கள். ஒரு பொது இணக்கப் பாட்டை காண்பதற்காகவும் கூட்டை உடைக்கக் கூடாது என்பதற்காகவும் இந்த தீர்வுத் திட்டத்தை கூட நாங்கள் கைவிடுவதாக சொல்லியிருந்தோம்.

தேர்தலிற்கு பிற்பாடு எல்லோருடைய இணக்கப்பாட்டுடன் தீர்வுத்திட்டம் தயாரிக்க வேண்டும் என்றார். தனக்கு இணக்கப்பாடு இல்லை என்று கூறிவிட்டு லண்டன் போய்விடுவார். எங்களால் ஒன்றும் செய்ய முடியாது. இது ஐக்கிய நாடுகள் சபையில் வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்துவது போல. அப்படியொரு அதிகாரத்தை அவருக்கு தரமுடியாது என்று நாங்கள் கூறினோம்.

எந்த விடயத்திலும் பெரும்பான்மை முடிவுகளை அங்கீகரிக்கப் பழக வேண்டும். நாங்கள் இயன்ற வரையில் ஏகமனதாக இணக்கப்பாடுகளை உருவாக்குவது சரி. விட்டுக் கொடுப்புக்கள் செய்யாமல் தன்னுடைய முடிவில் உறுதியாக இருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றும் செய்ய முடியாது. இதைத்தான் அவருக்கு நாங்கள் சொன்னோம். அதை ஏற்றுக்கொண்டு எழுத்து மூலமாக புதிய தீர்வுத் திட்டம் ஒன்றை அடுத்த தேர்தலில் பின்னர் புதிய உறுப்பினர்களுடன் தயாரிக்கலாம் என்று கூறியிருந்தோம்.

அவரை நாங்கள் வெளியேற்றவில்லை. அவருக்கு வீட்டோ அதிகாரத்தை கொடுக்கவில்லை என்பதற்காக அவர் தானாக வெளியேறினார். இந்தத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்புதான் லண்டனிலிருந்து வந்தார். வந்த வுடன் விலத்திப் போவதற்கான சந்தர்ப்பத்தை பார்த்தாரே தவிர கூட்டமைப்பில் வேலை செய்வதற்கான சந்தர்ப்பத்தை பார்க்கவில்லை.

## தமிழ் கூட்டமைப்பைச் சின்னாபின்னப்படுத்தும் நிகழ்ச்சி நிரலுடன் அரசாங்கம் செயற்படுகிறது

கேள்வி: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றபடி செயற்படுகிறது, என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. உங்களது நிகழ்ச்சி நிரல் என்ன?

பதில்: நூற்றுக்கு நூறு வீதம் இது பிழையான கருத்து. பதினெட்டு வருடத்திற்கு பிற்பாடு தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு இணங்கத்தான் நாங்கள் டெல்லியை சந்தித்தோம். இந்திய பிரதமருடன் ஒரு சுற்றுப் பேச்சு வார்த்தையை நடத்தினோம். இந்த விஜயம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கப்பட்டது. டெல் லியுடன் நெருக்கமான உறவை பேண வேண் டும் என்பது தமிழீழ விடுதலைப் புலிகளின் விருப்பமாக இருந்தது. அதற்கு ஏற்ப டெல்லியுடன் பேசுமாறு எங்களுக்கு சொல்லப்பட்டது. அதனால் நாங்கள் தொடர்ந்து பேசி வந்தோம்.

டெல்லிக்கு இலங்கை தொடர்பாகவோ, தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாகவோ, ஈழத் தமிழர் தொடர்பாகவோ வேறுபட்ட நிகழ்ச்சி நிரல் இருக்கலாம். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவாக இருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள்தான் தமிழ் மக்களின் பேரம் பேசும் ஆற்றல். தமி ழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ பலம் இல்லாமல் போகும் என்றால் எங்களுக்கு பேரம் பேசும் ஆற்றல் இல்லை. ஆகவே இராணுவ பலத்தை வைத்திருக்க வேண்டும் என்பதில் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒரே கருத்தைத் தான் கொண்டிருந்தது.

தங்களைப் பற்றி மோசமான கருத்தை தமிழ் மக்கள் கொண்டிருக்கிறார்கள் என்பது இந்தியாவுக்கு தெரியும். எங்களுக்கு ஒரு தீர்வு தேவை என்றால் யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இந்தியாவின் பங்களிப்பு வந்தேயாகும். தனது நாட்டுக்குகுந் தகமான தீர்வென்றால் இந்தியாவுக்கு அதைக் குழப்பக் கூடிய வல்லமையும் உண்டு. அதுதான் இலங்கைக்கும் பிடிக்கும்.

அண்மைக்காலமாக இந்தியா எங்களுடைய எதிர் சக்தியாக நடவடிக்கைகளில் இறங்கியிருந்தாலும் எங்களுடைய நட்பு சக்தியாக அதை மாற்றவேண்டும். அவர்களை வைத்துக்கொண்டுதான் இலங்கை அரசாங்கம் இந்த யுத்தத்தை நடத்தி முடித்திருக்கிறது. அதே இந்தியாவைத்தான், இந்திய இராணுவம் வருவதற்கு முன்பாக, ஐக்கிய நாடுகள் சபையிலும் வேறு பல இடங்களிலும் இலங்கையில் இன அழிப்பு நடக்கிறது என்று இந்திரா காந்தி பேச வைத்திருந்தார்.

இலங்கை இனப் பிரச்சினையை உலகம் முழுக்க கொண்டுபோக இந்தியா பெரிய பங்கு வகித்தது. ராஜிவ் காந்தியின் கொலைக்கு பிறகு அதில் பெரிய மாற்றங்கள் வந்திருந்தன. பின்னர் இலங்கை அரசுக்கு சார்பாக இந்தியா மாறியிருந்தது. இலங்கை அரசாங்கம் அதனை தனக்கு சாதகமாக பயன்படுத்தியது. இந்த யுத்தத்தில் கூட இலங்கைக்கு சார்பாக இந்தியா நடந்திருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்தது.

ஆனால் இன்று இனப் பிரச்சனைக்குரிய தீர்வை காண்பதில் இந்தியாவை நட்பு சக்தியாக்க வேண்டிய தேவையுள்ளது. உலகத்தில் இன்று எங்கு பேசினாலும் அமெரிக்காவுடன் பேசினாலும் நோர்வேயுடன் பேசினாலும் அவர்கள் இந்தியாவுடன் பேசுங்கள் என்றே சொல்லுகிறார்கள்.

அவர்கள் 90 வீதமான பங்கை வகிக்கின்றார்கள். இந்தியாவிற்கு பின்னால் நாம் நிற்போம் என்கிறுர்கள். இந்த நிலையில் இந்தியாவுடன் பேசக் கூடாது இந்தியாவுக்கு கிட்ட போகக்கூடாது என்றால் இந்த பிரச்சினைக்கு வேறு என்னதான் வழி?

இலங்கையிலிருந்து 18 கிலோ மீற்றர்

**சந்திப்பு: தீபச்செல்வன்**

தூரத்தில்தான் இந்தியா இருக்கிறது. இலங்கையில் நடக்கக்கூடிய விடயங்கள் இந்தியாவின் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டதாக இருக்கலாம். இந்தியாவின் பொருளாதார நலன்களுடன் சம்பந்தப்பட்டிருக்கலாம். இன்று பருத்தித்துறையில் வீதிகளை திருத்த சீன அரசு வந்திருக்கிறது. இந்தியா இன்று சொ்லலுகிறது, யாழ்ப்பாணத்தில் தான் ஒரு துணைத் தூதுவராலயம் போடப் போவதாக. அவர்கள் தமிழ் மக்களுக்கு விசாக் கொடுக்கும் ஆசையிலா திறக்கிறார்கள்?

இங்கு சீனாக்காரர்கள் வந்து விட்டார்கள். அவர்களை கண்காணிக்க அவர்களுக்கு ஒரு அலுவலகம் தேவைப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் துணைத் தூதுவராலயம் அமைக்க இலங்கை அரசு அனுமதி வழங்கியுள்ளது. அவர்கள் போடத்தான் போகிறார்கள். எங்களைக் கேட்டா போடப் போகிறார்கள்.

இதனால் அவர்களை எங்களுடைய நிகழ்ச்சி நிரலுக்குள் கொண்டு வரவேண்டி

*(20 ஆம் பக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் தனித்துவமான...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

காணாமற் போனவர்களது பிரச்சினை தொடர்பில் அவர்களுக்கம் அவர்களது குடும்பங்களுக்கும் நீதி கிடைக்க நடவடிக்கை எடுத்தல்.

தமிழ்மக்கள் மீதான சித்திரவதைகள், கைதுகள், பயமுறுத்தல், ஆட்கடத்தல் என்பனவற்றை தடுத்துநிறுத்தப் பாடுபடுதல்.

தமிழ் மக்கள் மீது இனப்படுகொலை, மற்றும் போர்க்குற்றங்கள் புரியப்பட்டுள்ளமை, வெளிப்படையானதே. இந்தக் குற்றங்கள் தொடர்பாக நீதி விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதுடன் அவ்வாறான விசாரணை களுக்கான முழு ஒத்துழைப்புக்களையும் வழங் கத் தயாராக உள்ளோம்.

### தமிழ்த் தேசியத்தின் பொருளாதார அபிவிருத்தி

**அபிவிருத்திக் கொள்கைகளின் அடிப்படைகள்:-**

* தமிழ்த் தேசத்திலுள்ள அரைவாசிப் பகுதியினராகிய பெண்களின் மறைந்துள்ள ஆளுமையை வெளிக்கொணர்ந்து அவர்களை அரசியல் சமூக, பொருளாதார, அபிவிருத்தி நடவடிக்கைகளில் முழுமையாக பங்கேற்க வாய்ப்பளித்தல்.

* தமிழ்த் தேசத்தின் சமூகக் கட்டமைப்புக்களில் புரையோடிப்போயுள்ள சாதியக் கருத்தியலையும் நடைமுறைகளையும் ஒழிக்க நடவடிக்கை எடுத்தல்.

* எமது தாயகத்தின் அபிவிருத்தித் திட்டங்களை சூழல் (பௌதிக, உயிரியல், தாவர வளங்கள்) சமநிலையைப் பேணும் வகையில் மேற்கொள்ளல்.

* எமது தேசத்தின் பண்பாட்டுத் தனித்துவங்களையும், பாரம்பரியங்களையும் காலத்திற்கேற்ப பேணும் வகையில் அபிவிருத்தியை மேற்கொள்ளல்.

* அபிவிருத்தியை (Sustainable Development) ஏற்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை படிப்படியாக உயர்த்துதல்.

* கொழும்பை மையப்படுத்தியதாக அல்லாத தமிழர் தாயகத்தை மையப்படுத்திய பொரு ளாதார கட்டுமானத்தை ஊக்குவித்தல். கொழும் பிலிருந்து தாயகப் பகுதியை நோக்கி பொருளாதார நகர்வை ஊக்குவித்தல்.

* எமது தேசத்தின் அபிவிருத்தியின் இலக்கு களையும்நெறிமுறைகளையும்,திட்டமிடுவதற்கும், செயற்படுத்துவதற்குமாக கல்விமான்கள், சிந்தனையாளர்கள், துறைசார் வல்லுநர்கள், பொது அமைப்புகள், தமிழ் தேசத்தின் அனைத்து தமிழ் முஸ்லிம் அரசியல் கட்சிகள் உட்பட்ட பரந்த பிரதிநிதித்துவத்தைக் கொண்ட அதிகாரசபை ஒன்றை உருவாக்கப் பாடுபடுவோம்.

### புலம்பெயர் மக்களது பங்களிப்பு

* அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளும்போது ஒவ்வொரு கட்டத்திலும் இறுதி முடிவுகள் எடுப்பதற்கு முன்னர் எமது தேசத்தின் பிரிக்க முடியாத அங்கமானதும் மிக முக்கியமான வள மாகவும் இருக்கின்ற புலம்பெயர் தமிழ் சமூகத்தின் ஆலோசனைகள் பெறப்படும்.

* சிறீலங்காவின் இனவழிப்பு நடவடிக்கையால் பேரிழப்பைச் சந்தித்த எம்மக்களின் உடனடித் தேவைகளை பூர்த்தி செய்ய உழைப்பதோடு அவர்களை நீண்டகாலத்தில் அவர்களது சொந்தக் கால்களில் நிற்க வைப்பதற்கான வேலைத் திட்டத்தை புலம்பெயர் உறவுகளின் துணையோடு திட்டமிட்டு மேற்கொள்வோம்.

* தமிழர் தாயகப் பிரதேசத்தின் வேலைவாய்ப்பு, பொருண்மிய மேம்பாடு மற்றும் வளங்களை பாதுகாக்கும் விடயங்களில் நீண்டகால நலன்களின் அடிப்படையில் புலம்பெயர் மக்களின் முதலீட்டைப் பொருத்தமான இடங்களில் ஊக்குவிப்போம்.

* போர் அனர்த்தங்களால் உடல் உள ரீதியாக கடுமையாகப் பாதிக்கப்பட்டு உடனடி நீண்டகால மருத்துவ தேவைகளை எதிர்நோக்கும் எமது உறவுகளுக்கு அத்தியாவசிய தேவைகளை புலம் பெயர் உறவுகளின் துணையோடு மேற்கொள்ளும்.

* நீண்டகால பொருளாதாரத் தடையாலும் போராலும் பாதிக்கப்பட்ட கடற்றொழில், விவசாயம், சிறு கைத்தொழில், வர்த்தகம், போக்குவரத்துச் சேவை போன்றதொழில்முயற்சிகளில் ஈடுபட்டு பாதிப்படைந்தவர்களுக்கு உரிய நட்டஈட்டைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதோடு அவர்கள் தமது தொழில்களை மீளத் தொடங்குவதற்கான ஊக்குவிப்புக்களை புலம்பெயர் மக்களின் உதவியோடு மேற்கொள்வோம்.

*பல்லாயிரமாகிவிட்ட பெண் தலைமை வகிக்கும் குடும்பங்களினதும் (Women healed families) தாய் தந்தையரை இழந்து நிர்க்கதிக்குள்ளாகி நிற்கும்எமதுபிஞ்சுகளினதும் எதிர்கால மேம்பாட்டிற்கான வழிவகைகளை கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்வோம்.

பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ள எமது மாணவர்களின் கல்வித் தராதரத்தை மேம்படுத்த புலம்பெயர் தமிழ்மக்களின் உதவிகளுடன் அவர்கள் வாழும் நாடுகளினதும் தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களினதும் உதவிகளைப் பெற்று உழைப்போம்.

### தமிழ் மக்களுடனான உறவுகள்

*தமிழக மக்களுடன் இணைந்து எமது மக்களது நீதியான அரசியல் சமூக பொருளாதார மேன்மைக்காக பாடுபடுவோம். தமிழக உறவு களின் துணையுடன் இந்தியாவின் ஏனைய மாநிலமக்களுடனும் அரசியல் கட்சிகளுடனும் மற்றும் சமூக அமைப்புக்களுடனும் உறவை வளர்த்து தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை வெளிக்கொணர்ந்து நீதியினைப்பெற்று...

* எமது மக்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை, தனித்துவமான இறைமை கொண்ட தேசம் என்ற அடிப்படைகள் சமரசத்திற்கு அப்பாற்பட்டவை. எமது மக்களின் நலன்களுக்கு மேற்குறித்த அந்தஸ்து அடைப்படையானது. நாம் சிங்கள தேசம், இந்தியா உட்பட்ட சர்வதேச சமூகத்தின் நலன்களுக்கு எதிரானவர்கள் அல்லர். மாறாக, எமது தேசத்தின் நலன்கள் பேணப்படும் வகையில் சிங்கள தேசத்துடனும், இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்துடனும் ஆரோக்கியமான இராஜதந்திர உறவுகளைக் கட்டியெழுப்ப விரும்புகின்றோம்.

மேற்கூறப்பட்ட தீர்மானங்களை பூரணமாகச் செயல்வடிவில் சாதிக்கும் நோக்குடன் தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி யினராகிய நாம் உறுதியுடன் உழைப்போம்.

தமிழ்பேசும் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க ஒரே கொடியின் கீழ் ஒன்றிணைந்து அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகின்றோம். எமக்கு அமோக ஆதரவை வழங்க வேண்டுமென தமிழ் பேசும் மக்களை நாம் உரிமையுடன் அறைகூவி அழைக்கின்றோம் - என்றார். (ஓ)

# மரண அறிவித்தல்

## திருமதி அன்னம் நடராசா



றெயில் றோட், கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னம் நடராசா நேற்றுமுன்தினம் (21.03.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-இராசம்மா தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற தபாலதிபர் மருதப்பு நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான மருதப்பா -அன்னம்மா தம்பதியரின் மருமகளும், சிவகுமார் (ஓய்வுபெற்ற சிரேஷ்ட புள்ளி விபரவியலாளர், தொகைமதிப்புத் திணைக்களம், கொழும்பு), சாந்தகுமாரி, ஜெயக்குமார் (அவுஸ்திரேலியா), பிறேமகுமாரி (ஜேர்மனி), உதயகுமாரி (கொழும்பு), தேவகுமாரி (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), சாம்பவி, யசோதா (ஆசிரியர், யாழ்.இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும், தங்க மணி, விமலாதேவி, வசந்தாதேவி, சுசீலாதேவி, காலஞ்சென்றவர்க ளான தங்கேஸ்வரி, பரராசசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரி யும், திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற அதிபர்), காலஞ்சென்ற இராஜேஸ் வரி மற்றும் யோகேஸ்வரி (அவுஸ்திரேலியா), பாலகிருஷ்ணா (ஜேர்மனி), சிதம்பரநாதன் (கணக்காளர், கொழும்பு), சண்முகரத்தினம் ஆகியோரின் மாமியும், Dr.வித்தியா, ஆர்த்திகா (வவுனியா வளாகம்), மயூரன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), கஜானன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22.03.2010) பி.ப 3மணியள்வில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

றெயில் றோட்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (95783)

தகவல்:
ந.சிவகுமார் (மகன்)

சீட்டிழுப்பு இல. 2219
திகதி 2010.03.21
மஹஜன சம்பத
அலுவலக முடிவுகள்
வெற்றி எழுத்து வெற்றி எண்கள்
K 0 4 2 6 9 0

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | K | 0 | 4 | 2 | 6 | 9 | 0 | ரூபா. 11,444,012/= | பரிசு - |
| 1ம் பரிசுகள் | | 0 | 4 | 2 | 6 | 9 | 0 | ரூபா. 20,00,000/= | பரிசுகள் 01 |
| 2ம் பரிசுகள் | | | 4 | 2 | 6 | 9 | 0 | ரூபா. 100,000/= | பரிசுகள் 05 |
| 3ம் பரிசுகள் | | | | 2 | 6 | 9 | 0 | ரூபா. 10,000/= | பரிசுகள் 71 |
| 4ம் பரிசுகள் | | | | | 6 | 9 | 0 | ரூபா. 1,000/= | பரிசுகள் 604 |
| 5ம் பரிசுகள் | | | | | | 9 | 0 | ரூபா. 100/= | பரிசுகள் 6,043 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 0 | ரூபா. 20/= | பரிசுகள் 60,122 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 0 | 4 | 2 | 6 | 9 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 06 |
| 8ம் பரிசுகள் | | 0 | 4 | 2 | 6 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 52 |
| 9ம் பரிசுகள் | | 0 | 4 | 2 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 603 |
| 10ம் பரிசுகள் | | 0 | 4 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 6,060 |
| 11ம் பரிசுகள் | K | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 23,952 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 11,462,551.00
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,575,080.00
தேசிய லொத்தர் சபை
முடிவுகளை அறிய www.nlb.lk

# இனப்பிரச்சினைக்கு........

(19ஆம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளது. தமிழ் மக்களின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான நிகழ்ச்சி நிரலுக்குள் அவர்களை கொண்டு வரவேண்டும். எங்க ளது அடிப்படை விடயங்களை விட்டுக் கொடுக்காமல் அவர்களை அந்த தீர்வுக்கு கொண்டு வரப்பார்க்கலாம். இந்தியாவுடன் பேசுவதால் அவர்களுடைய நிகழ்ச்சி நிரலுக்குள் போவதா? இலங்கை ஜனாதிபதியுடன் பேசுவதால் அவரது நிகழ்ச்சி நிரலுக்குள் போவதா? அது ஒரு சிறு பிள்ளைத்தனமான கருத்து அதில் எந்தவித அர்த்தமும் இல்லை.

**கேள்வி:** கடந்த காலத்தில் அரச தரப்பை குற்றம் சாட்டி அவர்களிடமிருந்து வாக்குகளை பாதுகாக்க வேண்டும் என்ற வகையில் தேர்தல் பிரச்சாரங்கள் நடைபெற்றன. கூட்டமைப்புக்குள் இருந்தவர்களின் மீதே சேறு பூசும் நிலை ஏற்பட்டிருக்கிறது. தமிழ்மக்களைப் பொறுத்த வரையில் இது மிகுந்த துக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கை என்றே நான் நினைக்கிறேன். இந்த நிலை உங்க ளுக்கு எப்படியுள்ளது.

**பதில்:** நீங்கள் குறிப்பிடும் விடயம் நிச்சயமாக நடைபெறுகிறது. அரசாங்கத்திற்கு ஒரு நிகழ்ச்சி நிரல் இருக்கிறது. விடுதலைப் புலிகளை இல்லாமல் செய்வது. அது முடிந்துவிட்டது. இப்பொழுது இரண்டாவது பிரச்சினை இருக்கிறது. தமிழ் மக்களுக்காக பேசக் கூடிய ஆற்றல் யாருக்கு உண்டு, தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு மாத்திரமே. தமிழ் தேசியக் கூட்டமைப்பை சின்னா பின்னப்படுத்த வேண்டும், சிதறடிக்க வேண்டும்; தமிழ் மக்கள் மத்தியில் அதற் குள்ள மரியாதையை இல்லாமல் செய்ய வேண்டும் என்பது அரசாங்கம் விரும்பு கிற விடயம். இந்த விடயத்தை நிறைவேற் றுவது யார்? ஒன்று இந்த தேர்தலை பயன்படுத்தும் சுயேச்சை குழுக்கள் என்று நிறைய வந்துள்ளன. அத்துடன் ஆளும் கட்சி இருக்கின்றது. ஆளும் கட்சிக்கு சாதகமான சுயேச்சை கட்சிகள் இருக்கின்றன. எங்களில் இருந்து பிரிந்து சென்றவர்களும் அதே காரியத்தை தான் செய்கிறார்கள்.

திருகோணமலையிலிருந்து சம்பந்தரை தோற்கடிக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் சுரேஸையும் மாவையையும் தோற்கடிக்க வேண்டும் என்கிறார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து அரசு சார்பாக போனாலும்கூட யாராவது தமிழர்கள்தான் போக வேண்டும். ஆனால் திருகோணமலை மாவட்டத்தில் ஒரே ஓர் ஆசனம்தான் தமிழர்களுக்கு கிடைக்கும். கொஞ்ச வாக்கு அதிகமாக கிடைத்தால் ஒரு போனஸ் ஆசனம் கிடைக்கும். அங்கு ஒரே ஒரு தமிழ் பிரதிநிதிதான் வரப்போகிறார். அங்கு தமிழ் பரதிநிதி வராவிட்டால் அங்கு சிங்களப் பிரதிநிதிதான் வரப்போகிறார். அப் படியானால் அங்கு தமிழ் மக்களின் பிரதிநிதித்துவமே இல்லாமல் போய்விடும்.

வடகிழக்கின் தலைநகரமாக கருதும் திருகோணமலையில் இருக்கும் ஒரு ஆசனத்தை இழக்கும் நிலைமையை எங்களில் இருந்து பிரிந்து சென்றவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். உண்மையில் அவர்களுக்கு தேசியத்தைப் பற்றி என்ன தெரியும்? அல்லது வடகிழக்கு இணைப்பைப் பற்றி என்ன தெரியும்? நீங்கள் தாயகம் என்று எதைக் கூறுகிறீர்கள்? இது எல்லாவற்றுக்குமான சுய நிர்ணய உரிமை பற்றி நீங்கள் என்ன பேசுகிறீர்கள்?

இது வெறும் சேறடிப்பு மாத்திரமல்ல. அரசாங்கம் சம்பந்தரை அரசியலில் இருந்து இல்லாமல் செய்ய விரும்புகிறது. இதனால் தமிழ்தேசிய தலைமையை முற்று முழுதாக அழித்து விடலாம் என்று அரசாங்கம் நினைக்கிறது. அந்த விருப்பத்தை இன்று ஈடேற்றுவது யார்? எங்களில் இருந்து பிரிந்து சென்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலம். அவர்தான் சம்பந்தர்

தோற்கடிக்கப்பட வேண்டும் என நூற்றுக்கு நூறு வீதம் ஈடுபாட்டுடன் இருக்கிறார்.

சம்பந்தர் தமிழ் தேசியத்தை கைவிட்டவர் என்ற அவருடைய வாதம் முதலில் பழையானது என்பதற்கு அப்பால் வடக்கையும் கிழக்கையும் இணைக்கிற தலைநகர் திருகோணமலையின் பிரதிநிதித்துவத்தையே இல்லாமல் செய்ய வேண்டும் என சொல்லக் கூடிய ஒருவர் எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கு தலைமை தாங்கப் போகிறேன் என்று சொன்னால் எப்படி சரியாக இருக்கும்? இது எந்த விதத்தில் சரியாக இருக்கும்? அவர் தெரிந்தோ தெரியாமலோ அரசாங்கத்தினுடைய அந்த நிகழ்ச்சி நிரலுக்குள் ஆட்பட்டிருக்கிறார். இது சேறுபூசுதல் என்பதற்கப்பால் தமிழ் தேசியத்தை அழிக்கிற வேலையைதான் செய்கிறது.

**கேள்வி:** கடந்த காலத்தில் தமிழ் கட்சிகள் ஒன்று பட வேண்டும் என்பதை பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பலர் வலியுறுத்தி வந்தார்கள். தமிழ் காங்கிரஸ் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி மற்றும் கூட்டமைப்பின் தலைவர் முதலியவர்கள் பிரிந்து சென்றவர்கள் வந்து இணைய வேண்டும் என அழைப்பு விடுத்திருந்தார்கள். நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறாகள்?

**பதில்:** நிச்சயமாக, என்னைப் பொறுத்தவரை அடிப்படையில் முரண்பாடு என்பது பிழையானது. அவர்கள் தாங்கள் அறிந்த வகையில் தமது கருத்துக்களை கூறுகின் றார்கள். எல்லோரும் இணைந்து செயற்பட வேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பம். இதற்காக சித்தார்த்தனைக்கூட நாங்கள் இணைத்துக் கொள்ள விரும்பினோம். சித்தார்த்தன் கடைசி வரை பார்க்கலாம் பார்க்கலாம் என கூறியிருந்தார். கடைசியில் அவர் வரவில்லை. ஆனந்தசங்கரியுடனும் பேசினோம். அவர் தனக்கு யாழ்ப்பாணத்தில் ஆறு ஆசனம் கேட்டார். அதனால் தான் எங்களுக்கு அவருடன் ஓர் இணக்கப்பாட்டிற்கு வர முடியவில்லை. நாங்கள் எல்லோருமே ஓர் அணியில் வருவதற்கான முயற்சியை மேற்கொண்டோம். அந்த வகையில் கஜேந்திரகுமாரை மீண்டும் வந்து இணைய நாங்கள் அழைப்பு விடுக்கிறோம்.

**கேள்வி:** தொடக்க காலத்தில் சாத்வீகப் போராட்டம் பிறகு ஆயுதப் போராட்டம் தற்பொழுது அரசியல் ரீதியான ஒரு போராட்டமென தமிழ் மக்களுக்கு முன்னால் விரிந்துள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு இதை எப்படிகையாளுகிறது? தமிழ் மக்களை இதற்காக எப்படி அணி திரட்ட முடியும்?

**பதில்:** ஆயுதப் போராட்டத்தையோ சாத்வீகபோராட்டத்தையோ நடத்த முயலும் பொழுது மக்களுடைய மன உணர்வுகளை புரிந்து கொள்ள வேண்டும். மக்கள் பயந்து போயிருக்கிறார்கள். மக்கள் சுட்டு வீதிகளில் வீசப்பட்ட, இராணுவ ஆட்சிக்குள்தான் இன்னும் இருக்கிறார்கள். மக்களுக்கு முன்னாலும் பின்னாலும் இராணுவம்தான். மக்கள் கூட்டத்திற்கு வரப்பயப்படுகிறார்கள். மக்கள் வாக்களிக்க பயப்படுகிறார்கள். இப்படியான நிலையில்தான் நாங்கள் இருக்கிறோம். இந்த நிலைமையில் எங்களுக்கு இருக்கும் பலம் என்னவென்றால் இனப் பிரச் சினை தீர்வுக்கு சர்வதேச ரீதியாக ஒரு சாதகமான சூழல் ஏற்பட்டிருப்பதுதான்.

அந்த சாதகமான சூழ்லை மையப்படுத்தி அதன் ஊடாக ஒரு தீர்வை நோக்கி போவது எப்படி? அப்படியான தீர்வை நோக்கி செல்லும் பொழுது இலங்கை அரசாங்கம் அதற்கு ஒத்து வராமல் இருக்குமாக இருந்தால் நிச்சயமாக சர்வதேச சமூகம் எங்கள் பக்கம் இருக்கும். சர்வதேச சமூகம் எங்களுடன் நிற்கும் அந்தக் கால கட்டத்தில் மக்களை திரட்டி தீர்வுத்திட்டத்தை கொண்டுவர சாத் வீகமான போராட்டத்தை நடத்த முடியும். அதற்கு முன்பாக மக்களுக்கு தைரியம் அளித்து அவர்களை மீளக் குடியேற்றி அந்த மக்கள் தங்கள் கால்களில் நிற்கும். ஒரு நிலை வந்தால்தான் மக்கள் சிந்திப்ப தற்கான சூழல் தோன்றும்.

சுற்றி வர இராணுவம். வெளியில் போவதற்கும் மலசலம் கழிப்பதற்கும் வழியில்லாமல் வேறு விடயங்களை பேச முடியாது. அந்த மக்களுக்கு பாதுகாப்பான வாழ்வு வேண்டும். அவர்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்ப வேண்டும். தொழிலை தொடங்க வேண்டும். எங்கள் சனம் பிச்சைக்காரராக இருந்த சமூகம் அல்ல. இன்று மிக மோசமான பிச்சைக்காரர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள். அந்த வழி முறையில் போனால் தான் நிச்சயமாக இந்த போராட்டத்தை கொண்டு செல்ல முடியும். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்னையில் போலித் தொழிற்சாலை கண்டுபிடிப்பு

# காலாவதியான மருந்துகளை விற்றுவந்த 7 பேர் கொண்ட மோசடிக் கும்பல் கைது



சென்னை, மார்ச் 23

சென்னையில் காலாவதியான மருந்து; மாத்திரைகளை புத்தம் புது மருந்து, மாத்திரைகள் போல தயாரித்து விற்பனை செய்த போலித் தொழிற்சாலை ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. காலாவதியான மருந்துகளை விற்பனை செய்து பொதுமக்கள் உயிரோடு விளையாடிய 7 பேர் கொண்ட கும்பலையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

சென்னை நகரில் குறிப்பாக வட சென்னைப் பகுதியில் போலி மருந்துகள் நடமாட்டம் அதிகமாக உள்ளன எனவும், இதை வைத்து ஒரு மோசடிக் கும்பல் கோடி கோடியாக கொள்ளையடித்து மக்கள் உயிரோடு விளையாடுகிறது என்றும் கடந்த சில மாதங்களுக்கு முன்பு செய்தி வெளியாகியது.

உடனடியாக அதிகாரிகள் வடசென்னை பகுதியில் சோதனை நடத்தி போலி மருந்துகள் தயாரிக்கும் கும்பல் மீது நடவ டிக்கை எடுத்தார்கள்.

இந்த நிலையில் இதுபற்றி விசாரணை நடத்திய அதிகாரிகளுக்கு மிகப்பெரிய திடுக்கிடும் தகவல் ஒன்று கிடைத்தது.

சென்னை கொடுங்கைரில் மாநகராட்சி குப்பை கொட்டும் தளம் உள்ளது. காலாவதியான மருந்து மாத்திரைகளை இங்கு கொண்டுவந்து கொட்டுவார்கள். இதை ஒரு கும்பல் குறைந்த விலைக்கு வாங்கி புதிய மருந்து மாத்திரைகள் போல் விற்பனை செய்கிறது என அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது.

தனிப்படைப் பொலிஸ் விசாரணையில் காலாவதியான மருந்துகளை புதிய மருந்துகளைப்போல விற்பனை செய்வதில் ஒரு பெரிய கும்பல் செயற்படுவது தெரிந்தது. இது தொடர்பாக போலித் தொழிற்சாலை ஒன்று கோயம்பேடு அருகேயுள்ள சின்மயாநகரில் செயற்படுவதும் கண்டறியப்பட்டது.

குப்பை மேட்டுக்கு வரக்கூடிய காலாவதியான மருந்து மாத்திரைகளைக் குறைந்த விலைக்கு வாங்கி தரவாரியாக பிரிப்பார்கள். பின்னர் அவற்றை சின்மயா நகரில் செயற்பட்ட 'மீனா ஹெல்த்கேர்' என்ற நிறுவனத்திடம் விற்றுவிடுவார்கள்.

மீனாட்சி சுந்தரம் என்பவர் 'மீனா ஹெல்த்கேர்' நிறுவனத்தை நடத்தி வந்தார். காலாவதியான மருந்து மாத்திரைகள் இங்குதான் புத்தம்புது மருந்து மாத்திரைகள் போல பைக்கிங் செய்யப்படும்.

இதுபோன்ற காலாவதியான மருந்து, மாத்திரைகள் புதிய அவதாரமெடுத்து சென்னை உள்பட தமிழகம் முழுவதும் விற்கப்பட்டு வந்தது. மக்கள் உயிரோடு விளையாடிய இந்த மோசடி விளையாட்டு நான்கைந்து ஆண்டுகளாக அரங்கேறியுள்ளது.

காலாவதியான மருந்து விற்பனைக்கு மூளையாகச் செயற்பட்ட சுனிதா ராணி முதலில் கைது செய்யப்பட்டார். அவரது கணவர் ரவி என்ற பிரபாகரன் தப்பி ஓடி விட்டார். மீனா ஹெல்த்கேர் நிறுவனத்தின் உரிமையாளர் மீனாட்சி சுந்தரமும் பொலிஸாரிடம் சிக்கவில்லை. அவரிடம் வேலைபார்த்த ராமகிருஷ்ணன், கோவிந்தன், ஜெகதாம்பா, தர்மராஜன், விஜயகுமார், கிருபாகரன் ஆகியோரும் கைதானார்கள்.

# கும்மிடிப்பூண்டி அகதிகள் முகாமில் கியூ பிரிவுப் பொலிஸார் சோதனை

சென்னை, மார்ச் 23

தங்கள் பெயரைப் பதிவுசெய்யாமல் யாராவது தங்கி இருக்கிறார்களா என்று சென்னை கும்மிடிப்பூண்டி அகதிகள் முகாமில் கியூ பிரிவுப் பொலிஸார் திடீர் ஆய்வு செய்தனர்.

கும்மிடிப்பூண்டி தாலுகா அலுவலகம் அருகே இலங் கைத் தமிழ் அகதி கள் முகாம் உள் ளது. இங்கு 1067 குடும்பங்களைச் சேர்ந்த 3809 பேர் தங்கி உள்ளனர். முகாமில் சிலர் பெயர் பதிவு செய்யாமல் தங்கி இருக்கின்றனர் எனவும், பதிவு செய்த பலர் வெளியிடங்களில் தங்குகின்றனர் எனவும் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து மாவட்ட கியூ பிரிவுப் பொலிஸார் அகதிகள் முகாமில் சோதனை நடத்தினர். அங்குள்ள வீடுகளுக்குள் சென்று ஒவ்வொருவரிடமும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# உரிய ஆவணங்களின்றி திருச்சியில் தங்கியிருந்த 7 ஈழத் தமிழர் கைது!

திருச்சி, மார்ச் 23

உரிய ஆவணங்கள் ஏதும் இல்லாமல் திருச்சியில் தங்கியிருந்த இலங்கைத் தமிழர்கள் 7 பேரை மாநகர குற்றப் பிரிவு பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்தனர்.

திருச்சி கே.கே. நகர் பகுதி தென்றல் நகரில் உள்ள டாஸ்மாக் கடையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இருதரப்பினருக்கிடையே மோதல் ஏற்பட்டது. இது தொடர்பாக கே.கே. நகர் பொலிஸார் 7 பேரைப் பிடித்துசென்று விசாரித்தனர்.

விசாரணையில், அவர்கள், சென்னை ஆலபாக்கம் ஆர். ரசிகன் (வயது - 26), நீலாங்கரை என்.காந்தீபன் (வயது - 28), வி.சத்தியபாலன் (வயது - 26), வளசர வாக்கம் பி.பிரஷாந்த் (வயது - 24), பெசன்ட் நகர் கோபிமணாளன் (வயது - 33), என்.பிரசாந்த் (வயது - 29), தர்மபுரி மங்களரூபன் என்பது தெரியவந்தது.

மேலும், அவர் கள் திருச்சி உடை யான் பட்டியில் ஒரு வீட்டை வாடகை எடுத்து, தங்கியிருந்தமையும் தெரிந்தது. இவர்களுக்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த சிவக்குமார் என்பவர் வீடு எடுத்துகொடுத் தமையும் தெரியவந்தது.

இவர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும், இவர்களிடம் எந்தவித ஆவணங்களும் இல்லை என்பதும் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்தது.

விசாரணையில், அவர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் முன்னுக்குபின் முரணான தகவல்களைத் தெரிவித்தமையால், சந்தேகத்தின்பேரில் இலங்கைத் தமிழர்கள் 7 பேரையும் கைதுசெய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஒலியைவிட வேகமாகச் செல்லக்கூடிய பிரமோஸ் ஏவுகணை: சோதனை வெற்றி

புவனேஸ்வர், மார்ச் 23

ஒலியை விட அதிக வேகமாகச் செல்லக் கூடிய பிரமோஸ் நாசகர ஏவுகணை யின் சோதனை நேற்றுமுன்தினம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. 290 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இலக்கை தாக்கக் கூடிய இந்த ஏவுகணை, செங்குத்தான நிலையில் செலுத்தி பரிசோதிக்கப்பட்டது.

வங்கக் கடலில் நிறுத்தப்பட்டிருந்த கடற்படைக்குச் சொந்தமான ஐ.என்.எஸ். ரன்வீர் போர்க் கப்பலில் இருந்து காலை 11.30 மணி அளவில் இந்த ஏவுகணை செலுத்தி பரிசோதிக்கப்பட்டது. நிர்ணயிக் கப்பட்ட இலக்கான கடலில் நிறுத்தப்பட்டிருந்த, உபயோகத்தில் இல்லாத கப்பலை ஏவுகணை தாக்கியது. இதன் மூலம் சோதனை வெற்றிகரமாக நடைபெற்றது என பிரமோஸ் ஏரோஸ்பேஸ் பிரைவேட் லிமிடெட்டின் தலைமை நிர்வாக அதிகாரி சிவதாணுப்பிள்ளை கூறினார்.

இந்தியா - ரஷ்யா கூட்டுத் தயாரிப்பில் உருவாக்கப்பட்டு, பரிசோதிக்கப்படும் 22 ஆவது பிரமோஸ் ஏவுகணை சோதனை இது. ஒலியை விட அதிக வேகமாகச் செல்லக் கூடிய இந்த ஏவுகணையைப் புதிதாகப் பயன்படுத்தப்படும் போர்க் கப்பல் தல்வார் தேவைக்கு ஏற்ப செங்குத்தாகச் சென்று தாக்கும் சோதனையை திறம்பட செலுத்துவதில் தேர்ச்சி பெற்ற முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது.

பிரமோஸ் ஏவுகணைச் சோதனையை வெற்றிகரமாக நடத்தியதற்காக, விஞ்ஞானிகளுக்கு ஜனாதிபதி பிரதிபா பாட்டீல், பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோணி ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.


## யாழ். மாவட்ட தனியார்,பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ/து) விசேட கலந்துரையாடல்

| | |
|---|---|
| இடம் | :நாவலர் மண்டபம் |
| காலம் | :28.03.2010 ஞாயிற்றுக்கிழமை மு.ப.9.00மணி |
| தலைமை | :இ.அரிகரன் (தலைவர்,யா.மா.த.பா.உ.கூ.சங்கம்) |
| விருந்தினர் | :கௌரவ டக்ளஸ் தேவானந்தா (சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்) திரு.த.றஜீவ் (செயற்திட்ட இணைப்பாளர், மகேஸ்வரி நிதியம்) |
| விடயம் | மணல் சேவை தொடர்பான கலந்துரையாடல் |

**விசேட பொதுக்கூட்டம்**

| | |
|---|---|
| இடம் | :நாவலர் மண்டபம் |
| காலம் | :28.03.2010 ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00மணி |
| தலைமை | :இ.அரிகரன் (தலைவர்,யா.மா.த.பா.உ.கூ.சங்கம்) |
| பிரதம விருந்தினர் | :திரு.பொ.சிவலிங்கம் அவர்கள் (கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்) |
| சிறப்ப விருந்தினர் | :திரு.க.திசாகரன் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்) |

**நிகழ்ச்சிகள்**

1. இறைவணக்கம்
2. தலைமையுரை
3. விருந்தினர் உரை
4. சென்ற கூட்டறிக்கை வாசித்தல்
5. கணக்காய்வு அறிக்கை சமர்ப்பித்தல்
6. வரவு செலவுத் திட்டம் 2010ற்கான அங்கீகாரம் பெறல்
7. வெளிக்கடன் எல்லைக்கான அங்கீகாரம் பெறல்
8. புதிய பாரவூர்த்திகள் கொள்வனவு செய்தல் தொடர்பாக ஆராய்தல்
9. சேமம் மீளளிப்பு தொடர்பாக ஆராய்தல்
10. பணிப்பாளர் சபையினால் ஒத்துத்தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களான திரு.சுப்பிரமணியம் நாகேந்திரன் திரு.சின்னராசா நவரத்தினராசா ஆகிய இருவர் நியமனத்திற்கு அங்கீகாரம் பெறல்.
11. நன்றியுரை.

குறிப்பு: அனைத்து அங்கத்தவர்களும் தவறாது குறிப்பிட்ட நேரத்திற்கு சமுகம் தருமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி

க.இலங்கநாதன்
செயலாளர். (சி-56600)

யா.மா.த.பா.உ.கூட்டுறவச் சங்கம்
இருபாலைவீதி,கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்


## மாவோயிஸ்ட்டுகள் முழு அடைப்பு; 6 மாநிலங்களில் பாதுகாப்பு தீவிரம்

மேற்குவங்கம், மார்ச் 23

மேற்குவங்கம், பீகார், ஜார்கண்ட், சட்டீஸ்கர், ஒரிசா, ஆந்திர பிரதேஷ், மகாராஷ்டிரா ஆகிய 6 மாநிலங்களில் மாவோயிஸ்ட்டுகள் 2 நாட்கள் முழு அடைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளனர். இதனால் இந்த மாநிலங்களில் அசம்பாவிதங்களைத் தடுக்க பொலிஸ் பாதுகாப்பு பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

மத்திய பட்ஜெட் உலக வங்கியின் அறிவுரைக்கு ஏற்ப வடிவமைக்கப்பட் டுள்ளது என்றும் சாதாரண மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு வடிவமைக்கவில்லை என்றும் மாவோயிஸ்ட்டுகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மத்திய பட்ஜெட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த முழு அடைப்பு நடத்துவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ரயில்வே தண்டவாளங்களை மாவோயிஸ்ட்டுகள் தகர்க்கச் சதித் திட்டம் தீட்டியுள்ளனர் என வந்த எச்சரிக்கையை அடுத்து முழு அடைப்பு அறிவிக்கப்பட்டுள்ள மாநிலங்களில் இருக்கும் ரயில் நிலையங்களிலும் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.


## அன்புலன்ஸ் சாரதி வெற்றிடம்

St. John Ambulance Sri Lanka

சென்.ஜோன்ஸ் அன்புலன்ஸின் அன்புலன்ஸ் வாகனத்திற்கு சாரதி தேவை. விண்ணப்பதாரிகள் 'A' தர அனுமதிப்பத்திரம், ஐந்து வருடங்கள் அனுபவம் உடையவராக இருப்பதுடன், தற்பொழுது கொழும்பிற்கான அம்புலன்ஸ் சேவை நடைபெறுவதால் சிங்கள மொழியில் கதைக்கக்கூடிய ஆற்றல் உடையவராகவும் இருத்தல் வேண்டும். தகுதியுடையோர் எதிர்வரும் 28.03.2010 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ்.போதனா வைத்திய சாலையில் இயங்கும் சென்.ஜோன்ஸ் அன்புலன்ஸ் காரியாலயத்திற்கு உரிய ஆவணங்களுடன் வருகை தரவும்.

கொழும்பிற்கும் மற்றும்
அவசர அம்புலன்ஸ் சேவைக்குமான
தொ.பே தொடர்பு இலக்கம் - 0213214444,
பகல் - 021 222 3166, இரவு 0212225599

(95797)

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ்,
யாழ்.மாவட்டம்.



## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 07 ★ 12 ★ 1956



உதிர்வு 03 ★ 04 ★ 2009

திருமதி
**மகாலிங்கம் பவளராணி**

ஆண்டொன்று ஆனபோதும் ஆறவில்லை
அம்மா எம் துயரம், பாசத்தின்
உறைவிடமாய் இருந்த உங்களை எப்படி
அம்மா மறக்க முடியும்? உங்கள் நினைவுகள்
என்றென்றும் எம்மைவிட்டு அகலா.

கணேசபுரம்,
அளவெட்டி.
(95807)
பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை திருமதி யசோதா சண்முகரட்ணம் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி அன்னம் நடராஜா

அவர்கள் 21.03.2010 அன்று காலமாகிய செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
யாழ்.இந்து மகளிர் கல்லூரி. (95804)

## மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி



### அமரர் சட்டநாதர் சிதம்பரம் (காஞ்சனா)

ஜெனனம் 1935.09.18 மரணம் 2007.03.25

திதி: 23.03.2010
(பூர்வபக்க அட்டமி)

அன்பின் திருஉருவாய் பாசத்தின் ஒளி விளக்காய்
உழைப்பின் சிகரமாய் வாழ்ந்த எங்கள் அன்புத் தாயே!
அம்மாவே! ஆண்டுகள் மூன்று உருண்டு ஓடியதே தெரியவில்லை
அப்படி எத்தனை காலம் சென்றாலும் உங்கள் அன்பையும்
ஆதரவையும் மறக்கவே மாட்டோம்.
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

*நிரந்தர முகவரி:*
மறவன்புலோ, சாவகச்சேரி,
*தற்காலிக முகவரி:*
ஆறுமுகம் வீதி, கந்தரோடை, சுன்னாகம். (C/565984)

அன்புக் கணவர் சட்டநாதர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.


INFORMATICS INSTITUTE OF TECHNOLOGY

# VACANCIES AT IIT JAFFNA CAMPUS

IInformatics Institute of Technology (IIT) is the pioneer in introducing British University degrees in IT and Business to Sri Lanka and over 2000 have graduated since its inception. In addition IIT conducts its own Schools Technology Program in leading schools in Colombo and Kandy.

IIT has opened its fully equipped Jaffna Campus at St. Martins Centre, Kandy Road, with a view to impart these valuable educational programs to the students of Jaffna.

We need to fill the under mentioned positions urgently.

## BRANCH MANAGER

We are looking for a dynamic person to be in charge of all operations covering the Northern Province.

A graduate from a recognized university with over 5 years experience in marketing and office administration.

Preference will be given to those who have worked in a similar field.

## BUSINESS DEVELOPMENT MANAGER

The applicant will be required to popularize and promote the educational programs conducted at the Jaffna Campus among students, parents, schools and corporate sector.

A graduate or professionally qualified marketeer with over 3 years experience

Preference will be given to those who have worked in a similar field.

## LECTURERS

The selected candidates will be responsible to conduct our courses at the Centre as well as in schools in the Northern Province

Ideally you should have a degree in IT from a recognized establishment with over 3 years teaching experience OR an IT Diploma holder with 5 years experience in teaching.

The ideal candidate should have an excellent communication skills in English and Tamil.

***The Interview panel will be in Jaffna from Monday 22nd March to Saturday 27th March, 2010. Those who are qualified and interested may call the number below to walk in interview. OR email your CV to jaffna@iit.ac.lk***

**Tel: 0773 449 669/0777 360 161**


## ஜனாதிபதித் தேர்தல் கொடுப்பனவு இன்று

சுன்னாகம், மார்ச் 23

வலிகாமம் வலயத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கான ஜனாதிபதித் தேர்தல் கடமைக் கொடுப்பனவுகள் இன்று பிற்பகல் 2 மணிமுதல் 4.30 மணிவரை வலயக் கல்வி அலுவலகத்தில் வைத்து வழங்கப்படுமெனவும், இக் கொடுப்பனவைத் தவறாது பெற்றுக் கொள்ளுமாறும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (50-38)

## கொக்குவில் இந்துவில் அழகுக்கலை பயிற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்.கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெற்று வரும் அழகுக் கலைப் பயிற்சிக்கு மேலும் புதிய மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐசிங், தலை அலங்காரம், கைப்பணிப் பொருள்கள் உற்பத்தி, தையல் ஆகிய பயிற்சிகள் செல்வி பற்றிக்குயின்ராவினால் திங்கள், செவ்வாய், புதன், வியாழன் ஆகிய தினங்களில் பிற்பகல் 2.30மணிக்கு கல்லூரியில் பயிற்றுவிக்கப்படுகின்றன.

இந்தப் பயிற்சி நெறிகளில் கற்க ஆர்வமுள்ள மாணவர்கள் தமது சுயவிவரக் கோவையை கல்லூரி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு அதன் அதிபர் கேட்டுள்ளார். (ஒ-10)

## *மனிதவள முகாமைத்துவ சான்றிதழ் கற்கைநெறி*

யாழ்ப்பாணம், மார்ச் 23

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் ஐ.பி.எம் நிறுவனத்தினர் நடத்தவுள்ள மனிதவள முகாமைத்துவம் தொடர்பிலான சான்றிதழ் கற்கைநெறிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கற்கைநெறி விரைவில் ஆரம்பமாக உள்ளதால் மாணவர்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமைக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை யாழ்.பிராந்திய நிலையத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று இணைப்பாளர் அறிவித்துள்ளார்.


### நுணுக்கமான ஆங்கிலப் புத்தகம்

யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக தரம் 6-9 வரையான மாணவர்களுக்காக அடிப்படை அறிவை உட்புகுத்தி வித்தியாசமான யுக்தி மூலம் ஆங்கிலத்தைக் கற்பதற்கு ஏற்ற வகையில் நுணுக்கமாக எழுதப்பட்ட "THE BABY ENGLISH GRAMMAR" புத்தகம் விற்பனையாகின்றது.

ஸ்ரீ முருகன் பார்மசி, கல்வியங்காடு.
தொ.பே.இல 0772299931, 0779907190 (95832)

### விற்பனைக்குண்டு

சாவகச்சேரியில் அமைந்துள்ள சிறந்த நிலையிலுள்ள கல் உடைக்கும் ஆலை (கிறேஷர்) விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0778118036, 0779213881 (95815)

### தேவை

மில் வேலை, மா வறுப்பதற்கு பெண் உதவியாளர், மோட்டார் சைக்கிள் மெக்கானிக்+சேவிஸ், டயர் வேக்ஸ் என்பவற்றில் அனுபவம் உள்ளவரும் உதவியாளரும் தேவை.

தொடர்பு: S.பிறேம், தொ.பே.0772251096 (95830)

### வேலையாள்கள் தேவை

கணக்காளர், பில்கிளார்க், சாரதி-கன்ரர் ஓடக்கூடியவர்.
அனுபவமும் திறமையும் மாநகர எல்லைக்குள் உள்ளவர்கள் மட்டும்.
நேரில் வரவும்.

பேப்பர் கவுஸ், யாழ்ப்பாணம். (இ/566006)

### தவறிவிட்டது

சீனிவாசகம் ரிஷிகேசன், கைதடி, நாவற்குளி தெற்கு, கைதடி என்னும் விலாசமிடப்பட்ட சாரதி அனுமதிப் பத்திர ஆவணங்கள் கோயிலாக்கண்டித்துறைக்கும் யாழ்.பஸ் நிலையத்திற்குமிடையில் பஸ்ஸில் (CTB) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் அல்லது 0774447643 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (95813)

### காணி விற்பனைக்கு

யாழ்.நகருக்கு சுமார் 6Km தூரத்திலும், நல்லூர் கோயிலுக்கு அண்மையிலும் கல்வியங்காடு, 3ஆம் [illegible] விற்பனைக்குண்டு. விரும்பினால் இரண்டாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

உடன் தொடர்பு கொள்ளவும்: 0776081693, 0772469015 (95816)


## தவத்திரு வே.முருகேசு சுவாமிகள் அவர்களின் 13ஆம் ஆண்டு குருபூசைத் தினம்



இடம்: சந்நிதியான் ஆச்சிரமம்
காலம்: நாளை (24.03.2010) புதன்கிழமை
சிறப்பு இசைச் சொற்பொழிவு:
"குருவாய் அருள்வான்"
(பக்கவாத்திய சகிதம்)
வழங்குபவர்:
கவிமணி க.ஆனந்தராசா அவர்கள் (அன்னைதாசன், இளைப்பாறிய அதிபர்)

மேற்படி குருபூசை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் விஷேட அபிஷேக பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறும் சிறப்பு நிகழ்வுகளுடனும் அறுபத்து மூவர் குருபூசையுடனும் நிறைவுபெறும்.

சுவாமி அவர்களின் அன்பர்கள், அடியார்கள் குருபூசைத் தினத்தில் பங்குபற்றி குருவருளையும் திருவருளையும் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

சுபம் சாந்தி

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

நவத்திரு.வே.முருகேசு சுவாமிகளின் அடியார்கள் சார்பில் ஆ.அருணாசலம். (இ/565965)


### புளோக்கல்லு விற்பனைக்குண்டு

தரமான 4"x6" 12 புளோக் கற்கள் விற்பனைக்குண்டு.
கருங்கல்லு சல்லி போட்டது - 43/=
6:1 என்ற விகிதத்தில் மண் கலவை சேர்க்கப்பட்டது 35/=
மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
வேலைத்தளத்தில் கொண்டு வந்து தரப்படும்.
நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

தொடர்புகளுக்கு: தொ.பே.இல 0776341389.
சி.சிவகுமார், பழைய றோட், ஆறிகால்மடம், ஆனைக்கோட்டை. (95814)


## மரண அறிவித்தல்கள்

### *வேலுப்பிள்ளை செல்வநாயகம்*

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)



தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், மூளாய் வீதி, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்வநாயகம் நேற்று (22.03.2010) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-தெய்வானை தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-வள்ளியம்மை தம்பதியினரின் மருமகனும், மகேஸ்வரியின் (மைச்சு), அன்புக் கணவரும், கம்சலா (இந்தியா), சுகிர்தலா (வவுனியா), செல்வக்குமார் (கனடா), வக்சலா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பரமநாதன், துரைராஜா, சித்திராதேவி, சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், செந்தூரன், குகறூபி, சர்மிளா, சிவஜங்கரன், சாரங்கன், கன்னிகா, சுரேந்திரன், சுபோதினி ஆகியோரின் அன்புப் பேரனும், சுவேதாவின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மூளாய் வீதியில் உள்ள உடுக்கியவளை வீதியில் இருக்கும் அவரின் இல்லத்தில் இன்று (23.03.2010) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உடுக்கியவளை வீதி,
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை. (95819)

தகவல்:
மகேஸ்வரி(மைச்சு).
(மனைவி).

### *ஐயாத்துரை சண்முகநாதன்*

(பொருளாளர், கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம்)



கொக்குவில் மேற்கைப் வசிப்பிடமாகவும், பிறப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சண்முகநாதன் நேற்று (22.03.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-சின்னத்தங்கச்சி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, பத்மநாதன், நல்லம்மா மற்றும் மனோன்மணியின் அன்புச் சகோதரனும், அமரர் இராசரத்தினம் மற்றும் சத்தியேஸ்வரி, பொன்னம்பலம், ஸ்ரீபதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2010) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

C.C.T.M பாடசாலை அருகில்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (95812)

தகவல்:
செல்வி பிறிம்றோஸ் குணரட்ணம்,
திரு. இ. ஸ்ரீகாந்தன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி நீதிமன்ற வளாக கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள். பாண்ட்வாத்திய சகிதம் விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்துவரப்படுவதை முத லாவது படத்திலும் பிரதம நீதியரசர் அசோக டீசில்வாவுடன் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா மற்றும் மதத்தலைவர்கள் அமர்ந் திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். மூன் றாவது படத்தில் பிரதம நீதியரசர் கட்டடத் தொகு திக்கான அடிக்கல்லை நடுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மக்களில் ஒரு சாராரையும் இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: தென்னவன்)

# அனோமா பொன்சேகாவை புலனாய்வுப் பொலிஸார் 8 மணி நேரமாக அதிகாலைவரை விசாரணை செய்தனர்

கொழும்பு, மார்ச் 23

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகாவை ஞாயிற்றுக்கிழமை மாலை நான்கு மணி முதல் திங்கட் கிழமை அதிகாலை 2.00 மணி வரை குற் றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணை செய்துள்ளதுடன் அவரது வாக்குமூலத் தையும் பதிவுசெய்தனர் என ஜனநாயக தேசிய முன்னணிவட்டாரங்கள் தெரிவித் துள்ளன.

இது தொடர்பாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முதலில் ஞாயிற்றுக்கிழமை மாலை நான்கு மணி முதல் ஏழு மணிவரை அனோமா பொன் சேகாவை விசாரணை செய்தனர்.

பின்னர் கடற்படையினருக்கான விடுதி யில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது கணவருக்கு உணவு எடுத்துச் செல்வதற் கான அனுமதியை அனோமா கோரினார்.

தமது கணவரையும், அவரது நலனை யும் கவனிப்பதற்குத் தனக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டிருப்பதை அவர் சுட் டிக்காட்டினார்.

இதற்கு இணங்கிய குற்றப்புலனாய்வு அதிகாரிகள், இரவு ஒன்பது மணிக்குத் தாம் மீண்டும் வருவர் எனக் கூறிச் சென்றனர்.

இதன்படி மீண்டும் விசாரணைக்காகத் திரும்பி வந்த அதிகாரிகள், ஐந்து மணித் தியாலங்களுக்கு மேலாக அனோமா பொன்சேகாவை விசாரித்தனர். அதி காலை2மணிவரைவிசாரணைநடைபெற்றது.

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் பல விடயங்கள் தொடர்பாக அனோமா பொன் சேகாவை விசாரணை செய்து வாக்கு மூலத்தைப் பதிவுசெய்தனர்-

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்துக்கான நிதி சம்பந்தமாகவும் இந்த நிதி பெறப் பட்ட வழிமுறைகள் தொடர்பாகவும் தேர்தலுக்காகக் கொள்வனவு செய்யப் பட்ட உபகரணங்கள் போன்றவை தொடர் பாகவும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அனோமாவிடம் விசாரணை செய்தனர்-

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சில ஆவணங்களை அனோமா பொன்சேகா விடம் காண்பித்து அது தொடர்பான விவரங்களையும் கோரினர்-

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜன நாயகத் தேசிய முன்னணியின் கீழ் போட் டியிடும் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி கள் குறித்தும் குற்றப்புலனாய்வுப் பிரி வினர் அனோமா பொன்சேகாவிடம் விசாரித்தனர் என ஜனநாயகத் தேசிய முன்னணி வட்டாரங் கள் தெரிவித்தன.



அனோமா பொன் சேகாவையும் ஜனநாய கத் தேசிய முன்னணி சார்பில் போட்டியிடும் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளையும் அச்சுறுத்தித் தேர்தல் பிரசாரத்தைக் குழப்ப அரசு முயல்வதாக ஜனநாயகத் தேசிய முன் னணியால் குற்றம்சாட்டப்பட் டுள்ளது. (அ-சி)

## 'ஞானச்சுடர்' வெளியீடு

வடமராட்சி, மார்ச் 23

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச் சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை யின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆன்மிக சஞ்சிகையான பங்குனிமாத இதழ் வெளியீட்டு விழா எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண் டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-236)

## கோண்டாவில் சம்பவம்

03.02.2010 ஆம் திகதிய உதயனில் 'கோண்டாவில் பகுதியில் அடாவடித் தனம்' என்னும் தலைப்பிலான செய்தி யில் குறித்த சம்பவம் கோண்டாவில் பகுதியில் நடைபெற்ற போதும், செய்தி யில் தவறுதலாக வாகீஸ்வரி வீதியில் அச் சம்பவம் நடை பெற்றதாக பிரசுரமாகிவிட் டது. தவறுக்கு வருந்துகின்றோம். (ஆ-ர்)

# புத்திசாதூரியமுள்ள பொதுமக்கள் தமக்கே ஆதரவளிக்கின்றனராம்

## மாத்தளையில் ஜனாதிபதி தெரிவிப்பு

மாத்தளை, மார்ச் 23

புத்தி சாதூரியமான பெரும்பான்மை மக்கள் தமக்கு ஆதரவளிக்கின்றனர் என ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங் கரவாத நடவடிக்கைகளின் காரணமாக வடக்கு, கிழக்கு பிளவடைந்து காணப் பட்டது எனவும், தமது ஆட்சிக் காலத்தில் நாட்டை ஐக்கியப்படுத்த முடிந்தது என வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாத்தளையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் கூறினார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு ஆதரவளித்த சகல மாத்தளை மாவட்ட மக்களுக்கும் மனப்பூர்வமான நன்றி களைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.



நாட்டின் அபி விருத்தி நடவடிக்கை களை ஸ்தம்பிதபடுத் தவே எதிர்க்கட்சியினர் கூடுதல் முனைப்புக் காட்டி வருகின்றனர் எனக்குறிப்பிட்ட அவர்-

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கை கள் குறித்து பொதுமக்களுக்குப் போதி யளவு தெளிவு காணப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

ஐந்து துறைமுகங்களை அபிவிருத்தி செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளன எனவும், குறித்த அபிவிருத்திப் பணிகளின் மூலம் பெருமளவு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியும் என வும் அவர் அங்கு நம்பிக்கை வெளி யிட்டார். (அ-சி)



ஜே.வி.பி. தனது கட்சியின் அலுவலகம் ஒன்றை உடுப்பிட்டியில் நேற்றுமுன் தினம் திறந்து வைத்தது. கட்சியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க நாடாவை வெட்டி அலுவலகத்தைத் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

# தேர்தலுக்குப் பின் பொருள்களின் விலை அதிகரிக்கும் என்கிறது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, மார்ச் 23

ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின் பொருள்களின் விலைகள் பல மடங்கு அதிகரிக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சி யின் எம்.பியும் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக்க நேற்றுக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவல கத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரை யாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

பொருளாதாரத்தை நிர்வகிக்கக்கூடிய திறமை இந்த அரசுக்குக் கிடையாது. யுத் தம் முடிந்த பின்னரும் பொருள்களின் விலைகள் குறைக்கப்படவில்லை. பதி லுக்கு அவை மேலும் மேலும் அதிகரிக் கப்படுகின்றன.

இந்த நிலைமை ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதிக்குப் பின்னர், அதாவது நாடாளு மன்றத் தேர்தலின் பின்னர் மேலும் மோச மடையும். அதற்கான ஏற்பாடுகளை அரசு செய்துகொண்டு வருகின்றது.

இந்தத் தேர்தலில் அரசுக்கு மக்கள் வாக்களிப்பது மிக முட்டாள்தனம். அது எமக்கு நாமே ஆபத்தை ஏற்படுத்திக் கொள்வதாக அமையும். ஆகவே, மக்கள் இத்தேர்தலில் மிகவும் நிதானமாகச் சிந் தித்து வாக்களிக்கவேண்டும். - என்றார். (சி)

# தெல்லிப்பழைச் சோதனைச்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதம நீதியரசர் அசோக டி சில்வா, நீதி யரசர்களான பாலபட்டபெண்டி, கே. ஸ்ரீபவன், எஸ். அமரதுங்க ஆகியோர் அடங்கிய குழு வினர் நேற்று வலி. வடக்குப் பகுதியில் உள்ள உயர்பாதுகாப்பு வலயத்துக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந் தனர். இவர்களுடன் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி. விக்னராஜாவும் சென்றிருந்தார்.

உயர்பாதுகாப்பு வலயத்தில் நிலை மைகளை பார்வையிட்ட பின்னர் பிரதம நீதியரசர் அசோக டி சில்வா, மேல் நீதி மன்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜாவிடம் அதனைப் பின்நகர்த்துமாறு இராணுவத் தளபதிக்கு அறிவுறுத்தப் போவதாக உறுதி வழங்கினார்.

தாம் கொழும்பு திரும்பியதும் இராணு வத் தளபதியைச் சந்தித்து தெல்லிப்பழைச் சோதனைச் சாவடியைபின் நகர்த்துவதற் கான பணிப்புரையை விடுக்கவுள்ளதாக பிரதம நீதியரர் மேல் நீதிமன்ற நீதிபதி யிடம் உறுதியளித்தார்.

நேற்றுக்காலை வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்கு விஜயம் செய்த பிரதம நீதியரசர் அடங்கிய குழு வினர் கீரிமலை நகுலேஸ்வரம், மாவிட்ட புரம் கந்தசுவாமி கோயில், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, மகாஜனக் கல்லூரி, தெல்லிப் பழை ஆதார வைத்தியசாலை, மாதகல் சங்கமித்தை விகாரை ஆகியவற் றுக்கு நேரடியாக விஜயம் செய்து நிலை மைகளை பார்வையிட்டனர்.

அதன் பின்னர் யாழ். நீதிமன்ற நீதிபதி யிடம் பேசிய பிரதம நீதியரசர் தெல்லிப் பழை சோதனைச் சாவடியை பின் நகர்த் தும் பணிப்புரையை தான் கொழும்பு திரும்பியதும் இராணுவத் தளபதியைச் சந்தித்து வழங்க உள்ளேன். உயர்பாது காப்பு வலயப் பகுதியில் உள்ள பாட சாலைகள், வழிபாட்டுத் தலங்கள், வைத் தியசாலைகள் ஆகியவற்றுக்கு பொது மக்கள் தடங்கல் இன்றி சென்றுவருவதற் காக இந்த நடவடிக்கையை நான் மேற் கொள்ளவுள்ளேன் -என்றார்.

இந்தப் பணிப்புரையை நடைமுறைப் படுத்துவதற்கு வசதியாக உயர்நீதிமன்றத் தினால் நியமிக்கப்பட்ட உயர்பாதுகாப்பு வலயத்தில் மீளக்குடியமர்வு தொடர்பான குழுவின் தலைவரான மேல் நீதிமன்ற நீதி பதி ஆர்.ரி. விக்னராஜா, உறுப்பினர்களான யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி, வட பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர், வடபிராந்திய கடற்படைத் தளபதி ஆகி யோரைக்கூடிக் கலந்துரையாடுமாறும் பிரதம நீதியரசர் கூறிச்சென்றுள்ளார்.

இதே வேளை -

நேற்றுமுன்தினம் காலை நல்லூர் ஆலயத்துக்குச் சென்ற பிரதம நீதியரசர் விசேட பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டார். பின்னர் மாலை யாழ்.ஆயர் இல்லத்தில் ஆயர் மேதகு தோமஸ் சவுந் திரநாயகம் ஆண்டகையைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

**யாழ். நீதிமன்றங்களில் தமிழில் பரீட் சயம் உள்ள பொலிஸார் நியமிக்கப்படுவர்**

அப்போது கருத்துத் தெரிவித்த பிரதம நீதியரசர் யாழ்.குடாநாட்டில் உள்ள நீதி மன்றங்களில் தமிழில் பரீட்சயம் உள்ள பொலிஸாரை நியமிப்பதற்கு பொலிஸ்மா அதிபருடன் பேசுவதாகவும் யாழ்ப்பாணத் தில் அனைத்து பொலிஸ் நிலையங்களி லும் தமிழில் முறைப் பாடுகளைப் பதிவு செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் தெரி வித்தார். (அ-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



## நாங்கள் நலத்துடன் இருப்பதாக பிரபா, பொட்டு அம்மான் கடிதங்கள்?

சென்னை, மார்ச் 23

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் உளவுப் பிரிவுப் பொறுப்பாளர் பொட்டு அம்மானும் உயிருடன் இருப்பதாக கடிதம் மூலம் செய்தி கிடைத்திருப்பதாக 'மாலை மலர்' நாளிதழ் நேற்றுத் தகவல் வெளியிட்டிருக்கிறது.

நாங்கள் நல்ல உடல் நலத்துடன் பத்திரமாக இருக்கிறோம் - என்று பிரபாகரனும் பொட்டுஅம்மானும் உலகின் பல நாடுகளிலும் வசிக்கும் தமது தீவிர ஆதரவாளர் களுக்கு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர் என்றும் -

தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு நெருக்கமான ஐந்து அரசியல் பிரமுகர்களுக்கு இந்தக் கடிதங்கள் கிடைத்துள்ளதாகவும் - 'மாலை மல'ரில் பிரசுரமான கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட் டிருக்கிறது. (அ)

### ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

வேட்பாளர்கள் உரையாற்ற முனைந்த போது குறித்த கும்பல் கூக்குரல் இட்டு கூட்டத்தைக் குழப்ப முயற்சித்தது என் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

### தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் சட்டங்களை மீறியதற்காக 79 சந்தேகநபர்களை இதுவரை கைதுசெய்துள்ளனர் என அவர் தெரிவித்தார்.

இவ்வாறான சம்பவங்களைத் தவிர்க்குமாறும், தேர்தல் சட்டங்களை மீறவேண்டாம் என ஆதரவாளர்களுக்கு ஆலோசனை வழங்குமாறும் கட்சிகளைக் கோரியுள்ளோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

### தபால்மூல.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடளாவிய ரீதியில் சுமார் 8 ஆயிரத் துக்கும் மேற்பட்ட அரச நிறுவனங்களில் தபால்மூல வாக்களிப்பு நடைபெறவுள்ளது.

இம்முறை 4 இலட்சத்து 15 ஆயிரத்து 430 பேர் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இந்நிலையில் முன்னைய தேர்தல்களின் போது வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற மத்திய நிலையங்கள் மற்றும் அரசியல் நெருக்கடி காணப்படக்கூடிய இடங்களில் விசேட பிரதிநிதிகளை நேரில் அனுப்பவும், நடமாடும் கண்காணிப்புச் சேவையை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என சுயாதீன தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்கள் கூறின.

தெரிவுசெய்யப்பட்ட இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளைகள், பொலிஸ் நிலையங்கள், கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் அலுவலகங்கள், உள்ளூராட்சி சபை நிறுவனங்கள் ஆகியவற்றில் தபால் மூல வாக்களிப்பைக் கண்காணிப்பதற்காக ஆயிரம் பேர் நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும் ஏனையோர் வேறு நிலையங்களில் ஈடுபடுத்தப்படுவர். எனவும் 'பவ்ரல்' அமைப்பின் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

### சிரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலையமைப்பு, சக்தி தொலைக்காட்சியின் சகோதர நிறுவனமாகும்.

இதனையடுத்து தற்பாதுகாப்பு கருதி அலுவலக ஊழியர்கள் அக்கற்களை மீண்டும் குண்டர்களை நோக்கி வீசினர் என்றும் -

குண்டர்களால் வீசப்பட்ட கற்களால் அலுவலகக் கண்ணாடிகள் சொத்துகளுடன் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களும் சேதமடைந்தன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் குண்டர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டு அவர்களைக் கலைத்ததுடன் சுமார் 16 பேரைக் கைது செய்தனர். தாக்குதலை மேற்கொண்டவர்கள் தாங்கள் மேர்வின் சில்வாவின் ஆதரவாளர்கள் எனத் தெரிவித்தனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.(அ-சி)

# அரச சொத்து துஷ்பிரயோகம் குறித்து இதுவரையில் 110 முறைப்பாடுகள்

## ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர் நஷனல் அமைப்புத் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 23

தேர்தல் காலத்தில் அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படும் சம்பவங்கள் குறித்து அதிகளவு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர் நஷனல் அமைப்பு அறிவித்துள்ளது.

தேர்தல் காலத்தில் அரச சொத்துகள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றமை குறித்து கண்காணிப்பதற்கென இந்த அமைப்பு பொதுசொத்துக்களைப் பாதுகாக்கும் விசேட செயற்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளதுஎனவும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுத் தேர்தலில் போட்டியிடும் ஒரு சில வேட்பாளர்களும், அவர்களது ஆதரவாளர்களும் இவ்வாறு பொதுச் சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்து வருகின்றனர் என முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும், இதுவரையில் அரச சொத்து துஷ்பிரயோகம் தொடர்பில் சுமார் 110 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற் றுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரச வாகனங்களைப் பயன்படுத்தல், ஊழியர்களை தேர்தல் பிரசாரப் பணிகளில் ஈடுபடுத்தல், அனுமதியின்றி கட்டடங்களைப் பயன்படுத்தல் மற்றும் சட்ட விரோதமான முறையில் மின்சாரத்தைப் பயன்படுத்தல் போன்ற நடவடிக்கைகளில் சில வேட்பாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

### தமிழ்த் தேசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் அமைந்துள்ள மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான டலஸ் அழகப்பெரும இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது சரத் பொன்சேகாவை ஆதரிப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய பிரதான கட்சிகள் பொன்சேகாவுடன் இணைந்து செயற்பட்டன.

பொன்சேகாவை ஆதரிப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொன்சேகாவுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்தது. இதை நாம் அப்போது மக்களுக்குத் தெளிவுபடுத்தினோம். ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பியும் அவ்வாறு ஒப்பந்தம் எதுவுமில்லை என்று அப்போது கூறின.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதுவும் பேசாது மௌனமாக இருந்தது.

இப்போது நாடாளுமன்றத் தேர்தலையொட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்றை வெளியிட்டுள்ளது. நான் ஜனாதிபதித் தேர்தலின்போது சுமத்திய குற்றச்சாட்டை இத் தேர்தல் விஞ்ஞாபனம் நியாயப்படுத்தியுள்ளது.

வடக்கு, கிழக்கு மீள் இணைப்பு உள்ளிட்ட பல விடயங்கள் அந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளன. இந்த விடயங்களே பொன்சேகாவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திலும் உள்ளன. ஐக் கிய தேசியக் கட்சியோ அல்லது ஜே.வி.பியோ வாய் திறக்கவில்லை. தேசிய ஒற் றுமையைக் கட்டியெழுப்புவதற்கு முயற் சிகள் மேற்கொள்ளப்படும் இச்சந்தர்ப்பத் தில் இத்தேர்தல் விஞ்ஞாபனம் தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்ப ஒருபோதும் பலம் சேர்க்காது. தேசிய ஒற்றுமைக்கு இந்த விஞ்ஞாபனம் ஆபத்தாகவே அமை யும். - என்றார். (அ-சி)

அன்னை புத்தகசாலை கிளை நிறுவன திறப்பு விழா

அன்னை புத்தகசாலையின் தென்மராட்சி வாடிக்கையாளர்கள் நலன்கருதி இல 23, தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரியில் (பழைய ஆசீர்வாதம் புத்தகசாலை கட்டடத்தில்)

அன்னை புத்தகசாலை

என்னும் கிளை நிறுவனம் கௌரவ இ.கைலைநாதன் (ஓய்வு பெற்ற அதிபர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி) அவர்களால் நேற்று (22.03.2010) திங்கட்கிழமை மங்களகரமாக திறந்து வைத்து நடத்தப்படுகின்றது. எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவரும் எமது யாழ்.நிறுவனத்தில் பெற்றுக்கொள்வது போல் சகல புத்தகங்களும், காகிதாதிகளும், பாடசாலை உபகரணங்களும் அதே விலையில் சாவகச்சேரி கிளை நிலையத்திலும் பெற்றுக்கொள்ளலாம் என்பதனை மிகுந்த மனமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி/565983)

அன்னை புத்தகசாலை

23, தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி. உரிமையாளர்: செ.விஜிதராசா

நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்

தபால் மூல வாக்களிப்பு 08.04.2010

அன்புள்ள வாக்காளப் பெருமக்களே!

இவ்வார இறுதியில் மேற்படி வாக்களிப்பு நடைபெறவுள்ளது. கடமை உணர்வுடன் விண்ணப்பித்து உங்கள் வாக்குரிமையை வீணாக விடாது தகுதியான ஒருவரை தேர்ந்தெடுக்கும் உங்கள் முயற்சியினை பாராட்டுகின்றேன். நாடாளுமன்றப் பதவி ஓர் அலங்காரப் பதவியென சிலர் நினைக்கின்றார்கள். அப்பதவி மக்களுக்கு விடிவை ஏற்படுத்த உதவவேண்டுமென நான் நினைக்கின்றேன். நான் நினைப்பது சரியென்றால் தந்தை செல்வா, சட்ட மேதை அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம், தளபதி அமிர்தலிங்கம், உடுப்பிட்டி சிங்கம் சிவசிதம்பரம் ஆகிய பெருந்தகைகள் ஒன்று சேர்ந்து உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமான உதயசூரிய னுக்கு வாக்களித்து எமது அணியினரை வெற்றிபெற வைத்து மீண்டும் எம்மினத்தை தலைநிமிரச் செய்யுங்கள் உங்கள் ஒவ்வொருவரையும் தனித் தனியே சந்தித்து உரையாட முடியா மைக்கு வருந்துகின்றேன்.



X 1

வீ.ஆனந்தசங்கரி
தமிழர் விடுதலைக்கூட்டணி
(தலைவர்)

தமிழ் தேசியக் கூட்டமைப்பு

பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2010

யாழ்மாவட்டம்

X

இலங்கைத் தமிழரசுக் கட்சி





7

கந்தையா
அருந்தவபாலன்
அதிபர், யா/டிறிபேக்கல்லூரி,
சாவகச்சேரி

10

சிவஞானம்
சிறீதரன்
அதிபர், கிளி/கிளிநொச்சி
மகாவித்தியாலயம்

அஞ்சல் வாக்களிக்கவுள்ள எமது அன்பான தமிழ் உறவுகளே!
உங்கள் வாக்குகள்
தமிழரின் வலுவைக் கூட்டட்டும்
உரிமைக்குரலுக்கு வலுச் சேர்க்கட்டும்
அரசியல் தீர்வுக்கு வழியமைக்கட்டும்
அழிவுகளிலிருந்து மீண்டெழ அனுசரணையாகட்டும்

மண்பற்றுள்ள கல்வியியலாளர்களுக்கு வாக்களியுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.